# பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி

### முதன்மை பயிற்சியாளர்களுக்கான பயிற்சி

## கருத்தாதார கையேடு


**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

மற்றும்

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

# பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி

## உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு |
|---|---|
| 1. | மனித உரிமைகளைப் புரிந்து கொள்வோம் |
| 2. | அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948 |
| 3. | இந்திய அரசியலமைப்புச் சட்டம் |
| 4. | ஐ.நாவின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கை-1989 |
| 5. | பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை-(CEDAW) |
| 6. | பாகுபாடு |
| 7. | பெண்களும் சமத்துவமும் |
| 8. | குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் |
| 9. | குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009 |
| 10. | பாலியல் வன்முறைகளிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்-2012 |
| 11. | பெண்ணுடல் மீதான வன்முறை |
| 12. | பெண்களுக்கெதிரான வன்முறைகள்-புரிதல் |
| 13. | தேசிய, மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் |
| 14. | தேசிய, மாநில மகளிர் ஆணையங்கள் |
| 15. | வெளியில் தங்கி பணிபுரியும் மற்றும் படிக்கும் மகளிரின் பாதுகாப்பிற்காக தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் |
| 16. | கண்களைத் தாண்டி-மாணவர்களுக்கான ஊடகக் கல்வியும் விழிப்புணர்வும் |
| 17. | இலவச சட்டப் பணிகள் ஆணைக் குழு |
| 18. | குற்றவியல் (திருத்தச்) சட்டம்-2013 (நிர்பயா சட்டம்) |
| 19. | THE CRIMINAL LAW (AMENDMENT) ACT-2013 |
| 20. | பணியிடங்களில் பாலியல் வன்முறைக்கு (தடை செய்தல், தடுத்தல் மற்றும் குறைதீர்த்தல்) எதிரான சட்டம்-2013 |
| 21. | THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT, 2015 |
| 22. | SC/ST (Prevention of Atrocities) Amendments Act-2015 |
| 23. | THE CHILD LABOUR (PROHIBITION AND REGULATION) AMENDMENT ACT, 2016 |

# மனித உரிமைகளைப் புரிந்து கொள்வோம்

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளை நாம் மனித உரிமைகள் என்று அழைக்கிறோம். சாதி,மதம்,பால்,இனம்,நாட்டுரிமை ஆகியவற்றிற்கு அப்பால், ஒவ்வொரு தனி மனிதருக்கும் பொதிந்திருக்கக் கூடிய பிறப்புரிமைகளை, மனிதனின் சுதந்திரத்திற்கும்,கண்ணியத்திற்கும்,நலன்களுக்கும் அவசியமான உரிமைகளை,மனித உரிமைகள் என்று நாம் அழைக்கிறோம்.

மனிதர்களுக்கு மனித உரிமைகள் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவதால் சில நேரங்களில் மனித உரிமைகளை அடிப்படை உரிமைகள் என்றும், இயற்கை உரிமைகள் என்றும், பிறப்புரிமைகள் என்றும், உள்ளார்ந்த உரிமைகள் என்றும் நாம் அழைக்கிறோம். ஒவ்வொரு நாட்டிலும் அதற்கேற்ற, உரியச் சட்டமியற்றும் வழிமுறைக்கு ஏற்ப இந்த மனித உரிமைகள் சட்ட வடிவம் பெறுகின்றது.டி.கே.பாசு அவர்கள் மனித உரிமைகளை வரையறுக்கும் பொழுது "எவ்வித மறுபயனுமின்றி மனிதனாகப் பிறந்த காரணத்தினாலேயே அரசிற்கு எதிராக ஒவ்வொரு தனிநபருக்கும் இருக்கக்கூடிய குறைந்தபட்ச உரிமைகளே மனிதஉரிமைகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த உலக மாநாட்டின் பிரகடனத்தில் <u>"மனிதனின் மதிப்பிலிருந்தும், கண்ணியத்திலிருந்தும் விளைவதே மனித உரிமைகள்"</u> என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல, அது போல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதுமல்ல.எனவே தான் மனித உரிமைகள் எவராலும் பறிக்கப்படமுடியாத உரிமைகள் என அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. மனிதனாகப் பிறந்த காரணத்தினால், ஒருவனுக்கு இயற்கையிலேயே உடன் பிறந்த உரிமைகள் மனிதஉரிமைகள். இந்த உரிமைகள் எந்த ஒரு சமுதாயத்தினாலோ, அரசினாலோ அல்லது அரசியல் அதிகார அமைப்புகளினாலோ உருவாக்கப்பட்டதல்ல. அதனால்தான் எந்த ஒரு அரசிற்கும்,அதிகார அமைப்பிற்கும் மனித உரிமைகளை மீறுவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்தமட்டில் "மனித உரிமைகள்" என்றபதத்திற்கான வரையறை 1993 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2(d)ல் கொடுக்கப்பட்டுள்ளது.அப்பிரிவின்படி
மனித உரிமைகள் என்பது,

> <u>*"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினால் உறுதிசெய்யப்பட்ட அல்லது இந்திய நீதிமன்றங்களால் அமல்படுத்தக்கூடிய பன்னாட்டு உடன்படிக்கையில் உள்ளடங்கிய வாழ்வு, சுதந்திரம், சமத்துவம், தனிநபர் மாண்பு பற்றிய உரிமைகளைக் குறிக்கும்."*</u>

## நமது உரிமைகள்:

மனித உரிமைகள் பொதுவாகப் பிரிக்கப்பட முடியாதவை. மேலும்,அவை ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பவை. அதனால் பல்வேறு வகையான மனித உரிமைகள் இருப்பதற்குச் சாத்தியமில்லை. முக்கியத்துவத்தின் அடிப்படையிலும், அனைத்து மனித உரிமைகளும் சமமான முக்கியத்துவத்தினைப் பெறுகிறது.அதனால்தான் அய்க்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபையால்

பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் எவ்விதமான வகைப்பாடுகளும் காணப்படவில்லை.ஆனால் அதற்குப் பின்னர் ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் மனித உரிமைகளை ஐந்து வகைகளாகப் பிரித்தது.

அவை :

1) குடிமையியல் உரிமைகள்;
2) அரசியல் உரிமைகள்;
3) பொருளாதார உரிமைகள்;
4) சமூக உரிமைகள்;
5) கலாச்சார உரிமைகள்.

## தனி மனிதருக்கு உரிய உரிமைகள்

மனித உரிமைகள் குறித்து அகில உலக உடன்படிக்கைகள் ஒப்பந்தங்களில் தனிநபருக்கும், குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பல்வேறு உரிமைகளை இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் கீழே சொல்லப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தும் நமக்கு உள்ளனவா என்ற கேள்வி நமக்குள் எழுகின்றது. என்னென்ன உரிமைகள் நமக்கு உண்டு என்பதையாவது தெரிந்து கொள்வோம்.

## குடிமையியல் உரிமைகள் (Civil Rights)

- உயிர் வாழ்வதற்கான உரிமை
- சட்டத்திற்கு முன் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை
- தேசிய இனத்திற்கான உரிமை
- நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமை
- வெளிப்படையான விசாரணைக்கான உரிமை
- குற்றமற்றவர் என அனுமானிக்கப்படுவதற்கான உரிமை
- இலவச சட்ட உதவிக்கான உரிமை
- குற்றம் சுமத்தப்பட்டவர் முன்னிலையில் விசாரணை நடக்கவும், அவரே எதிர் வாதாடவும் உள்ள உரிமை
- சாட்சிகளை விசாரிப்பதற்கான உரிமை
- உறுதியளிக்கப்பட்ட உரிமைகள்மற்றும் சுதந்திரங்கள் மீறப்படும் போது குறை தீர்க்கும் அமைப்புகளை அணுகுவதற்கான உரிமை.
- ஒரே குற்றத்திற்காக இரு முறை தண்டிக்கப்படுவதிலிருந்து விடுதலைப் பெறுவதற்கான உரிமை.
- மேல் முறையீடு,மறுபரிசீலனை செய்வதற்குமான உரிமை
- தகவல்களைப் பெறவும்,தேடவும், பெற்றதை வழங்குவதற்குமான உரிமை
- மதம் மற்றும் அரசியல் நம்பிக்கைகள் உட்படக் கருத்து கொண்டிருக்க உரிமை
- தனது வீட்டில் தனியாக இருக்க உரிமை.
- தன்மாண்பும் நற்பெயரும் காக்கப்படுவதற்கான உரிமை
- நடமாட்டச் சுதந்திரத்திற்கான உரிமை
- நீதி தவறாக வழங்கப்படுகையில் நிவாரணம் பெறும் உரிமை
- தன்னிச்சையாக நாடு கடத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை
- ஒரு நாட்டில் நுழைவதற்கான உரிமை
- ஒரு நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான உரிமை

## அரசியல் உரிமைகள் (Political Rights)

- கருத்துக்களை வெளியிட உரிமை

- கூட்டம் கூடுவதற்கான உரிமை
- சங்கமாகச் சேருவதற்கான உரிமை
- வாக்களிப்பதற்கான உரிமை
- அரசியல் பங்கேற்புக்கான உரிமை
- பொதுப் பணிகளில் சமவாய்ப்பு பெறுவதற்கான உரிமை

## பொருளாதாரச், சமூகப்,பண்பாட்டு உரிமைகள் (Economic, Social and Cultural Rights)

- வேலைக்கான உரிமை
- வேலையைத் தெரிவு செய்யும் உரிமை
- சொத்து வைத்திருப்பதற்கான உரிமை
- போதிய வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை
- கல்வி பெறுவதற்கான உரிமை
- குடும்பம் அமைத்துக் கொள்வதற்கான உரிமை
- சமூகப் பாதுகாப்புக்கான உரிமை
- ஆயுள் காப்பீட்டுக்கான உரிமை
- சமூக, மருத்துவ உதவிப்பெறும் உரிமை
- அறிவியல் முன்னேற்றங்களின் பலன்களை அனுபவிப்பதற்கான உரிமை
- சுகாதாரம்,பாதுகாப்புக்கான உரிமை

## குழுக்களின் உரிமைகள்

- சம ஊதியத்திற்கான உரிமை (ஒரே வகைப்பட்ட வேலைக்குச் சமமான ஊதியம்)
- கூட்டாகப் பேரம் பேசுவதற்கான உரிமை
- தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும், தொழிற் சங்கங்களில் சேர்வதற்குமான உரிமை
- போராட்ட உரிமை
- பணி நீக்கம் செய்யப்படுவதற்கு முன் முன்னறிவிப்புப் பெறும் உரிமை
- பதவி உயர்வில் சமவாய்ப்பும், பாதுகாப்பான, சுகாதாரமான பணிச்சூழலில் பணிபுரிவதற்குமான உரிமை
- வேலை வாய்ப்புக்கான வழிகாட்டுதல், பயிற்சி பெறும் உரிமை
- சம்பளத்துடன் கூடிய விடுப்புக்கான உரிமை
- நியாயமான ஊதியத்திற்கான உரிமை
- வரையறுக்கப்பட்ட வேலை நேரத்திற்கான உரிமை (வாராந்திர ஓய்வுக்கான உரிமை)

## பெண்களுக்கான உரிமைகள்

- சம ஊதியம் பெறுவதற்கான உரிமை
- பாலியல் சமத்துவத்திற்கான உரிமை
- தம்பதியருக்கிடையில் சமத்துவ உரிமை
- சுரண்டலிலிருந்து பாதுகாப்பு பெற உரிமை
- கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு விடுப்புரிமை

## குழந்தைகள், இளங்குற்றவாளிகளுக்கான உரிமைகள்

- கல்வி பெறுவதற்கான உரிமை
- தொழிற்பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சிகளை இலவசமாகப் பெற உரிமை
- கைது செய்யப்பட்ட இளம்குற்றவாளிகள் புனர்வாழ்வுபெற உரிமை
- மரணத் தண்டனை விதிக்கப்படாமலிருப்பதற்கான உரிமை
- சித்திரவதை, சுரண்டல்,கவனிக்கப்படாமையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை
- வேலைக்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்கும் பாதுகாப்பு உரிமை
- விளையாட்டு,பொழுதுபோக்கிற்கான வாய்ப்பு பெறும் உரிமை

- சமூகச் சேவைகளைப் பெறுவதற்கான உரிமை

## சிறைக் கைதிகளின் உரிமைகள்

- சிறைக் கைதியாகப் பதிவு செய்யப்படுவதற்கான உரிமை
- சிறைக் கைதிகளை வகைப்படுத்திப் பிரித்து வைப்பதற்கான உரிமை
- சிறையில் தனியாகத் தங்க வைக்கப்படுவதற்கான உரிமை
- போதிய காற்றோட்டம், வெளிச்சம்,உடல்நலம் மற்றும் சுகாதாரத்திற்குத் தேவையான வசதிகளுக்கான உரிமை
- துணிமணிகள், படுக்கை, போதிய உணவு, தண்ணீர், மருத்துவ வசதி பெற உரிமை
- பயிற்சி, விளையாட்டுக்கான உரிமை
- கொடூரமான,கேவலமான தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை
- அதிகாரிகளிடம் வேண்டுகோள் மற்றும் புகார்கள் கொடுப்பதற்கான உரிமை
- குடும்பம், நண்பர்களுடன் தொடர்பு கொள்வதற்கான உரிமை (கடிதத்தொடர்பு,நேர்காணல் மூலம்)
- வெளி உலகச் செய்திகளைத் தொடர்ந்து பெறுவதற்கான உரிமை
- சிறைச்சாலையின் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உரிமை
- மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை
- சொந்தச் சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கான உரிமை
- பெண் சிறைக் கைதிகள் பெண் அதிகாரிகளாலேயே பாதுகாக்கப்படுவதற்கான உரிமை.

## 1. அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948

பிரிவு – 1

உலகில் பிறக்கும் மனிதர் அனைவரும் சுதந்திரத்தோடும், சுயமரியாதையோடும் உள்ளார்ந்த உரிமைகளோடும் பிறக்கின்றனர். இவர்கள் அனைவருமே பகுத்தறிவும் மனசாட்சியும் இயல்பிலேயே பெற்றவர்கள். எனவே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

பிரிவு – 2

இப்பிரகடனத்தில் தரப்படும் உரிமைகள், சுதந்திரங்கள் அனைத்தும் நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கோட்பாடு, தேசம், சமுதாயப் பின்னணி, சொத்து, பிறப்பு, தகுநிலை (Status) எனும் அடிப்படையில் பாகுபாடின்றி அனைவருக்கும் உரியன.

மேலும் ஒருவர் சார்ந்த நாடு, இறையாண்மையோடு கூடிய சுதந்திர நாடாக இருந்தாலும் அல்லது சார்புடைய நாடாக இருந்தாலும் இவ்வடிப்படையிலும் பாகுபாடுகாட்டக் கூடாது. வேற்றுமைகள் இயல்பானவை என்போம். பாகுபாடுகளை மிறல்கள் என்போம். வேற்றுமையுள்ளும் பன்மையை வளர்த்தல் மூலம் ஒற்றுமை காண்போம்.

பிரிவு – 3

ஒவ்வொருவருக்கும் உயிர்வாழவும் உரிமையுண்டு. இவ்வாழ்வைச் சுதந்திரத்தோடும் பாதுகாப்போடும் வாழ்வதற்கும் உரிமையுண்டு.

பிரிவு – 4

யாரும் யாரையும் அடிமையாகக் கொள்ளவோ நடத்தவோ உரிமை இல்லை. அடிமை முறைகளின் அத்தனை வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

பிரிவு – 5

யாரையும் சித்ரவதை செய்யக்கூடாது. கொடூரமாக, மனிதத் தன்மையற்று கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமான மனிதத் தன்மையற்ற, கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது.

பிரிவு – 6

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஓர் ஆள் என்ற நிலையில் (Person) சமமாக ஏற்றுக் கொள்ளப்படுதற்கு உரிமையுடையோர்.

பிரிவு – 7

சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்; சட்டத்தின் சமமான பாதுகாப்புக்குரியவர்கள். இப்பிரகடனத்தை மீறுகின்ற வகையில் மனிதரிடமிருந்து மனிதரைப் பாகுப்படுத்துதல் அல்லது பாகுபடுத்த தூண்டுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவர்க்கும் உண்டு.

பிரிவு – 8

ஒரு நாட்டின் அரசியல் சாசனமும், சட்டங்களும் வழங்கும் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது, அந்நாட்டின் நீதிமன்றங்களின் மூலம் தக்க பரிகாரம் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

பிரிவு – 9

சரியான காரணமின்றி சட்டத்திற்குப் புறம்பாகக் கைது செய்யவோ, சிறைப்படுத்தவோ, நாடு கடத்தவோ எவருக்கும் உரிமையில்லை.

பிரிவு – 10

ஒருவர்க்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும், ஒருவர்க்கும் எதிராக ஏற்கனவே குற்றச் சாட்டுகள் இருந்தாலும் சுதந்திரமான நீதிமன்றங்கள் மூலம் வெளிப்படையான விசாரணையைக் கோருவதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு.

நீதிவிசாரணைகள் வெளிப்படையாக அமைதல் வேண்டும். விசாரிக்கப்படும் நீதிபதி புற உலக நிர்ப்பந்ததிற்கு ஆளாகிவிடக் கூடாது.

பிரிவு – 11

தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதாலேயே ஒருவர் குற்றவாளியாவாரா? இல்லை! ஒளிவு மறைவற்ற நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியென்று சட்டப்படி நிரூபணமாகும் வரை அவர் குற்றமற்றவரே. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனது பாதுகாப்பிற்கான உத்தரவாதங்களைக் கோரவும் உரிமையுண்டு. ஒருவர் செய்யலாத குற்றத்திற்காக ஒருவரைப் பழிக்கவோ தண்டனை வழங்கவோ யாருக்கும் உரிமை இல்லை.

பிரிவு – 12

ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதங்கள்–இவற்றில் சட்டத்திற்குப் புறம்பாகக் குறுக்கீடு செய்ய எவருக்கும் உரிமையில்லை. ஒருவரின் மாண்புக்கும், நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்க எவருக்கும் உரிமை இல்லை. இம்மாதிரியான முறையற்ற குறுக்கீடுகளிலிருந்து பாதுகாப்பு பெற அனைவர்க்கும் உரிமை உண்டு.

பிரிவு – 13

சொந்த நாட்டினுள் விரும்பியவாறெல்லாம் போய் வரலாம். சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டிற்குக் குடி பெயரலாம். ஒருவர் விரும்புகின்ற போது மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பாலம்.

பிரிவு – 14

ஒருவர் தம் நாட்டில் தாங்க முடியா கொடுமைகளுக்கு உள்ளாவாராயின், இன்னொரு நாட்டில் தஞ்சம் புக உரிமையுண்டு. ஆனால் கொலைக் குற்றம் புரிந்த ஒருவரோ, அய்க்கிய நாட்டுச் சபையின் நோக்கங்களுக்கு புறம்பாக நடக்கும் ஒருவரோ எங்கும் தஞ்சம் புக உரிமை இல்லை.

பிரிவு – 15

ஒருவர்க்கு ஒரு நாட்டைச் சார்ந்தவராக இருப்பதற்கு உரிமையுண்டு. ஒருவரின் தேசிய இன அடையாளத்தைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை. ஒருவர் தான் சார்ந்த தேசிய இன அடையாளத்தை மாற்றிக் கொள்ள விரும்பினால், மாற்றிக் கொள்ளவும் உரிமையுண்டு.

பிரிவு – 16

உரிய வயதடைந்த ஆண்களும், பெண்களும் மணம் புரிந்து கொள்ளவும் குடும்பம் அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. ஒருவர் சார்ந்த இனம், தேசிய இனம், சமயம் ஆகியன இவ்வுரிமைகளுக்குத் தடையாய் இருக்கக். கூடாது. திருமண உறவுக்கான உரிமை போலவே, திருமண உறவை ரத்து செய்யுவும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு. திருமணத்தில் யாருடைய வற்புறுத்தலுக்கும் இடமில்லை. ஒருவர் சார்ந்த நாட்டின் அரசுக்கு குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாக்கும் கடமையுண்டு.

பிரிவு – 17

தனித்தோ, பிறரோடு சேர்ந்தோ சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை அனைவர்க்கும் உண்டு. முறையான காரணமின்றி ஒருவர் சொத்தினைப் பறிக்கும் உரிமை யாருக்குமில்லை.

பிரிவு – 18

ஒவ்வொருவருக்கும் சிந்திக்க, மன சாட்சிப்படி நடக்க, ஒரு மதத்தைத் தெரிவு செய்ய அல்லது தேர்ந்து கொண்ட மதத்தை மாற்றிக் கொள்ள உரிமையுண்டு. மத நம்பிக்கைகளைத் தனியாக அல்லது குழுவாக அந்தரங்கமாக அல்லது வெளிப்படையாகப் போதிக்கவும் கடைபிடிக்கவும் வழிபடவும் உரிமையுண்டு.

பிரிவு – 19

ஒவ்வொருவரும், தங்களுடைய கருத்துக்களைப் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ வெளிப்படுத்த உரிமையுண்டு. அவ்வாறே தகவல்களைப் பெறுவதற்கும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் பரப்புதற்கும் உரிமையுண்டு. இந்தகவல்கள் தேச எல்லை தாண்டி சர்வதேச அளவிலும் அமையலாம்.

பிரிவு – 20

ஒவ்வொருவரும், அமைதியான முறையில் கூட்டமாகக் கூடவும், சங்கமைக்கவும் உரிமையுண்டு. ஆனால் சங்கத்தில் சேரும்படி எவரையும் கட்டாயப்படுத்த முடியாது.

பிரிவு – 21

நாட்டின் அரசதிகாரத்தில் நேரடியாகவோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாகவோப் பங்கேற்க உரிமையுண்டு. அரசுகள் மக்களின் நம்பிக்கையை தேர்தல்கள் மூலம் தொடர்ந்து பெற வேண்டும்; இத்தேர்தல்கள் இரகசியமாக இருத்தல் வேண்டும். வாக்குரிமை எல்லோர்க்கும் சமமாக இருத்தல் வேண்டும். தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.. மக்களும் அரசும் ஒருவர்க்கொருவர் பதில் சொல்லும் கடப்பாடுண்டு என்பதும் மிகப் பெரிய கடமையாகும்.

பிரிவு – 22

சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. குடிமகனின் மாண்பிற்கும், வளர்ச்சிக்கும் தேவையான பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமை உண்டு. இப்பாதுகாப்பு நாட்டு வளம், சர்வதேச ஒத்துழைப்பு, அரசுகள் வளர்ச்சிக்காக முன்னெடுக்கும் முனைப்பு ஆகியவைகளை ஒத்து அமையும்.

பிரிவு – 23

வேலைக்கான உரிமை, தகுதிக்கேற்ப வேலையைத் தெரிவு செய்யும் உரிமை, சாதகமான பணிச்சூழல், வேலையின்மைக்கு எதிரான பாதுகாப்பு பெறும் உரிமை, நியாயமான ஊதியம், சமவேலைக்குச் சம ஊதியம், ஊதியத்தோடு கூடிய சமூகப் பாதுகாப்பு பெறல் போன்ற உரிமைகள் அனைவர்க்கும் உரியன. இவ்வுரிமைகளைக் காக்கும் வகையில் தொழிற்சங்கங்களை அமைத்தல். சங்கத்தில் உறுப்பினராகச் சேரல் இவையெல்லாம் மானுட உரிமைகளே.

பிரிவு – 24

ஒவ்வொரு நபருக்கும் ஓய்வுக்கும், இளைப்பாறலுக்கும் உரிமையுண்டு. தொழிலாளர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட வேண்டும். ஊழியர்கள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை பெற உரிமையுடையவர்கள்.

பிரிவு – 25

ஒவ்வொருவரும் உணவு, வீடு, உடை, மருத்துவம், சமூகப் பணி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய உரிமையுடையவர்கள். வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான அடிப்படை வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையுண்டு.

குழந்தைகளும், கர்ப்பிணிப் பெண்களும் சிறப்புக் கவனம் பெறும் உரிமையுடையவர்கள். மண உறவில் அல்லது மணவுறக்கப்பால் பிறந்த குழந்தையாயினும் சமமான கவனிப்புக்குரியவரே.

பிரிவு – 26

- கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
    - ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாக, இலவசக் கல்வியாக வேணடும். உயர்கல்வி அனைவரும் பெறும் வகையில் சம வாய்ப்புக்குரியதாக்கப் பெற வேண்டும்.

கல்வி

- மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமைகளை, அடிப்படை சுதந்திரங்களை, பன்மைச் சமூகக் குழுக்களுக்கிடையே நல்லிணக்கத்தை, சகிப்புணர்வை, நட்புணர்வை வளர்த்தலை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- தம் குழந்தைகளுக்கான கல்வியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

பிரிவு – 27

சமுதாய கலாச்சார வாழ்வில் பங்கேற்கவும், கலைகளைத் துய்க்கவும், அறிவியல் வளர்ச்சி தரும் வெற்றிகளில் பங்கேற்வும் அனைவர்க்கும் உரிமையுண்டு. ஒருவர் படைக்கும் கலை, இலக்கிய அறிவியலின் பயன்களைப் பாதுகாக்கவும் இப்பயன்களை அனுப்பவிக்கவும் உரிமையுண்டு.

பிரிவு – 28

உரிமைகளையும், சுதந்திரங்களையும் உள்ளடக்கிய இப்பிரகடனங்கள் தேசிய அளவிலும் உலக அளவிலும் உருவாக்கப்பெறும் 'ஒழுங்கு' மூலமே சாத்தியம் என்பதனால் இவ்வொழுங்கைக் கோரும் உரிமை ஒவ்வொருக்கும் உண்டு.

பிரிவு – 29

- ஒரு மனிதன் தான் தோன்றிய சமூகத்துக்குரிய கடமைகளை முழுமையாக ஆற்றுகின்ற போது தான் முழு மனிதனாகிறான்.
- ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும். சக மனிதர்களின் உரிமைகளை, சுதந்திரங்களை அங்கீகரிக்க வேண்டும். இங்கு பொது அமைதி, பொது நலன் என்பன மட்டுமே முதன்மை பெறல் வேண்டும்.
- அமைதி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை வாழ்வின் மதிப்பீடுகளாகட்டும்.

பிரிவு – 30

இவ்வுரிமைப் பிரகடனங்களுக்கு எதிராகச் செயற்படவோ, அழிக்கவோ யாருக்கும் எந்த நாட்டுக்கும் உரிமை இல்லை.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

**( THE CONSTITUTION OF INDIA )**

**முகப்புரை** (Preamble**) :** இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை இறையாண்மை பூண்ட, சமதர்ம, சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசாக **[Sovereign, Socialist, Secural Democratic Republic]** அமைப்பதென உறுதிப் பூண்டுள்ளோம். இதன் மூலம் இந்தியாவின் அனைத்துக் குடிமக்களையும் பாதுகாப்போம்.

**நீதி12[Justice] :** சமூகம், பொருளாதார, அரசியல், நீதி.

**சுதந்திரம்12[Liberty]:** எண்ண, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்.

**சமத்துவம் [Equality]:** தகுதிப்பாட்டிலும் வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றை அளித்து அவர்களை உயர்வுறச் செய்தல்.

**சகோதரத்துவம் [Fraternity]:** தனி மனித கௌரவம், தேசத்தின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு உறுதி அளித்தல்.

**இருபத்து ஆறாம் நாள் நவம்பர் 1949 இல் நமது அரசியலமைப்பு அவையில், ஏற்று, இயற்றி, இந்த அரசியலமைப்பை நமக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பாகத்தில், தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட மனித உரிமைகளை நாம் அடிப்படை உரிமைகள் என்றழைக்கிறோம்.

உச்சநீதிமன்றமும் இவ்வடிப்படை உரிமைகளை “இயற்கை உரிமைகளாக” அங்கீகரித்திருக்கிறது. காலம் காலமாக இயற்கை உரிமைகள் என்று நாம் அழைத்து வந்த உரிமைகளைத் தான் தற்பொழுது மனித உரிமைகள் என்று அழைக்கிறோம் என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது.

- ஒரு மனிதன் மாண்புடன் உயிர்வாழ தேவைப்படும் அடிப்படைத் தேவைகளே அடிப்படை உரிமைகளாக இச்சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.
- இயற்கையான இவ்வுரிமைகள் மறுக்கப்படுகின்றபோது மனிதரால் மாண்புடன் வாழ முடியாது என்பதனால் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மூன்றாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஒரு நபருக்கு மறுக்கப்படுகின்றபோது அரசை எதிர்த்து வழக்கு தொடர முடியும்.

### அடிப்படைப் பண்புகள்

- சாதாரணச் சட்டத்தினால் நமக்குக் கிடைக்கப் பெறாமல் மிக உயர்ந்த சட்டமாகிய அரசியலபைப்பு சட்டத்தின் மூலம் நமக்கு கிடைத்தது.

- இவ்வுரிமைகளை சாதாரண சட்டங்களை மாற்றுவது போல எளிதில் மாற்ற முடியாது. அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னரே மாற்றம் செய்ய முடியும். அம்மாற்றங்களும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ‘‘அடிப்படை கட்டமைப்புக்கு’’ பாதிப்பு ஏற்படாத வண்ணம் இருந்தால்தான் உச்சநீதிமன்றம் அம்மாற்றத்தை அங்கீகரிக்கும்.

- அரசியலைமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பாகத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறும் வகையிலோ, பறிக்கும் வகையிலோ அரசு சட்டமியற்றக்கூடாது. அவ்வாறு இயற்றப்பட்டால் அச்சட்டம் செல்லா நிலைச் சட்டமாக ஆகிவிடும்.

- இதேபோல் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் (அதாவது 26.1.1950க்கு முன்) இயற்றப்பட்ட சட்டங்கள் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் இருந்தால் செல்லா நிலைச் சட்டமாக ஆகி விடும்

- சாதாரணச் சட்டத்தின் கீழ் பெறப்படும் உரிமைகள் மீறப்படும் பொழுது நாம் அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றங்களில் தான் வழக்கு தொடுத்து உரிமையைப் பாதுகாக்க முடியும். ஆனால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் நேரடியாக அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 32ன் கீழ் உச்சநீதிமன்றத்தையோ அல்லது அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 226ன் கீழ் உயர்நீதிமன்றத்தையோ அணுகி நிவாரணம் பெறக்கூடிய உரிமை உண்டு.

### வகைப்பாடுகள்

1. சமத்துவத்திற்கான உரிமை – பிரிவுகள் 14 முதல் 18வரை
2. சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவுகள் 19 முதல் 22)
3. சுரண்டலுக்கெதிரான உரிமை (பிரிவுகள் 23 மற்றும் 24)
4. மதச் சுந்திரத்திற்கான உரிமை (பிரிவுகள் (25 முதல் 28 வரை)
5. சிறுபான்மையினருக்கான உரிமைகள் (பிரிவுகள் 29 மற்றும் 30)
6. அரசியலமைப்புச் சட்ட நிவாரணம் பெறும் உரிமை பிரிவு 32

## அடிப்படை உரிமைகள்

### 1) சமத்துவ உரிமை

- சமத்துவம் என்பது இச்சமூகத்தில் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார அடிப்படையில் மிகவும் பின் தங்கியுள்ளோர்களை சகல வசதிகளோடும், உரிமைகளோடும் வாழ்கின்ற மக்களோடு சமத்துவப்படுத்துவது.

- சமமில்லாதவர்களைச் சமமாக்குவது
- உதாரணமாக சுப்பன் என்ற தலித் தொழிலாளி கோவிலின் உள் பிரகாரத்தில் நுழைய முடியாத நிலை. ஆனால் சங்கரன் என்ற உயர் சாதிக்காரர் உள்ளே நுழையலாம் என்ற நிலைக்குப் பெயர் பாகுபாடு
- எங்கெல்லாம் பாகுபாடு காணப்படுகிறதோ அங்கு சமத்துவம் இருக்காது
- எங்கெல்லாம் சமத்துவம் இல்லையோ அங்கு அடக்குமுறைதான் இருக்கும்.
- எங்கெல்லாம் அடக்குமுறை இருக்கிறதோ அங்கு சட்டத்தின் ஆட்சி நடக்காது
- எனவே சமத்துவமின்மை ஒரு மனித உரிமை மீறல் ஆகும்
- இச்சமூகத்தில் பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர், தீண்டாமைக்கு பலியாகும் தலித்துக்கள் சமத்துவமின்றி வாழ்கின்றனர்.

**பிரிவு 14**

சட்டத்தின் முன் சமம் அல்லது சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள் அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக்கூடாது.

**பிரிவு 15**

மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு பாகுபாடு காட்டுதல் கூடாது.

**பிரிவு 15 (2)**

- கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவு விடுதி, பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கான இடங்கள் ஆகிய இடங்களில் அனுமதிப்பதற்கும்
- கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அரசு நிதியுடன் பராமரிக்கப்படும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களைப் பயன்படுத்துவதற்கும்
- மதம், இனம் சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனையும் கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தக்கூடாது.

**பிரிவு 15 (3)**

குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக்கூடாது.

**பிரிவு 15 (4)**

சமூக மற்றும் கல்விபெற வாய்ப்பற்ற பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை முன்னேற்ற சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக்கூடாது.

**பிரிவு 16 (1)**

அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பில் அனைத்து குடிமக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**பிரிவு 16 (2)**

மதம், இனம், சாதி, பால். வம்சாவழி, பிறப்பிடம் அல்லது இவற்றின் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலைவாய்ப்பு தொடர்பாக எந்தவொரு குடிமகனையும் தகுதியற்றவராகக் கருதக் கூடாது மற்றும் பாகுபாடு காட்டக் கூடாது.

**பிரிவு 17**

தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதால், எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டத்தின்படி குற்றமாகும்.

## 2) சுதந்திரத்திற்கான உரிமை

- எவ்வித தடையுமின்றி பிறர் பாதிப்படையாவண்ணம் ஒருவன் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதும் அதை செயல்படுத்துவதும் சுதந்திரஉரிமை
- சட்டத்திற்குட்பட்டு ஒருவர் தன்னைப் பற்றியும், சமூக அரசியல் பொருளாதார நிலைகள் பற்றியும், அரசின் திட்டங்கள் பற்றியும் தகவல் பெறுகின்ற உரிமை சுதந்திர உரிமை
- இச்சுதந்திர உரிமை சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டது
- அடக்குமுறை, கொத்தடிமை முறை, மனிதர்களை பல்வேறு வேலைகளுக்காக கடத்தல் முறை இதுபோன்ற செயல்கள் ஒரு தனிமனிதனின் சுதந்திர உரிமையைப் பறிக்கிறது.
- சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனி மனிதனின் இயல்பான இயக்கம் இதற்கு தடைகள் இருப்பின் அது அவனின் சுதந்திர உரிமையை பறிப்பதாகும்.

**பிரிவு 19 (1)**

அனைத்து குடிமக்களுக்கும் கீழ்க்கண்ட உரிமைகள் உண்டு

**பிரிவு 19 (1) (a)**

பேச்சு மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை

**பிரிவு 19 (1) (b)**

ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாகக் கூடும் உரிமை

**பிரிவு 19 (1) (c)**

சங்கங்கள் அமைக்கும் உரிமை

**பிரிவு 19 (1) (d)**

இந்திய எல்லைக்குள் சுதந்திரமாகச் சென்று வரும் உரிமை

**பிரிவு 19 (1) (f)**

ஏதேனும் தொழில, வேலை, வணிகம் அல்லது வியாபாரம் செய்யும் உரிமை

**பிரிவு 20 (1)**

நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் குற்றம் எனக் குறிப்பிடப்பட்ட செயலைத் தவிர வேறு எந்த செயலுக்காகவும் ஒருவர் தண்டிக்கப்படக் கூடாது. மேலும் அச்செயல் புரிந்த நேரத்தில் நடைமுறையிலிருந்த சட்டத்தில் **பரிந்துரைக்கப்பட்ட தண்டனையைவிட அதிகப்படியான தண்டனை வழங்கக்கூடாது.**

### பிரிவு 20 (2)

ஒரே குற்றத்திற்காக ஒருவரை ஒன்றுக்கும் மேற்பட்ட முறை தண்டிக்கக்கூடாது.

### பிரிவு 20 (3)

குற்றம் சாட்டப்பட்ட எந்த ஒரு நபரையும் அவருக்கு எதிராகச் சாட்சியளிக்க வற்புறுத்தக்கூடாது.

#### அ) உயிர்வாழும் உரிமை

- தனிநபர் மாண்பு, மதிப்புடன் உயிர்வாழ்தல்
- நடமாட்டச் சுதந்திரத்தோடு உயிர்வாழ்தல்
- சுயசிந்தனையோடு செயல்படும் உரிமை
- ஆற்றிலினை வெளிப்படுத்தும் உரிமை. வாழ்வுரிமை என்பது வெறுமனே உயிர்வாழ்தல் என்ற பொருள் அல்ல. மாறாக இயற்கை வாழ்வாதாரம், கல்வி, மருத்துவம், உடல்நலம், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படாமலிருத்தல் போன்ற உயரிய உரிமைகளை அனுபவிப்பது வாழ்தல்

### பிரிவு 21

சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறையில் இல்லாமல் வேறு விதத்தில் ஒரு நபரின் உயிரையோ அல்லது அவரின் தனிநபர் சுதந்திரத்தையோ பறிக்கக்கூடாது.

### பிரிவு 22 (1)

- கைது செய்யப்படும் நபரை கைதிற்கான காரணத்தினைத் தெரிவிக்காமல் காவலில் வைக்கக்கூடாது.
- கைதானவர் அவருடைய விருப்பப்படி வழக்குரைஞர் ஒருவரை கலந்தாலோசித்து அவருடைய தரப்பில் வழக்குரைஞர் ஒருவரை வாதிட அனுமதி வழங்க வேண்டும்.

### பிரிவு 22 (2)

கைதான இடத்திலிருந்து நீதிமன்றம் செல்வதற்கான நேரம் நீங்கலாக 24 மணி நேரத்திற்குள் கைதானவர்கள் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

### பிரிவு 22 (3)

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் உரிமைகள் கீழ்கண்டவர்களுக்குப் பொருந்தாது.

1. நம் நாட்டிற்கெதிராகப் போர் தொடுக்கும் நாட்டினைச் சேர்ந்தவர்கள்.
2. தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள்

### ஆ) கல்வி உரிமையும் வாழ்வுரிமையே!

- விலங்கிற்கும் மனிதனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை வெளிக்கொணர கல்வி அடையாளமாகப் பயன்படுகிறது.
- ஒரு மனிதன் ஆற்றலுடன் இச்சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் மாறவேண்டுமெனில் அவனுக்கு கல்வி அவசியம்
- அரசு இக்கல்வியை கட்டாயமாக, இலவசமாக 6 முதல் 14 வயது உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என்று உன்னிகிருஷ்ணன் எதிர் ஆந்திரப்பிரதேசம் என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- இலவச, தரமான, கட்டாயக் கல்வியை வழங்கும் அரசு 0–6வயதுள்ள குழந்தைகளுக்கும் அதை நீட்டிக்க வேண்டும் என்பதும் அடிப்படை உரிமையாகும்.

### இ) தூய்மையான சுற்றுப்புறச் சூழல் வாழ்வுரிமையே

- இயற்கை அனைத்து மக்களுக்கும் வழங்கியுள்ள வாழ்வாதாரமாகிய நீர், நிலம், காற்று ஆகாய மண்டலம் ஆகியவற்றை அனைவரும் சமபங்கீடு செய்து அனுபவிப்பது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையாகும்.
- வாழ்வாதாரங்களைத் தனியார் நிறுவனங்கள் மாசுபடுத்துவது மற்றும் அழிப்பது என்பது தனிமனிதனின் வாழ்வுரிமையை நசுக்கும் செயலாகும்.
- பணியிடங்களில் பெண்களுக்கெதிராக நடக்கும் பாலியல் வன்முறை என்பதும் வாழ்வுரிமையை மீறும் செயலாகும்.

## 3) சுரண்டலுக்கெதிரான உரிமைகள்

### பிரிவு 23

மனிதர்களை விற்பது வாங்குவது மற்றும் அனைத்து வகையான கொத்தடிமை முறைகள் தடை செய்யப்பட்டுள்ளது.

### பிரிவு 24

14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும் சுரங்கத்திலும் பிற அபாயகரமான தொழிலிலும் நியமிக்கக்கூடாது.

- 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தி அவர்களை உழைப்பை சுரண்டுதல் கூடாது

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் படி குழந்தைகளின் நலனை மையப்படுத்தித் தொழில்கள் இருக்க வேண்டுமேயன்றி, தொழிற்சாலைகளின் நலனை மையப்படுத்தி குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது.

- கொத்தடிமை முறை என்பது மனித உரிமைக்கு எதிரானது.

### உயிர்வாழும் உரிமை குறித்த வழக்குகள் பிரிவு 21

மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் குறிப்பிடப்பட்டிருக்கும் வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுந்திரம் என்ற சொற்றொடர் பரந்த பொருள் கொண்டதாகவும் பல்வேறு வகையான உரிமைகளை உள்ளடக்கியதாகவும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

மேலும் **கராக்சிங் எதிர் உத்திரப்பிரதேச அரசு** என்ற வழக்கில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் குறிப்பிட்டுள்ள வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுந்திரம் என்ற பதத்திற்குள் மனிதர்களின் அத்தனை உரிமைகளும் அடங்கும் என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது. இதே போன்ற கருத்துக்களை உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் கருத்து தெரிவித்தது.

### வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை

**சத்வந்த் சிங் சிகாணி எதிர் இந்திய அரசு** என்ற வழக்கில் வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை பிரிவு 21ல் குறிப்பிட்டுள்ள தனிநபர் சுதந்திரம் என்ற பதத்திற்குள் அடங்கியிருப்பதால் வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை அடிப்படை உரிமையாக உச்சநீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதே உரிமையை உச்சநீதிமன்றம் மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கிலும் அடிப்படை உரிமையாக அங்கீகரித்தது.

### அந்தரங்க உரிமை

**கராக் சிங் எதிர் உத்திரப்பிரதேச அரசு** என்ற வழக்கில் கராக்சிங் வீட்டிற்குள் அனுமதியின்றி நுழைவதும் அவருக்குத் தொல்லை தருவதும் பிரிவு 21ல் அடங்கிய அந்தரங்க உரிமையைப் பாதிக்கும் என்றும் விளக்கி உத்திரப்பிரதேச காவல் விதிகளின் விதி இரவு நேரங்களில் வீடுகளில் சோதனையிடுதல் என்ற அதிகாரம் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21ற்கு முரண்பட்டுள்ளது என்று அறிவித்து ரத்து செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதே உரிமையினை **கோவிந்த் எதிர் மத்திய பிரதேச அரசு** வழக்கில் மேலும் விவரமாக உச்சநீதிமன்றம் விளக்கி தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் அந்தரங்க உரிமை என்பது வீட்டிலிருப்போருடைய நெருக்கமான உறவுகள், குடும்பம், திருமணம், தாய்மை அடைதல், கருத்தரித்தல் குழந்தைகளை வளர்த்தல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகும் என்று அந்தரங்க உரிமை என்ற அடிப்படை உரிமையை விளக்கி மேற்படி உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**ராஜகோபால் எதிர் தமிழக அரசு** என்ற வழக்கில் அந்தரங்க உரிமை என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் உத்திரவாதமளிக்கப்பட்ட வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைக்குள் அடங்கியிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் விளக்கியது.

இவ்வழக்கில் ஒருவருடைய சம்மதம் இல்லாமல் அவரின் வாழ்க்கை, குடும்பம், திருமணம், கருத்தரித்தல், குழந்தை பெறுதல் போன்ற விபரங்களை வெளியிடக்கூடாது என்றும் அவ்வாறு வெளியிட்டால் அது அவருடைய அந்தரங்க உரிமையை பாதிக்கும் என்றும் உச்சநீதிமன்றம் விளக்கியது.

## விரைவான விசாரணைக்கான உரிமை

இவ்வுரிமை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப் படாவிட்டாலும் உச்சநீதிமன்றத்தால் இவ்வுரிமை பிரிவு 21க்குள் உட்கிடையாக உறுதி செய்யப்பட்டிருக்கக்கூடிய உரிமை என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

**உசைனரா காட்டூர் எதிர் பீகார் அரசு** என்ற வழக்கில் விசாரணையின்றி நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருத்தல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21ற்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்து.

இவ்வழக்கில் விரைவான விசாரணைக்கான உரிமை பிரிவு 21ல் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் முக்கிய பகுதியாகும் என்றும் உச்சநீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

- **உசைனரா காட்டூன் 2 எதிர் உள்துறைச் செயலர் பீகார் அரசு** என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விரைவான விசாரணையினை நடத்த வேண்டியது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு உண்டான கடமை என்றும் அக்கடமையினை நிதி அல்லது நிர்வாகக் காரணங்களைக் காண்பித்து தவிர்க்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.
- அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அதில் தலையிட்டு நிவாரணம் வழங்க வேண்டிய கட்டுப்பாடு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளதால்
- குற்றம் சாட்டப்பட்டவருக்கு விரைவான விசாரணைக்கான உரிமை மறுக்கப்படும் போது
- சம்பந்தப்பட்ட அரசுகளுக்குப் புலனாய்வுத் துறையினைப் பலப்படுத்துவது குறித்து அறிவுறுத்துவது
- புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவது, கூடுதலாக நீதிபதிகள் நியமிக்கப்படுவது போன்ற விசாரணையை விரைவாக முடிக்கத் தேவையான வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கட்டளையிட வேண்டியது அவசியமாகிறது தெரிவித்தது.

**ராஜ்தேவ் சர்மா எதிர் பீகார் அரசு** என்ற வழக்கில் விரைவான விசாரணைக்கான உரிமையை அங்கீகரிக்கும் வகையில் குற்றவியல் விசாரணைகளில் ஏழாண்டு காலத்திற்குக் குறைவான தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களை விசாரிக்குழு நீதிமன்றம், சாட்சி விசாரணை முடிந்தாலும் முடியாவிட்டாலும் அரசு தரப்பு விசாரணையை குற்றப்பத்திரிக்கை தாக்கல்

செய்யப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

ஏழாண்டு காலத்திற்கு கூடுதலான தண்டனை வழுங்கக் கூடிய குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றம், சாட்சி விசாரணை முடிவடைந்தாலும் முடிவடையாவிட்டாலும் அரசு தரப்பு விசாரணையை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்தவுடன் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

## இலவச சட்ட உதவி பெறுவதற்கான உரிமை

**எம்.எச்.ஆஸ்காட் எதிர் மகாராஷ்டிரா அரசு** என்ற வழக்கில் இலவச சட்ட உதவி பெறுவதற்கான உரிமை, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் உள்ளடங்கிய ஒரு அடிப்படை உரிமையாகும் என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது. ஒரு சிறைக்கைதி பல்வேறு நியாயமான காரணங்களால் தகுதி வாய்ந்த வழக்குரைஞரை நியமித்து தன்னைக் காத்துக் கொள்ள இயலாத நிலையில் நீதிமன்றமே அவருக்காக வாதாட ஒரு தகுதி வாய்ந்த வழக்குரைஞரை குற்றம் சாட்டப்பட்டவரின் சம்மதத்துடன் நியமிக்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பில் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

**உசைனரா காட்டுன் (2) எதிர் உள்துறை செயலர், பீகார் அரசு** என்ற வழக்கிலும் இலவச சட்ட உதவி என்பது நியாயமான நேர்மையான சட்ட நடைமுறையின் ஒரு அங்கமாக இருப்பதால் பொருளாதாரக் காரணங்களினாலோ அல்லது பிற இயலாமையினாலோ நீதியைப் பெறும் வாய்ப்பு ஒருவரிடமிருந்து பறிக்கப்படக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம்

**காத்ரி (2) எதிர் பீகார் மாநில அரசு** என்ற வழக்கில் இலவச சட்ட உதவியனை குற்றம் சாட்ப்பட்டவர் கேட்டுத்தான் பெற வேண்டுமா? என்ற வினா எழுந்தது. இவ்வினாவிற்கு விடையளித்த உச்சநீதிமன்றம் இந்தியாவில் உள்ள கல்வியறிவின்மையை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கையில் குற்றம் சாட்டப்பட்டவர் கேட்டால்தான் இலவச சட்ட உதவி கிடைக்கும் என்று சொன்னால் அது கேலிக்குரியதாகி விடும்

அமர்வு நீதிபதி முன்பாகவோ அல்லது குற்றத்துறை நடுவர் முன்பாகவோ குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராகும்போது சம்பந்தப்பட்ட நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவரிடம் உங்களால் வழக்குறைஞர் நியமித்து வழக்காட முடியவில்லை என்றால் அரசு செலவில் வழக்குரைஞர் நியமிக்கப்பட்டு இலவச சட்ட உதவி பெறும் உரிமை உண்டு என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவர்கள் என்று தீர்ப்பளித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவரிடம் இலவச சட்ட உதவி பெறும் உரிமை குறித்து தெரிவிக்காமல் பின்னர் அக்குற்றம் சாட்டப்பட்டவர் அந்நீதிமன்றத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்படும்போது சம்பந்தப்பட்ட நீதிமன்றம் நீதிபதி இலவச சட்ட உரிமை குறித்து தெரிவிக்காமல் இலவச சட்ட உதவியை பெற்றுத் தராமல் வழக்கினை விசாரித்தது பிரிவு 21ல் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை

உரிமையை மீறிய செயலாகும், அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக இருப்பதால் அவ்விசாரணையைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இறுதியில்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களில் கூறப்பட்டு நமது நாட்டு நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமைகளான வாழ்வுரிமை, சுந்திரம், சமத்துவம், தனிநபர் மாண்பு சம்பந்தப்பட்ட உரிமைகளே. மனித உரிமைகள் என்று மனித உரிமைச் சட்டம் கூறுகிறது.

## 4) மதச்சுதந்திரத்திற்கான உரிமைகள்

### பிரிவு 25

அனைவரும் அவரவர் மனசாட்சிபடி மதத்தினைப் பின்பற்ற சம உரிமை உண்டு. பொது அமைதி, ஒழுக்க முறைமை, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒரு மதத்தைத் தழுவ, பின்பற்ற, பரப்ப அனைவருக்கும் உரிமையுண்டு.

### பிரிவு 26

பொது அமைதி, ஒழுக்க முறைமை, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒவ்வொரு மதத்தினருக்கும் அல்லது மதப் பிரிவினருக்கும்

- மத மற்றும் அறநிலையங்களை நிறுவவும், பராமரிக்கவும்
- மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை மேலாண்மை 21புரியவும்
- அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பெறவும் சொந்தமாக்கிக் கொள்ளவும்
- அச்சொத்துக்களைச் சட்டங்களின் படி நிர்வகிக்கவும் உரிமை உண்டு

### பிரிவு 27

எந்தவொரு குறிப்பிட்ட மதத்தினையும் அல்லது மதப்பிரிவை வளர்க்க அல்லது பராமரிக்க ஆகும் செலவிற்காக எவரையும் வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது.

### பிரிவு 28

அரசு நிதியால் முழுமையாகப் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் மதபோதனைக் கல்வி கற்பிக்கக்கூடாது. மற்ற அரசு நிதி உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் சம்மதத்துடன்தான், அங்கு நடத்தப்படும் மத வழிபாடுகள் அல்லது மதபோதனை வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ள முடியும்.

- மதச் சுதந்திரம் என்பது தனிமனிதனின் அடையாளத்திற்கான உரிமையாகும்.

## 5) சிறுபான்மையினருக்கான உரிமைகள்

### பிரிவு 29 (1)

இந்திய எல்லை அல்லது எதாவது ஒரு பகுதியில் வசிக்கும் குடிமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும், அவர்களுடைய மொழி எழுத்து வடிவம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.

### பிரிவு 29 (2)

அரசால் அல்லது அரசின் நிதி உதவியால் நடத்தப்பட்டு வருகின்ற கல்வி நிலையங்களில் எந்த குடிமக்களுக்கும் மதம், இனம், சாதி, மொழி அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றில் அடிப்படையில் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக்கூடாது.

### பிரிவு 30

1. மொழியை அடிப்படையாகக் கொண்ட அல்லது மதத்தினை அடிப்படையாகக் கொண்ட அனைத்து சிறுபான்மையினருக்கும், அவர்களின் விருப்பதற்கிற்கேற்ப கல்வி நிறுவனங்களை நிறுவதற்கும் அவற்றை நிறுவகிக்கவும் உரிமை உண்டு.
2. கல்வி நிறுவனங்களுக்கும் நிதி உதவி வழங்கும்போது சிறுபான்மையினரால் நிறுவகிக்கப்பெறும் கல்வி நிறுவனம் என்ற காரணத்தினால் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குவதில் பாகுபாடு காண்பிக்கக்கூடாது.
    - பெரும்பான்மையினர் அனுபவித்து வரும் அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு உரிமையுண்டு

## 6) சட்ட நிவாரணம் பெறும் உரிமை

### பிரிவு 32

1. அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பாகத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளைச் செயல்படுத்துவதற்காகத் தகுந்த வழிமுறைகளில் உச்சநீதி மன்றத்தை அணுகக்கூடிய உரிமை உண்டு.
2. இப்பிரிவின் கீழ் உத்திரவாதமளிக்கப்பட்ட உச்சநீதிமன்றத்தினை அணுகக்கூடிய உரிமை, அரசியலமைப்புச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட அல்லாமல் வேறு வழிகளில் தற்காலிகமாக ரத்து செய்ய முடியாது.
3. வழிமுறைகளில் அல்லாமல் வேறு வழிகளில் தற்காலிகமாக ரத்து செய்ய முடியாது.

மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் மட்டுமல்லாது உச்சநீதிமன்றம் அதன் முன் விசாரணைக்கு வந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் பொழுது பல்வேறு உரிமைகளையும் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு மறுவிளக்கம் கொடுத்துள்ளது.

## 2. ஐ.நாவின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கை-1989

**(1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் நாள் ஐ.நா பொதுக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இந்தியா நவம்பர் மாதம் 1992ல் கையெழுத்திட்டது)**

### நான்கு வகையான அடிப்படை உரிமைகள்

**1. உயிர் வாழும் உரிமை**

- உயிருக்கு
- தரமான வாழ்க்கைக்கு, சத்தான உணவுக்கு
- விரும்பிய பெயரைக் கொள்வதற்கு
- தேசிய, இன உரிமைக்கு

**2. பாதுகாப்பிற்கான உரிமை**

- சுரண்டல்களிலிருந்து
- வன்முறைகளிலிருந்து
- மனிதமற்ற முறைகளிலிருந்து
- போர்க் கால கொடுரங்களிலிருந்து

**3. முன்னேற்றத்திற்கான உரிமை**

- விளையாட, கல்வி பெற, வளர்ச்சி பெற
- பராமரிப்பு பெற, சமூகப் பாதுகாப்பு பெற
- ஓய்வு கொள்ள, கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்க

**4. பங்கேற்பிற்கான உரிமை**

- கருத்துக்களை வெளிப்படுத்த
- தகவல் பெற
- சிந்திக்க, சிந்தனைப்படி நடக்க
- மதத்தை ஏற்க, கடைபிடிக்க

பிரிவு 1 - 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகளே.

பிரிவு 2- பாகுபாடின்மை-இனம் நிறம், பால், மொழி, சமயம், அரசியல், தேசியம், தேசிய இனம், இயலாமை, பிறப்பு இவைகளின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டப் பெறல் கூடாது.

பிரிவு 3—குழந்தையை மையப்படுத்துதல்- குழந்தைகளுக்கான செயற்பாடுகளில் குழந்தைகளுக்கான முதன்மைத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.

பிரிவு 5-பெற்றோர், குடும்பம், சமூகத்தின் உரிமைகளும் கடமைகளும் குழந்தைகளின் உரிமைகளைக் குழந்தைகள் சரியாகப் பயன்படுத்தும் வகையிலும், அவர்களின் ஆற்றல்களைச் சரியாக வெளிப்படுத்தும் வகையிலும் வளர்வதற்கான வழிவகைகள் செய்து தருவதிலும் பெற்றோர்களுக்கு இருக்கும் பொறுப்புகளை, உரிமைகளை உறுப்பு நாடுகள் மதிக்க வேண்டும்.

பிரிவு 6- வாழ்வும் முன்னேற்றமும்

1. ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமை உண்டு.
2. குழந்தைகள் உயிர் வாழவும் வளர்ச்சியை உத்தரவாதப்படுத்தவும் அரசு உறுதி செய்யவேண்டும்.

பிரிவு 7 — பெயரும் குடியுரிமையும்-குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகள் தமக்கென்று ஒரு பெயரையும்,ஒரு தேசத்தையும் கொள்ளுவதற்கு உரிமையுண்டு.

பிரிவு 8 — அடையாளத்தைப் பாதுகாத்தல்- குழந்தைகளின் தனித்த அடையாளம், தேசியம், பெயர் இவற்றை உறுப்பு நாடுகள் மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

பிரிவு 9 — பெற்றோரிடமிருந்துபிரிக்கப்படாமல்இருத்தல்- குழந்தைகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வைப்பதற்கான உரிமையில்லை.

பிரிவு 10 — குடும்பத்தோடு சேர்ந்து வாழ்தல்-ஒரு குழந்தை, தன் பெற்றோரோடு வாழ விரும்பி அவர்கள் வாழும் நாட்டிற்குச் செல்வதற்கோ அல்லது வேறு ஒரு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கோ ஒரு குழந்தையிடமிருந்து பெறும் விண்ணப்பத்தை அரசு மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும்.

பிரிவு 11 — சட்டத்திற்குப் புறம்பாக நாட்டிலிருந்து அனுப்புதல்- சட்டத்திற்குப் புறம்பாகக் குழந்தைகளை அந்நியநாட்டிற்கு அனுப்புதலை அனுமதிக்க முடியாது.

பிரிவு 12 — கருத்துக்களை வெளிப்படுத்துதல்- ஒரு குழந்தைக்குத் தனக்கான சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளும் உரிமை உண்டு. அக்கருத்துக்களைத் தைரியமாக எடுத்துரைக்க முடியும் என்ற உத்திரவாதத்தை உறுப்பு நாடுகள் உறுதியளிக்க வேண்டும்

பிரிவு 13-கருத்துக்களைத் தெரிவிக்கவும் செய்திகளைப் பெறுவதற்குமான சுதந்திரம். குழந்தைகளுக்குக் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமையுண்டு. வாய் மொழியாகவோ, அச்சு வடிவமாகவோ கலை இலக்கிய வடிவிலோ கருத்துக்களை அறியவும் பெற்றுக் கொள்ளவும் உரிமை உண்டு.

பிரிவு 14 - மனசாட்சிக்கும் சமயத்திற்குமான சுதந்திரம்- குழந்தைகளுக்குச் சிந்திக்கின்ற உரிமையும் மனசாட்சி உரிமையும்,சமய உரிமையும் உண்டு.

பிரிவு 15 - சங்கமாகும் உரிமை குழந்தைகள் குழுவாகக் கூடுவதற்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் உரிமை உண்டு.

பிரிவு 16 - அந்தரங்கம், மரியாதை, புகழ்- குழந்தைகளின் அந்தரங்கம், குடும்பம், வீடு மற்றும் கடிதம் போன்ற போக்குவரத்தின் மீது எந்தத் தலையீடுமின்றி மதிக்கப்பட வேண்டும்.

பிரிவு 17 - தகவல் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கான வாய்ப்பு-குழந்தைகளின் முழுவளர்ச்சியை கருத்தில் கொண்டு தேசிய அளவிலும் அகில உலக அளவிலும் சமூகத் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கின்ற செய்திகளைக் குழந்தைகள் பெறுகின்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

- ❖ குழந்தைகள் தொடர்பான நூல்கள் உருவாக்கப்பட வேண்டும்
- ❖ சிறுபான்மைச் சமூகம் சார்ந்த குழந்தைகளின் மொழி சார்ந்த தேவைகளைக் காக்கும் வகையில் சமூகத் தொடர்பு சாதனங்களின் செயல்பாடு அமைதல் வேண்டும்.

பிரிவு 18 - பெற்றோரின் கடமைகள்- தாய் தந்தை இருவருக்கும் குழந்தையை வளர்த்தெடுக்கவும் அவர்தம் முழுமையான வளர்ச்சிக்கு வழிகாணவும் கடமையுண்டு.

பிரிவு-19-தவறான முறையில் பயன்படுத்தப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும்

உடல், மனரீதியான வன்முறைகளிலிருந்தும், சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறையிலிருந்தும் புறக்கணித்தல், அவமானப்படுத்துதலிருந்தும் பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

பிரிவு 20 பெற்றோர் இல்லாச் சூழலில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு

ஒரு குழந்தை அதன் குடும்பச் சூழலிலிருந்து பிரிந்து வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டால் அந்தக் குழந்தைக்குக் கூடுதல் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

பிரிவு 21 - தத்தெடுத்தல்

அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மட்டுமே குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளன என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மட்டுமே குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளன என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும்.

பிரிவு 22 - அகதிக் குழந்தைகள்

அகில உலக அல்லது உள்நாட்டு சட்டத்திற்கு உட்பட்டு, அகதி அந்தஸ்து கோரும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பெற உரிமை உண்டு.

பிரிவு 23 - ஊனமுற்ற குழந்தைகள்

உடல் மற்றும் உள்ள ரீதியாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முழுமையான வாழ்வு பெறவும், அவர்தம் மாண்பும், சுயசார்பும், சமூகப் பங்கேற்பும் பாதுகாக்கப் பெற உரிமை உண்டு.

பிரிவு 24 - குழந்தைகளின் நல உரிமை

ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான உடல்நலத்தை அனுபவித்திட உரிமையுண்டு. உடல் நலம் என்பது சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் உள்ளடக்கியது.

- அரசு, குழந்தை மரணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

- ஊட்டச்சத்துக் குறைவையும் நோய்களையும் எதிர்த்திடப் போதுமான சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் வழங்கிட வேண்டும்.
- தாய்மார்களுக்குக் கர்ப்பக்காலத்திலும் பிரசவத்திற்குப்பின்பும் தேவையான நலபாதுகாப்புக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்

பிரிவு 26 - சமூகப் பாதுகாப்பு

ஒவ்வொரு குழந்தையும் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமை உண்டு. இப்பாதுகாப்பை அனைத்துக் குழந்தைகளும் பெறும் அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு 27 - குழந்தைகளின் வாழ்க்கைத் தரம்

குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கருதிக் குழந்தைகளின் தரமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

பிரிவு 28 - கல்வி உரிமை

- ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசத் தரமான கட்டாய ஆரம்பக் கல்விக்கு உரிமை உண்டு.
- ஒவ்வொரு குழந்தைக்கும் தொழிற்கல்வி உயர்நிலைக்கல்வி வாய்ப்புகள் எளிதில் கிட்டக் கூடியதாய் அமைதல் வேண்டும்.
- குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனிமனித ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் மனரீதியான திறமைகள் வெளிப்படும் அளவுக்கு அமைதல் வேண்டும்.

பிரிவு 29 - கல்வியின் நோக்கம்

குழந்தையின் கல்வி குழந்தையின் ஆளுமையையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் வகையிலும், மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் வளர்த்தெடுக்கும் வகையிலும் அமைதல் வேண்டும்.

பிரிவு 30 - சிறுபான்மையினரும் பூர்விக இனக் குழந்தைகளும்

சமய, மொழி, இனம், (சிறுபான்மை) சமூகம் சார்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் சார்ந்த கலாச்சாரத்தை அனுபவிக்கவும் ஒரு குறிப்பிட்ட சமயத்தைத் தழுவிக் கடைபிடிக்கவும் அவர்தம் தாய்மொழியைப் பயன்படுத்தவும் உரிமையுண்டு.

பிரிவு 31 - விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு

அனைத்துக் குழந்தைகளுக்கும், ஓய்வெடுக்கவும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கை அனுபவிக்கவும் கலாச்சார வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமையுண்டு.

பிரிவு 32 - பொருளாதாரச் சுரண்டல்

பொருளாதாரச் சுரண்டலிலிலிலிருந்தும், அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுதலிலிருந்தும் குழந்தைகளின் உடல், மன, ஆன்ம, ஒழுக்க, மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எந்த ஒரு வேலையைச் செய்வதிலிலிருந்தும் பாதுகாப்புபெற உரிமையுண்டு.

பிரிவு 33 - போதைப்பொருள்உபயோகம்

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதிலிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு பெறும் வகையில் அரசு சட்டப்பூர்வ, சமூக, நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பிரிவு 34 — பாலியல் சுரண்டல்

எல்லா வகையான பாலியல் ரீதியான சுரண்டல்களிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமையுண்டு.

பிரிவு 35 — விற்றலும் கடத்தலும்

எந்த நோக்கத்திற்காகவும் எந்த விதத்திலும் குழந்தைகளை வாங்குவதை, விற்கப்படுவதைக், கடத்தப்படுவதை, இடம்பெயர்க்கப்படுவதை தடுப்பதற்குத் தேவையான தேசிய அளவிலான இரு நாடுகளுக்கிடையேயான பலநாடுகளுக்குகிடையேயான எல்லா நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

பிரிவு 36 சித்ரவதை, சுதந்திரமின்மை, கொடூரத்தண்டனை

எந்தக் குழந்தையையும் சித்ரவதை, மனிதாபிமானமற்ற நடவடிக்கை, கொடூரமான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது.

## பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான சர்வதேச உடன்படிக்கை (1979)CEDAW

பிரிவு– 1 **பாகுபாடு காட்டாமை**

பாலியல் அடிப்படையில் மனித உரிமைகளை, அடிப்படைச் சுதந்திரங்களை பெண்கள் அனுபவிப்பதிலிருந்து பாகுபடுத்தவோ, ஒடுக்கவோ, ஒதுக்கவோ கூடாது.

பிரிவு– 2 **சட்ட பாதுகாப்பு மற்றும் எதிரான சட்டங்கள் ஒழிப்பு**

அய்.நாவின் உறுப்பு நாடுகள் தங்கள் அரசியல் சாசனங்களில், பெண்கள் உரிமைக்கெதிரான பகுதிகளை அகற்றப்பெற வேண்டும். எந்த ஒரு நபராலோ நிறுவனத்தாலோ பெண்கள் பாகுபடுத்தப்படுவாராயின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுங்குகள், பெண்கள் மீதான பாகுபடுத்தலுக்குத் துணை போகுமானால் அச்சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

பிரிவு– 3 **அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உத்தரவாதம்**

பெண்களின் முழுவளர்ச்சியைக் கவனத்திற் கொண்டு, அரசு உரிய நடவடிக்கை எடுப்பதோடு தேவையான சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

பிரிவு– 4 **நேர்மறைப் பாகுபாடு**

பெண்களின் உண்மையான சமத்துவம் கருதி அரசு முன்னெடுக்கும் பெண்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை, ஆண்களுக்கு எதிரான பாகுபாடாகக் கருதக் கூடாது.

பிரிவு– 5 **கற்பிதங்கள் ஒழிக்கப் பெறல்**

பெண்கள் மீது மரபுரீதியாக சமூக, கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன் தீர்மானக் கருத்துக்களை, உயர்வு தாழ்வு கற்பிக்கும் கற்பிதங்களை போக்க அரசு முயலவேண்டும்.

பிரிவு– 6 **பாலியல் சுரண்டல் ஒழிப்பு**

பெண்களை கடத்தல், பாலியல் ரீதியாகச் சுரண்டல் என்பன தடை செய்யப்பட வேண்டும்.

பிரிவு– 7 **அரசியல் மற்றும் பொது வாழ்கையில் பங்கேற்பு**

தேர்தலில் பங்கு பெறவும், அரசுத் திட்டங்களை வகுத்தலிலும் நடைமுறைப்படுத்துவதிலும் , அரசு சாரா நிறுவனங்களில் பங்கு பெறவும் பெண்களுக்கு உரிமையுண்டு.

பிரிவு– 8 **பங்கேற்பு**

எவ்வித பாகுபடுத்தலுக்கும் உள்ளாக்கப்பெறாமல், தேச, சர்வதேச நிறுவனங்களின் பணியில் பங்குபெறும் உரிமை மறுக்கப்பெற கூடாது.

பிரிவு– 9 **தேசிய இனம்**

தாம் சார்ந்த தேசிய இனங்களை மாற்றிக்கொள்ள பெண்களுக்கு உரிமையுண்டு.

பிரிவு– 10 **கல்விக்கான உரிமை**

ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துவகை கல்வியைப் பெறவும், கல்விக்கான சலுகைகளைப் பெறவும் உரிமையுண்டு. தொழில், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பெறவும்

உரிமையுண்டு.

பிரிவு– 11 **வேலைவாய்ப்பு**

விரும்பிய வேலையை தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்குண்டு. சம ஊதியம், சலுகைகள் பெறவும், சமமாக நடத்தப்பெறவும், சமூக பாதுகாப்பு பெறவும் உரிமையுண்டு. சம்பளத்தோடு கூடிய மகப்பேறு கால விடுமுறைக்கும் உரிமையுண்டு.

பிரிவு– **நலவுரிமை**

12 பெண்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது. பெண்கள் கருவுற்ற நிலையிலும், பிரசவ காலங்களிலும் பெண்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்க வேண்டுவது அரசின் கடமையாகும்.

பிரிவு– **சமூகப் பொருளாதார வாய்ப்புகள்**

13 நாடுகள் பெண்கள் மீது பாகுபாட்டின் அடிப்படையில் பொருளாதரம் மற்றும் சமுதாய வாழ்க்கையில் பங்குப் பெறும் உரிமைகள் மறுக்கப்படாமல் சமத்துவமாக நடத்த வேண்டும். வங்கி கடன், கலாச்சார மற்றும் விளையாட்டில் பங்குப் பெறும் உரிமையை உறுதிச் செய்ய வேண்டும்.

பிரிவு– **கிராமப்புற பெண்கள் நலன்**

14 இவ்வுடன்படிக்கைகளில் தரப்பெறும் அனைத்து உரிமைகளும் கிராமப்புற பெண்களுக்கும் கிடைக்க வகை செய்யப்பெறல் வேண்டும். அரசின் திட்டங்களிலும் நடைமுறைப்படுத்தலிலும் பங்குபெற, நடைமுறைப்படுத்த உரிமையுண்டு. சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் பங்குபெற, சுய உதவிக் குழுக்களை உருவாக்க, சமூக நடவடிக்கையில் கலந்து கொள்ளவும் உரிமையுண்டு.

பிரிவு– **சட்டத்தின் முன் அனைவரும் சமம்**

15 ஆண்களைப் போலவே சட்டத்தின் முன் சமமாகக் கருதப்பட வேண்டும்.

பிரிவு– **திருமணம் மற்றும் குடும்பம்**

16 திருமணம் செய்துகொள்ள, கணவனைத் தெரிவு செய்ய, தேவையெனில் நிராகரிக்க, குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிக்க, குழந்தைகளுக்கு வேண்டிய கல்வியைத் தெரிவு செய்திட, குடும்பப் பெயரைத் தெரிவு செய்ய உரிமையுண்டு.

# பாகுபாடு (Discrimination)

பிறப்போக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்.

என்றார் வள்ளுவப் பெருந்தகை. மனிதர்கள் மட்டுமல்ல இப்பூமிபந்தில் பிறந்து வாழும் ஒவ்வொரு உயிரினமும் சம அந்தஸ்தும் சம உரிமையும் வாய்க்கப் பெற்றவை என்ற அடிப்படையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே உலகப் பொதுமறையாம் திருக்குறள் உலகிற்கு இதை பறைசாற்றுகிறது.

**பாகுபாடு ஒரு பார்வை**

உலக மக்கள் இனங்களிடையே கடந்த சில நூற்றாண்டுகளாக வெள்ளை இனமே ஆளப் பிறந்தவர்கள் என்றும் மற்ற நிறத்திற்கு இத்தகைய தகுதி இல்லை என்றும் இனங்களிடையே பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது. அரசு அதிகாரத்தின் மூலம் வெள்ளை நிறவெறியை வலுவாக செலுத்தத் தொடங்கிய ஐரோப்பியர்கள் உலகையே சந்தைகளாக்கி பிற இனமக்களை குறிப்பாக கறுப்பர்களை (நீக்ரோக்களை) ஆடு மாடுகளைப் போல் விலங்குகளாகக் கருதி அடிமை வாணிகம் – வியாபாரம் செய்யத் தொடங்கினர். இனப்பாகுபாடு உணர்ச்சியும் ஆதிக்கமும் இந்த நிலையிலிருந்து தொடங்கியது எனலாம். இந்த நிலை 20ஆம் நூற்றாண்டில் இட்லரின் மூலமாக மேலும் உரமிட்டு வளர்க்கப்பட்டது. வெளியிலிருந்து வந்த வெள்ளை நிற மக்கள் இந்திய மண்ணின் பழங்குடிமக்களாகிய கருமை நிற மக்களை தாழ்வாக கருதியதன் விளைவாக இந்திய சமூக அமைப்பு சாதிய அமைப்பாக கட்டமைக்கப்பட்டது. அதற்கு சமூக அமைப்பில் நான்கு வர்ண கோட்பாடு தெளிக்கப்பட்டது. அந்த நான்கு சாதிகளும் கடவுளின் படைப்புகளாக கருதி ஒரு தெய்வீக மூலம் கற்பிக்கப்பட்டது. இந்த சாதிய அமைப்பு இறைவன் ஏற்பாடு என்பதால் அது மாறக்கூடாது தெய்வீகமானது என்றும், நிலைத்து நிற்பது என்றும், நான்கு சாதிகளும் மேல் கீழ் என்று இறைவனால் படைக்கப்பட்டதால் நியாயமானது என்றும் கற்பிதம் செய்யப்பட்டது. இந்த நான்கு சாதிகளின் பெருக்கமே நான்காயிரம் சாதிகளாக பெருகியது. இதன்பிறகுதான் இந்திய சமூக அமைப்பு இப்படி ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பாக உருவாகியது. மேலிருந்து கீழ் சாதிகள் என்றும், கீழிலிருந்து மேல் சாதி என்றும் பிளவும், பாகுபாடும் உருவாக்கப்பட்டது. இந்தப் பாகுபாடு மனிதனால் மட்டுமே உருவாக்கப்பட்டது என்பதை உணர்ந்தவர்கள் இந்த பாகுபாட்டிற்கு எதிராக குரல் எழுப்பியே வந்துள்ளனர்.

அடிப்படையில் மனித இனம் ஒருவருக்கு ஒருவர் எந்த வகையான வேறுபாடு கொள்வதற்கும் நியாயமில்லை என்ற வகையில், ஒருவரின் உரிமையில் மற்ற ஒருவர் தலையிடுவதற்கு உரிமையில்லை. எனவே அடுத்தவர் உரிமையில் குறுக்கிடுவது என்பது மனித உரிமை மீறலே. எனவே இனப்பாகுபாடு சாதிப்பாகுபாடு மனித உரிமை மீறல்களாகவே வரையறை செய்யப்படுகிறது. இந்த சமூக அமைப்பில்

சரி பாதியாக உள்ள பெண்களும் கீழ் நிலைக்கு தள்ளிவிடப்பட்டுள்ளனர். அதனால் பெண்கள் உரிமை உள்ள பிறவியாகவே கருதப்படுவதில்லை.

விவசாய சமூதாயமாகிய நம் நாட்டில் உழைப்பின் ஒவ்வொரு நிலையிலும் வேறுபாடற்ற வகையில் ஆணும் பெண்ணும் உழைத்தும், பிழைத்தும் வருவதை சமமாக பங்கிட்டும் கணவனும் மனைவியுமாக சம உரிமையுடன் குடும்ப அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக பாகுபாடுகளை நியாயப்படுத்த கூடியவர்களே பெண்களை தங்களை விட கீழானவர்கள் தாழ்ந்தவர்கள் என கருதி பெண்களின் உரிமைகளை மறுத்தார்கள். பெண்களுக்கு எதிராக நடப்பதும் பெண்களின் மீது நடத்தும் வன்முறை வாழ்வியல் உரிமைகளின் குறுக்கிடுவதும் மனித உரிமை மீறல்களே. இந்த ஏற்றத்தாழ்வான சாதிய சமூக அமைப்பில்தான் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெண்கள் மனித பிறவிகளாக கருதப்படுவதில்லை. பெண்களை அடிமைகளாக்கி அவர்கள் தங்கள் உரிமைகளுக்கு மீறி எழுகிறபோது ஸ்டவ் வெடிப்பது அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. விளையாடுவதற்கும், விரும்பியவாறு பள்ளிக்கு சென்று கல்வி பெற முடியாதவர்களாக வறுமையின் கோரப்பிடியில் கோடிக்கணக்கான குழந்தைகளின் குரல்வளை நெறிக்கப்பட்டு கிடக்கிறார்கள். இப்படி வறுமையில் உள்ள குழந்தைகள் படிக்க வசதியின்றி கொத்தடிமை குழந்தைகளாக குழந்தைத் தொழிலாளராக வாழ்ந்து வருகிறார்கள்.

நம் நாட்டில் பெரும்பான்மையினராக கருதிக்கொண்டு இனத்தால், மொழியால், மதத்தால் குறைந்த எண்ணிக்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுத்து மனித உரிமை மீறல்களை செய்து வருகின்றார்கள். தங்களது மொழியினை சிறுபான்மை மக்கள் மீது திணித்து சிறுபான்மை மக்களின் மொழி உரிமைகளை மறுத்து பாகுபாடாக நடத்துகிறார்கள். வாழ்வுரிமை மறுத்து அவர்கள் குடிமக்கள்தான் என்பதையும் அங்கீகரிக்க மறுக்கிறார்கள். இப்படி ஒரு தேசிய இனத்தையும் மொழி சிறுபான்மையினரையும் மதச் சிறுபான்மையினரையும் பாகுபாடாக நடத்துவதும் மனித உரிமை மீறலே.

இந்நிலையில் இனவெறிக்கு எதிராக சாதிய பாகுபாட்டிற்கு எதிராக, இழிவாக நடத்துவதற்கு எதிராக, குழந்தைகளை அவர்கள் போக்கில் வாழ்வதற்கு எதிராக, மத, மொழி, சிறுபான்மை உரிமைகளை மறுக்கும் ஆதிக்கவாதிகளுக்கு எதிராக இத்தகைய பாகுபாடுகளைக் கொண்டு வரும் இனங்களுக்கெதிராக, நாடுகளுக்கு எதிராக உலகு எங்கிலும் பரந்துபட்டு மனித உரிமை ஆர்வலர்களும், மனித மாண்பினை காப்பதற்கான அமைப்புகளும் போராடியதன் விளைவாகத்தான் ஊஎநுசுனு, ஊஎநுனுஹறு, ஊசுஊ உருவாக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டில் இத்தகைய சாதிய பாகுபாட்டிற்கு எதிராகவும், பெண்களின் உரிமைகளுக்காகவும், குழந்தைகளை காப்பதற்காகவும், மொழி, மத சிறுபான்மையினரை பாதுகாக்கவும் இந்திய அரசமைப்புச் சட்டங்களும் பிற சட்டங்களும் உறுதியளிக்கின்றன.

**பாகுபாடு என்றால் என்ன?**

பாகுபாடு என்றால் இன, நிற, பிறப்பு, தேசிய, மரபு, பாலின, உடல் ஊனமுற்ற அடிப்படையில் அரசியல், பொருளியல், சமூக பண்பாடு மற்றும் பொது வாழ்வின் அனைத்து தளங்களிலும் உள்ள மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்களை மறுக்கின்ற அவற்றின் பயன்பாட்டு அடையாளங்களை அழித்து ஒழிக்கின்ற நோக்கத்தையும், தாக்கத்தையும் உள்ளடக்கிய எந்த வேறுபாடோ பிரிவினையோ, ஒதுக்கவோ, கட்டுப்பாடோ அல்லது முன்னுரிமை அளித்தலோ அதுவே பாகுபாடு என்பதாகும்.

**பாகுபாடு – ஒரு கண்ணோட்டம்**

பாகுபாட்டைக் களையும் நோக்கில் உலகின் பல்வேறு நாடுகளும் இந்தியா உட்பட உலகம் முழுவதும் பல்வேறு சட்டங்களையும், உடன்பாடுகளையும் இயற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றன. இருப்பினும் அனைத்து விதமான பாகுபாட்டிற்கெதிரான பல சம்பவங்களை நாம் அன்றாடம் நேரிலும், பத்திரிகை, தொலைக்காட்சிகளிலும் கண்ணுற்றும் வருகிறோம்.

இதற்கான முக்கிய காரணிகளாக விளங்குபவை காலம் காலமாக எளியவரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணமும், புரையோடிய ஆணாதிக்கமும், சக மனிதனை எண்ணாத போக்கும் நிலப்பிரப்புத்துவ முறைகளுமே ஆகும்.

வளரும் நாடுகளில் இப்போது சரியான சமூக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இம்மாற்றங்கள் பாகுபாட்டைக் களையும் நாள் வெகு தொலைவில் இல்லை. செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பண்பாடு (ஆண்களுக்கான கடமைகள், தலைவர்களுக்கான கடமைகள், சாதிய கடமைகள் மற்றும் பல) களைந்தெறியப்பட்டு, நவீன அரசின் அதிகாரத்தைக் கொண்டு மனித மாண்புகளை உரிமைப்படுத்தும் உரிமைகள் உருவாகி உள்ளன.

இத்தகைய உரிமைகள் இந்தியாவில் சட்டங்கள் மூலம் வரையறை செய்யப்பட்டு குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதைப்போல சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் உலக அரங்கின் முக்கிய கூறான ஐ.நாவால் வரையறை செய்யப்பட்டு உலகின் பல நாடுகளால் கையெழுத்திடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பாகுபாட்டிற்கு எதிரான சட்டப்பிரிவுகள்

தற்போது பரவலாக நம் அனைவரால் விவாதிக்கப்படும் மனித உரிமை என்ற சொல் ஏற்கனவே நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 14 முதல் 32 வரை நமது அடிப்படை உரிமைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

**சமத்துவத்திற்கான உரிமை**

பிரிவு 14இன்படி சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்திய எல்லைக்குள் எந்த ஒரு நபரையும் சட்டத்தின் முன் வேறுபடுத்தியோ அல்லது சட்டத்தால் வழங்கப்படும் பாதுகாப்பில் வேறுபாட்டையோ அரசு செய்யக்கூடாது.

### பிரிவு 15இன் படி மதம், இனம், சாதி, பாலின, பிறப்பிடம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி வேறுபடுத்துவதை தடை செய்தல்

எந்த ஒரு குடிமகனையும் மதம், இன, சாதி, பாலின, பிறப்பிடம் அல்லது எவற்றைக் கொண்டும் யாவரும் வேறுபடுத்தக்கூடாது. இது அரசின் உதவித்தொகை, பொதுக்கிணறு பயன்பாடு போன்றவற்றிற்கும் பொருந்தும். அதே வேளையில் அரசால் பெண்கள், குழந்தைகளுக்கு இயற்றப்படும் சட்டங்களுக்கு பொருந்தாது.

### பிரிவு 16இன் படி அரசின் அனைத்துத் துறைகளிலும் சம வாய்ப்பு அளிக்கப்படுதல்

அரசின் எந்தத் துறையிலும் அனைத்துக் குடிமக்களுக்கும் சம வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதைப்போல் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசு வழங்கி உள்ள இட ஒதுக்கீட்டை இது கட்டுப்படுத்தாது.

### பிரிவு 17இன் படி தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. எந்த வகையிலும் அது பின்பற்றப்படுவது தடை செய்யப்படுகிறது. தீண்டாமை பின்பற்றப்படுவதால் பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டால் அதை குற்றமாகக் கருதி சட்டத்தின் வாயிலாக தண்டனை வழங்கப்படும்.

## இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கை

### பிரிவு 1

1. இவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனப்பாகுபாடு என்பதன் பொருள், இனத்தின், நிறத்தின், பிறப்பின், தேசிய இனத்தின், மரபின் அடிப்படையில் அரசியல், பொருளியல், சமூக, பண்பாட்டு மற்றும் பொதுவாழ்வின் ஏனைய தளங்களிலும் உள்ள மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களை ஒன்றுமில்லாமல் ஆக்குகிற அவற்றின் பயன்பாட்டு அடையாளங்களை அழித்து ஒழிக்கிற நோக்கத்தையும் தாக்கத்தையும் உள்ளடக்கிய எந்த வேறுபாடோ பிரிவினையோ, ஒதுக்கலோ, கட்டுப்பாடோ அல்லது முன்னுரிமை அளித்தலோ ஆகும்.

### பிரிவு 2

1. இன ஒதுக்கலைக் கண்டனம் செய்யவும், இன ஒதுக்கலின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பதற்குத் தேவையான திட்டத்தை தாமதமின்றி சரியான முறையில் மேற்கொள்ளவும் எல்லா இனங்களுக்குமிடையே புரிதலை ஏற்படுத்தவும் உறுப்பு நாடுகள் முனைய வேண்டும். அதற்காக

இ) தேசிய மற்றும் உள்ளூர் அளவில் இன ஒதுக்கலைத் தூண்டும் அல்லது வளர்க்கும் சட்டங்களையும் விதிகளையும் திருத்தவும், மறுபரிசீலனை செய்யவும் அல்லது முற்றிலுமாக நீக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஈ) இன ஒதுக்கலை மேற்கொள்ளும் மனிதரையும் குழுக்களையும் அமைப்புகளையும் எல்லா வழிமுறைகளையும் சட்டங்களையும் பயன்படுத்தித் தடுக்கவும் அவற்றை முடிவுக்கு கொண்டு வரவும் ஒவ்வொரு நாடும் முனைய வேண்டும்

உ) இனங்களுக்கிடையிலான தடைகளை ஒழித்து ஒற்றுமையை ஏற்படுத்தும் பல இன அமைப்புகளையும் இயக்கங்களையும் நாடுகள் ஊக்கப்படுத்த வேண்டும். மாறாக இனப்பிரிவினையை வலுப்படுத்துபவற்றைத் தடுக்க வேண்டும்.

2.குறிப்பிட்ட இனக்குழுக்கள் மற்றும் தனிநபர்கள் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் நிறைவாகவும் சமமாகவும் அனுபவிக்க உத்தரவாதம் அளிக்கும் நோக்கில் சமூக பொருளாதார பண்பாடு மற்றும் இதர தளங்களில் அவர்களது பாதுகாப்பு மற்றும் முழுமையான மேம்பாட்டிற்குச் சிறப்பான உறுதியான நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கம் நிறைவேறிய பிறகு பல்வேறு இனக் குழுக்களின் சமமற்ற தனித்த உரிமைகளைப் பராமரிக்க இந்த நடவடிக்கைகளைப் பயன்படுத்தக்கூடாது.

## பிரிவு 3

நிறவெறியை இன ஒதுக்கலை கண்டனம் செய்யவும், தத்தம் எல்கைக்குட்பட்ட பகுதிகளில் அவற்றைத் தடுக்கவும் தடை செய்யவும் அவற்றின் எல்லா வடிவங்களையும் ஒழிக்கவும் உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பிரிவு 4

இனவெறுப்பை ஒதுக்கலை ஏதாவது ஒரு வடிவத்தில் நியாயப்படுத்த முனையும் அல்லது வளர்த்தெடுக்கும் ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது ஒரு குறிப்பிட்ட நிறத்தைச் சார்ந்த குழுவின் மேலாண்மைக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு செயல்படும் அமைப்புகளையும் பிரச்சாரங்களையும் உறுப்பு நாடுகள் கண்டிக்க வேண்டும். அத்தகைய இன ஒதுக்கலைத் தூண்டும் செயல்களை முற்றிலும் ஒழிக்க அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறியுள்ளபடி (குறிப்பாக பிரிவு 5) செயல்பாட்டு நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும். இதற்கிடையே

(அ) இன மேலாண்மை, வெறுப்பு அடிப்படையிலான கருத்துக்களைப் பரப்புதல், இப்பாகுபாட்டைத் தூண்டல், எந்த நிறக் குழுக்களுக்கும் எதிராக வன்முறையைத் தூண்டும் செயல்கள், இன வெறி செயல்களைத் தூண்டல், அவற்றுக்கு நித உதவி செய்தல் போன்றவை சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவிக்க வேண்டும்.

(ஆ) இன ஒதுக்கலைத் தூண்டுகிற, வளர்க்கிற அமைப்புகளை, நிறுவனங்களை மற்றும் பிரச்சாரங்களைச் சட்டத்திற்குப் புறம்பானவையாக அறிவித்து தடை செய்ய வேண்டும். இத்தகைய இயக்கங்களின் செயல்களில் பங்கேற்பதை குற்றமாக அறிவிக்க வேண்டும்.

(இ) தேசிய, உள்ளூர் மட்டத்திலான அரசு அதிகாரிகளை, அரசு நிறுவனங்களை இன ஒதுக்கலைத் தூண்டவோ, வளர்க்கவோ அனுமதிக்கக்கூடாது.

## பிரிவு 5

இவ்வுடன்படிக்கையின் இரண்டாம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ள அடிப்படை கடமைகளின்படி இன ஒதுக்கலின் எல்லா வடிவங்களையும் ஒழிக்கவும், தடை செய்யவும், இன, நிற, தேசிய, மரபு ரீதியான பாகுபாடுகளின்றி சட்டத்தின்முன்பு அனைவரும் சமமாக நடத்தப்படுவதை, குறிப்பாக கீழ்காணும் உரிமைகளை அனுபவிப்பதை உறுப்பு நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

(அ) தீர்ப்பாயங்கள் மற்றும் நீதி வழங்கும் அமைப்புகளின் முன்பு சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை

(ஆ) அரசு அதிகாரிகளோ, தனிப்பட்ட குழுவோ, நிறுவனமோ தனி மனிதர்களின் மீது வன்முறையை உடல் ரீதியான துன்புறுத்தலை மேற்கொள்வதற்கு எதிராக அரசு தனிமனிதருக்கு வழங்குகிற பாதுகாப்பு குறித்த உரிமை

(இ) அரசியல் உரிமைகள் குறிப்பாகத் தேர்தலில் பங்கெடுப்பது வாக்களிப்பது அனைவருக்குமான சம உரிமை அடிப்படையில் அரசியலிலும் பொதுவாழ்வின் எல்லா நிலைகளிலும் ஈடுபடுவது, பொதுப்பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை.

(ஈ) மற்ற குடி உரிமைகள் குறிப்பாக

1. நாட்டின் எல்கைக்குள் எவ்விடத்திற்கும் இடம் பெயர்ந்து குடியிருத்தலுக்கான சுதந்திரம் (உரிமை)
2. நாட்டினைவிட்டு வெளியேறுவதற்கும் திரும்புவதற்கும் உரிமை
3. ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்திருப்பதற்கான உரிமை
4. வாழ்க்கைத் துணையைத் தெரிவுபடுத்தும் திருமணம் புரிவதற்குமான உரிமை
5. தனித்தும் பிறரோடும் இணைந்தும் சொத்து வைத்திருப்பதற்குமான உரிமை
6. வாரிசு உரிமை
7. சுதந்திரமான கருத்துரிமை, சிந்தனை உரிமை, மத உரிமை
8. சுந்திரமான கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதை வெளிப்படுத்துவதற்குமான உரிமை
9. அமைதியாகக் கூடுவதற்கும் அமைப்பு ஏற்படுத்துதலுக்குமான உரிமை

உ) பொருளியல் சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் குறிப்பாக

1. வேலை செய்வதற்கான உரிமை, சுதந்திரமாக வேலையைத் தெரிவு செய்வதற்கான உரிமை, வேலை செய்வதற்கேற்ற இயைந்த சூழல், வேலையின்மைக்கு எதிரான பாதுகாப்பு, சம வேலைக்கேற்ற சம ஊதியம், நியாயமான, தகுந்த ஊதியம் பெறுவதற்கான உரிமை
2. தொழிற்சங்கங்களை உருவாக்கவும் அதில் பங்கேற்கவுமான உரிமை
3. வசிப்பிட உரிமை
4. பொதுச் சுகாதாரம், மருத்துவநலம், சமூக சேவை மற்றும் சமூகப் பாதுகாப்புகளுக்கான உரிமை
5. கல்வி மற்றும் பயிற்சிக்கான உரிமை
6. பண்பாட்டுச் செயல்பாடுகளில் சம பங்கேற்பிற்கான உரிமை
7. போக்குவரத்து விடுதிகள் சிற்றுண்டியகங்கள் திரையரங்குகள் பூங்காக்கள் போன்ற பொதுமக்கள் பயன்படுத்தும் இடங்களில் புழங்குவதற்கான உரிமை

## பிரிவு 6

இவ்வுடன்படிக்கைக்கு எதிராக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மீறுகிற எந்த இன ஒதுக்கல் செயல்களையும் எதிர்த்து தங்கள் நீதி பரிபாலன மற்றும் ஏனைய அரசு அமைப்புகள் வழியாக தகுந்த பாதுகாப்பும், தீர்வும் அனைவரும் பெற்றுக்கொள்ள உறுப்பு நாடுகள் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இன ஒதுக்கலின் விளைவாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அவ்வமைப்புகளின் மூலமாக சரியான நிவாரணம் பெறும் உரிமையையும் உறுதி செய்ய வேண்டும்.

## பிரிவு 7

இன ஒதுக்கலுக்கு இட்டுச் செல்லும் தப்பெண்ணங்களைத் தடுப்பதற்காகக் கல்வி, பண்பாடு, பயிற்சி மற்றும் தகவல் போன்ற தளங்களில் சிறப்பான செயல்பாடுகளை உடனே உறுப்பு நாடுகள் முனைப்போடு செயல்படுத்த வேண்டும். தேசங்கள், இனங்கள், மரபுக் குழுக்களிடையில் புரிதலை தோழமையை, சகிப்புத் தன்மையை வளர்க்கவும், அய்.நா சாசனம், அகில உலக மனித உரிமைப் பிரகடனம் போன்றவற்றின் நோக்கங்களையும் கொள்கைகளையும் பிரச்சாரம் செய்யவும், இன ஒதுக்கலின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பது குறித்த பிரகடனத்தைப் பரப்புவதை முடுக்கி விடவும் அனைத்து முயற்சிகளையும் இவை மேற்கொள்ள வேண்டும்.

# பெண்களும் சமத்துவமும்

– அமார்த்தியா சென்

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் பாலின சமத்துவம் குறித்து பல முக்கியவத்துவம் வாய்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். குடும்ப அமைப்பு குறித்து அவருடைய கோட்பாடானது குடும்பம் என்பது கூட்டுறவையும் அதே சமயத்தில் சமத்துவமின்மையையும் குடும்பத்திற்குள்ளான உறுப்பினர்களுக்கு இடையிலான பாரபட்சத்தையும் கொண்டது என்று விவரிக்கின்றது. நாட்டின் வளர்ச்சிப் போக்கில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் அவர்களின் உயிர் வாழ்தலைக் கேள்விக்குள்ளாக்குகிறது என்று கூறும் சென் அவருடைய சக ஆய்வாளர் ஜுன் டிரிசுடன் இணைந்து வளர்ச்சிப்போக்கில் எதிர் கொள்ளும் பாகுபாடுகளினால் பெண்களின் உயிர் வாழும் உரிமையே முடக்கப்படுகிறது. கருக்கொலை, சிசுக்கொலை, சத்துணவு, மறுப்பு ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் ஆகியவற்றினால் இதுவரை 100 மில்லியன் பெண்களுக்கு மேல் காணாமல் போயிருக்கலாம் என்று ஆய்வின் மூலம் மறுக்கப்பட்டு பெண்களே காணாமல் போவது என்று இவர்கள் முன் வைக்கும் கருத்தாக்கமானது பிரச்சினையின் தீவிரத்தைப் புரிந்துகொள்ள புதிய வழியைக் காட்டுகின்றது. இங்கு இத்தகைய கண்ணோட்டத்துடன் சென் ஹார்டுவார்டு பல்கலைக்கழகத்தில் ஆற்றிய கருத்துரையின் சுருக்கமானது தரப்படுகின்றது.

## சமத்துவமின்மையின் ஏழு வகைகள்

இன்றைய சமூகமானது ஆண், பெண்களுக்கிடையில் கடுமையான ஏற்றத்தாழ்வைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சமூகத்திலும், தேசிய இனத்திலும், வர்க்கத்திலும் துன்பங்களின் சுமையானது பெண்களின் மீதே விழுகின்றது. ஆண், பெண்களுக்குச் சமமற்ற பங்கீடுள்ள ஓர் உலகத்திலேயே நாம் வாழ்கிறோம். உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் ஜப்பானிலிருந்து மெக்சிகோ வரை, உஸ்பெக்கிஸ்தானிலிருந்து அமெரிக்கா வரை நிலவுகிறது. ஆனால் எல்லா நாடுகளிலும் சமத்துவமின்மை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சமத்துவமின்மையானது பல வடிவங்களில் வகைகளில் நிலவுகின்றது.

### 1. இறப்பில் சமத்துவமின்மை

உலகின் சில பகுதிகளில் ஆண், பெண்களுக்கிடையிலான சமத்துவமின்மையானது மரண விகிதத்தில் வேறுபாட்டைக் காட்டுவதன் மூலமாகக் கொடூரமான வடிவத்தை எடுத்துள்ளது. மொத்த மக்கள் தொகையின் மரண விகிதத்தில் பெண்களின் மரண விகிதமானது அதிகமாக உள்ளது. வட ஆப்பிரிக்காவிலும், சீனா மற்றும் தெற்காசியா உள்ளிட்ட ஆசியாவிலும் பெண்களின் மரண விகிதம் அதிகமாக உள்ளதைக் காணலாம். ஆனால் அதே சமயத்தில் சுகாதார பராமரிப்பிலும் சத்துணவிலும்

பாரபட்சம் கடைப்பிடிக்கப்படும் நாடுகளிலும் பெண்களின் மரண விகிதங்கள் குறைவாக உள்ளதையே காண முடியும்.

### 2. ஆண் குழந்தையை விரும்புதல்

பெரும்பாலான ஆணாதிக்கச் சமூகங்களில் பாலின சமத்துவமின்மையானது பெற்றோர்கள் பெண் குழந்தையைவிட ஆண் குழந்தையை விரும்புவதில் வெளிப்படுகின்றது. முந்தைய காலகட்டங்களில் பெற்றோர்களுக்கு இது வெறும் விருப்பமாக மட்டும் இருந்தது. இன்றோ தொழில் நுட்பங்களின் மூலமாகப் பிறக்கப்போகும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிந்துகொண்டபின் பெண் குழந்தையாக இருந்தால் அதைக் கருவிலேயே கொன்றுவிடும் பெண்கருக்கொலை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது உயர் தொழில் நுட்ப ரீதியான பாலினவாதமாகும் (high-tech sexism) கிழக்காசியா, சீனா, தென்கொரியா, சிங்கப்பூர் மற்றும் தைவான், இந்தியா உள்ளிட்ட தெற்காசியா நாடுகளில் அதிகமாக உள்ளது.

### 3. அடிப்படை வசதிகளில் சமத்துவமின்மை

பல நாடுகளில் அடிப்படை வசதிகளில் பெண்களுக்குச் சமத்துவம் மறுக்கப்படுகின்றது. மக்கள் தொகை எண்ணிக்கையிலோ, இறப்பு விகிதத்திலோ வேறுபாடு இல்லாதபோது மற்ற வழிகளில் பெண்களுக்கெதிராக சமத்துவமின்மையானது கடைப்பிடிக்கப்படுகின்றது. உதாரணமாக, உலகிலேயே ஆப்கானிஸ்தான் நாட்டில் மட்டுமே பெண்குழந்தைகள் பள்ளிக்குக் கல்வி கற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா நாடுகளிலும் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளுக்கு வாய்ப்பு மிகக் குறைவாகவே அளிக்கப்படுகிறது. சத்துணவைப் பொறுத்தவரை ஆண் குழந்தைகள் மற்றும் ஆண்கள் உண்ட பின்னரே மிச்சம் இருந்தால் மட்டுமே பெண்களுக்கு அளிக்கப்படுகிறது.

### 4. சமூக வாய்ப்புக்களில் சமத்துவமின்மை

ஆரம்பக் கல்வியில் ஆண், பெண்களுக்கிடையில் சிறிய வேறுபாடுகள் இருந்தாலும், உயர் கல்வியிலும் தொழிற்பயிற்சியிலும் பெண்களுக்கெதிரான கடுமையான பாரபட்சமே கடைப்பிடிக்கப் படுகின்றது.

### 5. தொழிற் சார்ந்தோரிடையே சமத்துவமின்மை

வேலை வாய்ப்புக்களில், வேலையில், பதவி உயர்வுகளில் ஆண்களைவிடப் பெண்களே அதிக இடங்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக ஜப்பானை எடுத்துக்கொள்வோம். மக்கள் தொகையில் அல்லது அடிப்படை வசதிகளில் ஏன் உயர்கல்வியில்கூட சமத்துவத்தைக் கொண்டிருந்தாலும் வேலை வாய்ப்புக்களில், வேலையில் பதவி உயர்விலும் ஆண்களைவிட பெண்கள்

குறைவான வாய்ப்பையே பெறுகின்றனர். இம்மாதிரியான சமத்துவமின்மையானது மேற்கத்திய நாடுகளில் டி.வி. தொடர்களில் நையாண்டி செய்யப்படுவதைப் பார்க்க முடியும். இங்கிலாந்தின் புகழ்பெற்ற எஸ் மினிஸ்டர் தொடரில் அமைச்சாரனவர் தன்னுடைய செயலரைப் பார்த்து பிரிட்டிஷ் சிவில் சர்வீசில் உயர் பதவிகளில் எத்தனை பெண்கள் இருக்கின்றனர்? என்று கேட்பார். அதற்குச் செயலர், சரியான எண்ணிக்கையைச் சொல்வது மிகவும் கடினமான ஒன்று. அதைப் புலனாய்வு செய்தே கண்டுபிடிக்க முடியும் என்பார். ஆனால் அமைச்சர் விடாப்பிடியாக ஒரு சராசரியாகவாவது கூற முடியுமா என்று கேட்பார். அதற்கு சராசரியாக யாருமே இல்லை என்று செயலர் விடையளிப்பார்.

### 6. சொத்துடைமையில் சமத்துவமின்மை

பல சமூகங்களில் சொத்துரிமையில் சமத்துவமற்ற நிலையே காணப்படுகிறது. வீடு மற்றும் நிலங்கள் ஏற்றத்தாழ்வான முறையில்தான் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இச் சொத்துரிமைகள் இல்லாதது பெண்களின் குரலை எடுபடாமல் போகச் செய்வது மட்டுமின்றி, அவர்கள் வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் சமூகத்துறையில் நுழைந்து பிரகாசிக்கவே முடியாத நிலை ஏற்றடுகின்றது. இச்சமத்துவமின்மையானது பெரும்பாலும் உலகின் எல்லா சமூகங்களிலுமே உள்ளது.

### 7. குடும்பத்திற்குள் சமத்துவமின்மை

குடும்பத்திற்குள் ஆண், பெண் உறவுகளில் அடிப்படையிலேயே சமத்துவமின்மை நிலவுகின்றது. இது பல வடிவங்களிலும் வெளிப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தையை மட்டும் வளர்த்தல் என்ற நிலை இல்லாவிட்டாலும் உணவு மற்றும் அடிப்படை வசதிகளில் பெண்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டப்படாவிட்டாலும் குடும்பத்தினை அன்றாடம் நடத்திச்செல்வதில் ஏற்றத் தாழ்வே உள்ளது. உதாரணமாக, குடும்ப வேலைகளைப் பகிர்ந்துகொள்வதிலும், குழந்தைப் பாரமரிப்பைப் பகிர்ந்து கொள்வதிலும் கடுமையான ஏற்றத் தாழ்வே உள்ளது. பெரும்பாலான சமூகங்களில் ஆண்கள் வீட்டிற்கு வெளியே வேலைக்குச் செல்வதும் பெண்கள் குடும்பத்தின் அன்றாடப் பணிகளைச் செய்வதும் பாலின வேலைப் பிரிவினையாக உள்ளது. இங்கு ஆண் செய்யும் பணியே அங்கீகரிக்கப்படுவதும் பெண்களின் வீட்டுப்பணிகளுக்கு எவ்வித அங்கீகாரமும் இல்லாத நிலையே உள்ளது. இதில் அதிர்ச்சிக்குரிய விசயம் என்னவென்றால், உலக சுகாதார அமைப்பின் வெளியீடான மனிதனுக்குத் தேவையான சத்துணவு (Handbook of Human Nutrition Requirement – WHO) குறித்த கையேட்டை நான் பார்க்க நேரிட்டபோது வீட்டுப் பணிகளுக்கு மிகக் குறைவான கலோரி (Calories) தேவைப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து நாடுகளும், அங்கீகரிக்கும் உயர்வான ஓர் அமைப்பில் எப்படி இப்படிப்பட்ட பாரபட்சமான வார்த்தைகள் இடம் பெற்றன என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை. (இவ்வாய்வுக்

கட்டுரையானது மிக விரிவாக பிரண்ட்லைன் – நவம்பர் 9, 2001இல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் சுருக்கமே இது)

**புதிய யுகத்தில் நிலைமை மாறியுள்ளதா?**

இப்பிரபஞ்சத்தில் மனிதர்களுக்கிடையே மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள் மானுட மாண்பிற்கே எதிரானதாகும். மனித நாகரிகம் முன்னோக்கிச் சென்றாலும், சமத்துவமின்மையும், பாகுபாடுகளும் பல்வேறு வடிவங்களில் கொடூரமாய் தொடர்கின்றன. மற்ற நாடுகளைவிட இந்தியாவில் இதன் பாதிப்பு அதிகமாகவே உள்ளது. சுதந்திரத்திற்கு முன்பே இதற்குத் தீர்வு காண பல்வேறு தளங்களில் போராட்டங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன. அதன் விளைவாக சுதந்திரத்திற்குப் பின்னும் மக்களாட்சியில் ஏற்றத்தாழ்வுகள் தொடரா வண்ணம் கட்டுப்படுத்த சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் சாசனத்தில் சமத்துவ உரிமை அடிப்படை உரிமையாக்கப்பட்டது.

நாகரிகத்தின் முன்னோடியாய் திகழும் அமெரிக்காவில் நிறவெறியை ஒழிக்க ஆப்ரகாம் லிங்கன் முதல் மார்ட்டின் லூதர் கிங் வரை அரும்பாடுபட வேண்டியதாயிற்று. நெல்சன் மண்டேலாவின் நீண்ட கால சிறைப் போராட்டத்திற்குப் பின் தென் ஆப்பிரிக்காவின் நிறவெறி முடிவுக்கு வந்தது. இந்தியாவில் பன்னெடுங்காலமாய் தொடரும் தீண்டாமைக் கொடுமை சுதந்திரமடைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் குறைந்த பாடில்லை. தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராக அம்பேட்கர் தனிமனிதனாய் போராடி தலித் மக்களுக்கு சில உரிமைகளைப் பெற்றுத் தந்தார்.

சாதி, மதம், ஆண், பெண் பாகுபாடு அடிப்படையில் வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்பே இவற்றையெல்லாம் தடுக்கச் சட்டங்கள் உருவாக்கப்பட்டது. ஆனால், இன்றளவும் உடல் ஊனமுற்றோருக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விஷயமாகும்.

சமத்துவம் என்பது இச்சமூகத்தில் அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தளத்தில் மிகவும் பின் தங்கியுள்ளோரை முன்னேறிய சமூகத்திற்கு இணையாக்குவது, சமமில்லாதவர்களை சமமாக்குவதாகும்.

இந்திய அரசியல் சாசனம் சமத்துவ உரிமைகளுக்கு உத்தரவாதமளித்துள்ளது. சமத்துவ உரிமையென்பது ஐந்து வகையான உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. அவை, (1) சட்டத்தின் முன் அனைவரும் சமம் (2) சாதி, மதம், மொழி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு சமூகத்தில் சமமாக வாழும் உரிமை. (3) வேலை செய்யும் உரிமை (4) தீண்டாமையிலிருந்து காப்பாற்றும் உரிமை. தீண்டாமையை

ஒழிக்கும் உரிமை (5) வெளிநாடுகளிலிருந்து அரசின் அனுமதியின்றி பட்டங்களைப் பெறுவதைத் தடை செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளில் சமத்துவ உரிமைக்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதம் பின்வருமாறு:–

## பிரிவு 14

சட்டத்தின் முன் அனைவரும் சமம், அல்லது சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள் அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது.

## பிரிவு 15 (1)

மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு பாகுபாடு காட்டுதல் கூடாது.

## பிரிவு 15 (2)

- கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவு விடுதி, பொதுமக்களின் பொழுது போக்கிற்கான இடங்கள் ஆகிய இடங்களில் அனுமதிப்பதற்கும்,
- கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொது மக்களின் பண்பாட்டிற்காக அரசு நிதியுடன் பராமரிக்கப்படும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களைப் பயன்படுத்துவதற்கும்,
- மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனையும் கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தக் கூடாது.

## பிரிவு 15 (3)

குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக் கூடாது.

## பிரிவு 15 (4)

சமூக மற்றும் கல்வி பெற வாய்ப்பற்ற பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை முன்னேற்ற சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக் கூடாது.

## பிரிவு 16 (1)

அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பால் அனைத்து குடிமக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

## பிரிவு 16 (2)

மதம், இனம், சாதி, பால், வம்சாவழி, பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பு தொடர்பாக எந்தவொரு குடிமகனையும் தகுதியற்றவராகக் கருதக் கூடாது மற்றும் பாகுபாடு காட்டக் கூடாது.

## பிரிவு 17

தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதால், எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டத்தின்படி குற்றமாகும். இது தவிர அரசியல் சட்டப் பிரிவின் பிற பகுதிகளிலும் சமத்துவ உரிமை பற்றி கூறப்பட்டுள்ளது. அவை,

# குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005

குடும்பத்தில் பல வகையான வன்முறைகளால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வரதட்சணைக் கொடுமை, பாலியல் ரீதியான வன்முறைகள், மனரீதியான வன்முறை, உடல் ரீதியான துன்புறுத்தல்கள், உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை, வார்த்தைகளால் துன்புறுத்தப்படுதல் உறவுகளைக் காட்டி மிரட்டல் போன்றவை. இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களை இவ்வன்முறைகளிலிருந்து பாதுகாத்திடவும், பாதுகாப்பான சூழலில் வாழ்ந்திட வகை செய்யவும் இச்சட்டம் உதவுகிறது.

பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாக்க பல சட்டங்கள் அமலில் இருந்தாலும் குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்க தனிச் சட்டம் இதுவரை நமது நாட்டில் எதுவும் இல்லை. குடும்ப வன்முறையால் நமது நாட்டில் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இன்று குடும்ப அமைப்பு பெண்கள் மீது அனைத்து வகை வன்முறைகளையும் திணிக்க அங்கீகாரம் கொடுப்பதாகவே உள்ளது. இவற்றைப் பற்றிப் பேசுவதற்குக்கூட அனைவரும் அஞ்சுகிறார்கள்.

இந்தியாவில் நாளொன்றுக்கு 14 பெண்கள் தங்களுடைய புகுந்த வீடுகளில் கொல்லப்படுகிறார்கள். இந்தியாவில் வரதட்சணை முறை சட்டத்திற்குப் புறம்பானது என்றாலும் வருடத்திற்கு 5000க்கும் மேற்பட்ட பெண்கள் புகுந்த வீடுகளில் வரதட்சணை கொடுமையால் மட்டுமே எரிக்கப்படுகிறார்கள். அதிகாரத்தைப் பிரயோகித்துப் பெண்களை எந்த வகையில் துன்புறுத்தினாலும் அது குடும்ப வன்முறையே.

1996இல் உத்திரபிரதேச மாநிலத்தில் மட்டும் நடத்தப்பட்ட ஆய்வில் 45 சதவீதம் ஆண்கள் தங்களது மனைவிகளை வன்முறைக்கு உட்படுத்துகிறார்கள் என ஒப்புக் கொண்டனர். இந்தியாவில் மட்டும் வருடந்தோறும் 10,000 பெண் சிசுக்கொலைகள் பதிவாகின்றன.

**குடும்ப வன்முறை என்றால் என்ன?**

உடல், வார்த்தை, உணர்ச்சி, பாலியல் அல்லது பொருளாதார ரீதியான அவமதிப்புக்கு இட்டுச் செல்லும் நடத்தைகள், தவறான செய்கைகள் அனைத்தும் குடும்ப வன்முறையாகும்.

- இச்செயல் ஒரு பெண்ணின் மனநலன் அல்லது உடல் நலனைப் பாதிக்கின்றது.
- நிகழும் வன்முறை மட்டும் அன்றி வன்முறை குறித்த அச்சுறுத்தல்களும், குடும்ப வன்முறையாகும்.
- சட்டத்திற்கு புறம்பாக வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதும் குடும்ப வன்முறையாகும்.

**உடல் ரீதியான துஷ்பிரயோகம் என்றால் என்ன?**

உடல் தியான துஷ்பிரயோகம் என்பது எந்த ஒரு செயல் அல்லது நடத்தை உடல்வலியை ஏற்படுத்தினாலோ உயிருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவரின் உடல் உறுப்புகளுக்கோ ஆரோக்கியத்திற்கோ, முன்னேற்றத்திற்கோ, ஊறுவிளைப்பதாகும். மற்றும் தாக்குதல், குற்றமுறு அச்சுறுத்தல், குற்றமிரட்டல் ஆகியவையும் உள்ளடங்கும்.

**பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?**

பாலியல் துஷ்பிரயோகம் என்பது எந்த ஒரு செயலோ அல்லது நடத்தையோ பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்டவரை கீழ்மைப்படுத்துவதாகவோ அல்லது சிறுமைப்படுத்துவதா கவோ அவர்தம் மாண்புக்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்படுத்துவதாக அமைந்தால் அது பாலியல் துஷ்பிரயோகம். பாதிக்கப்ட்டவர் 16 வயதுக்குட்பட்டவராக இருப்பின் அவரது விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ உடலுறவு கொள்வது பாலியல் துஷ்பிரயோகமாகும். பாலியல் ரீதியாகவோ சொல் பிரயோகத்தினாலோ உளவியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்தால் 'குடும்ப வன்முறை' ஆகும்.

**வார்த்தை அல்லது உளவியல் ரீதியான துஷ்பிர யோகம் என்றால் என்ன?**

அ) இதில் அவமதித்தல், கேலி செய்தல், சிறுமைப்படுத்துதல், தரக்குறைவாக அல்லது கேலிப்பெயர் சூட்டுதல் குறிப்பாக குழந்தை பேறு இல்லை அல்லது ஆண் வாரிசு பெற்றுத் தரவில்லை என சுட்டிக்காட்டுதல் ஆகியவை உள்ளடங்கும் அல்லது

ஆ) பாதிக்கப்பட்ட நபரை சார்ந்த நபர் எவரின் நலனில் பாதிக்கப்பட்டவர்க்கு அக்கரை உள்ளதோ அவரை உடல் ரீதியாக துன்புறுத்தப் போவதாக தொடர்ச்சியான அச்சுறுத்தலும் அடங்கும்.

**பொருளாதார துஷ்பிரயோகம் என்றால் என்ன?**

அ) பாதிக்கப்பட்டவருக்குரிய நிதி ஆதாராங்களை அவை நீதிமன்றத் தீர்ப்பு வாயிலாக அவருக்கு கிடைத்ததாகவோ, சட்டப்படி அவருக்குரியதாகவோ வழக்காறு மூலம் அவருக்கு உரியதாகவோ அவருக்கு தேவையாய் இருப்பதனை அவரிடமிருந்து கவர்ந்து கொள்வது அல்லது கவர்ந்து கொள்ளப்போவதாய் அச்சுறுத்து வதோ அடங்கும். வீட்டுத் தேவைக்கான பொருட்கள்

மட்டுமில்லாது வரதட்சனை அல்லது பாதிக்கப்பட்டவருக்கு சட்ட வேண்டிய வாடகை மற்றும் பாராமரிப்பு ஆகியவை உள்ளடங்கும்.

ஆ) பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவரது குழந்தைகளுக்கு தேவைப்படும் அல்லது திருமண உறவினால் உபயோகப்படுத்திட அனுமதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டவருக்கு சொந்தமான சொத்துக்கள், அவை அசையும், அசையாதவைகள், வியைுர்ந்த வைகள், பங்குகள், பத்திரங்கள், ஆவணங்களாக இருந்து அவற்றை விற்றுவிடுதல் அல்லது அவருக்கு உரியதாக இல்லாமல் செய்துவிடுவது.

இ) பாதிக்கப்பட்டவருக்கு அவரது குடும்ப உறவின் வாயிலாக கிட்டிய, அவர் அனுபவிக்க வேண்டிய வசதிகளை அல்லது வளங்களை கிடைக்கவிடாமல் தடுப்பது அல்லது கட்டுப்பாடுகள் விதிப்பது.

**இச்சட்டத்தால் பாதுகாக்கப்படுபவர் யாவர்?**

- குடும்ப வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் எந்த ஒரு பெண்ணும் பாதிக்கப்பட்டவரே. இந்த பெண் மனைவி மட்டுமல்லாது, மகள்கள், விதவைகள், தாயார்கள் அல்லது ஒரே உறைவிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஏனைய உறவுகளாகவும் இருக்கலாம். மணமாகாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண்ணும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெறுகிறார். பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெறுகின்றனர்.

**இச்சட்டத்தின் கீழ் யார் புகார் செய்யலாம் ?**

- குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது, நிகழ்ந்து கொண்டிருக்கிறது அல்லது நிகழ வாய்ப்புள்ளது என்று கருத போதுமான காரணம் உடைய எவரும் அது குறித்த தகவலை அளிக்கலாம். பாதிக்கப்பட்டவர் மட்டுமல்ல, சமூகப் பணியாளர்கள், அருகில் வசிப்பவர்கள், உறவினர்கள், அரசு சாரா அமைப்பினர் ஆகியோரும் அவர் சார்பில் புகார் பதிவு செய்யலாம்.

**யார் மீது புகார் அளிக்கலாம் ?**

- இச்சட்டத்தின் கீழ் எவருக்கு எதிராக நிவாரணம் கோரப்படுகிறதோ, அந்த வயது வந்த, பாதிக்கப்பட்ட வருடன் குடும்ப உறவில் உள்ள ஆண் மீது புகார் அளிக்கலாம். பாதிக்கப்பட்ட மனைவி அல்லது மணமாகாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண், கணவரின் உறவினர் மீதோ சம்மந்தப்பட்ட ஆண் மீதோ புகார் அளிக்கலாம்.

**இச்சட்டத்தின் கீழ் யாரிடம் புகார் கொடுக்க வேண்டும்?**

1. பாதுகாப்பு அதிகாரி
2. சேவை மையங்கள்

3. குற்றவியல் நடுவர்

4. காவல் நிலையம்

**குடும்ப வன்முறை குறித்த புகார்களைப் பெறும் நபரின் கடமை யாது?**

- இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற குற்றவியல் நடுவருக்கு விண்ணப்பிப்பதற்கு உரிமை உள்ளது என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.
- பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சேவை மையங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பாதிக்கப் பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.
- சட்டப் பணிகள் ஆணயக் குழு மீதான சட்டம் 1987–ன் கீழ் இலவச சட்ட உதவிகள் பெற உரிமை உண்டு என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்குப் பதிவு செய்யவும் உரிமை உண்டு என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.

**இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர் பெறக்கூடிய தீர்வுகள் யாவை?**

இச்சட்டம் அவசர நிலை அடிப்படையில் நிவாரணம் வழங்குகிறது. கீழ்காண்பனவற்றின் அடிப்படையில் குற்றவியல் நடுவர் ஒரு சார்பான உத்தரவும் வழங்கலாம்.

**பாதுகாப்பு உத்தரவுகள்:**

வன்முறையை உடனடியாக நிறுத்த வன்முறை நிகழ்த்தியவர் பாதிக்கப்பட்டவரின் பணியிடத்திற்கும் அவரது குழந்தைகள் பயிலும் பள்ளிகளுக்கும் வருவதைத் தடுக்க; பாதிக்கப்பட்டவரின் பொருளாதார நலன்களைப் பாதுகாக்க.

**உறைவிட உத்தரவுகள் :**

பாதிக்கப்பட்டவர் வெளியேற்றப்படாமலிருக்க, பாதிக்கப் பட்டவருக்கு மாற்று உறைவிடம் ஏற்பாடு செய்ய வன்முறை நிகழ்த்தியவருக்கு உத்திரவிட, பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்குள் வன்முறை நிகழ்த்தியவர் நுழைவதைத் தடுக்க, பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்க வேண்டிய உடமைகளை அவர் திரும்பப் பெற ஆவன செய்தல்.

**பணவகை நிவாரணம் :**

பாதிக்கப்பட்டவர் இழந்த வருமானத்தை அவருக்கு அளிக்குமாறும், மருத்துவச் செலவுகளைத் தருமாறும், உடமைகள் இழந்திருந்தால் அவற்றை அவருக்கு வழங்குமாறும் வன்முறை நிகழ்த்தியவருக்கு உத்தரவிடுவது, வேறு சட்டங்களின் கீழும் ஜீவனாம்சம் அளிக்க உத்தரவிடலாம்.

அளிக்கப்படும் பணவகை நிவாரணம், பாதிக்கப்பட்டவர் தனக்கு பழக்கமான வாழ்க்கைத் தரத்தைத் தொடர போதுமானதாக இருத்தல் வேண்டும்.

**குழந்தைப் பாதுகாப்பு உத்தரவுகள் :**

பாதிக்கப்பட்டவரின் குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டு, அவர்களது தற்காலிக பாதுகாப்பு/பராமரிப்பு மீதான உத்தரவுகளை அளிக்க.

**பாதுகாப்பு அதிகாரி என்பவர் யார்?**

- பாதுகாப்பு அதிகாரி (கூடிய மட்டும் பெண்ணாக இருத்தல் வேண்டும்) மாநில அரசால் நியமிக்கப் படுபவர். குற்றவியல் நடுவர் அல்லது அரசு இச்சட்டத்தின் கீழ் பணிக்கும் கடமைகளைச் செய்பவர். இவர் குற்றவியல் நடுவரின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் இயங்குவார்.

**பாதுகாப்பு அதிகாரியின் கடமைகளும் பணிகளும் யாவை ?**

- இச்சட்டத்தின் கீழ் உள்ள பணிகளைச் செய்வதில் குற்றவியல் நடுவருக்கு உதவுவது.
- புகார் பெற்றவுடன் அது 'குறித்த குடும்ப சம்பவ' அறிக்கை தயார் செய்து, குற்றவியல் நடுவருக்கு அனுப்பி அதன் நகலை அப்பகுதி காவல் நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி மற்றும் அப்பகுதியில் அமைந்துள்ள சேவை மையத்திற்கு அனுப்புவது.
- நிவாரணம் பெறுவதற்காகப் பாதுகாப்பு உத்தரவு கோரி பாதிக்கப்பட்டவர் சார்பாக நடுவருக்கு விண்ணப்பிப்பது.
- சட்டப் பணிகள் ஆணைக்குழு மீதான சட்டம், 1981 இன் கீழ் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி வழங்கப்படுகிறதா என்று உறுதி செய்வது.
- தேவைப்பட்டால் பாதிக்கப்பட்டவருக்குப் பாதுகாப்பான புகலிடம் வழங்கி இதனை அப்புகலிடம் அமைந்துள்ள பகுதியின் அதிகார எல்லைக்குட்பட்ட குற்றவியல் நடுவர் மற்றும் காவல் நிலையத்திற்கு அறிவிப்பது.
- தேவைப்படின் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவப் பரிசோதனை ஏற்பாடு செய்து கொடுத்து, இதனைச் சம்மபந்தப்பட்ட காவல் நிலையத்திற்கும் குற்றவியல் நடுவருக்கும் அறிவிப்பது.
- பணவகை நிவாரணத்திற்கான உத்தரவு, முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்வது.

**சேவை மையங்கள் என்பவை எவை ?**

- 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1956, கம்பெனிகள் பதிவுச் சட்டம் ஆகியவற்றின் கீழோ அல்லத வேறு சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு அமைப்புகள், பெண்கள் உரிமைகள் பாதுகாப்பில் அக்கறையுடைய சட்ட பூர்வமான சட்ட, மருத்துவ, பொருளாதர தீர்வுகளை தரவிழைகின்ற அமைப்புகள் மாநில அரசிடம் இச்சட்டத்தின் கீழ் சேவை அமைப்பு என தம்மை பதிவு செய்துக் கொள்ளலாம்.

**சேவை மையத்தின் கடமைகளும் அதிகாரங்களும் யாவை?**

- 'குடும்ப சம்பவ அறிக்கை' பதிவு செய்து இதனைக் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ள பகுதியின் பாதுகாப்பு அதிகாரிக்கும் குற்றவியல் நடுவருக்கும் அனுப்புவது.
- பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்து அதனை சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிக்கும் காவல் நிலையத்திற்கும் அறிவித்து மருத்துவ வசதி செய்து தருவது.
- பாதிக்கப்பட்டவருக்குப் புகலிடம் தேவைப்பட்டால் அவருக்குப் பாதுகாப்பு இல்லங்களில் புகலிடம் வழங்கப்படுகிறதா என்று உறுதி செய்வது.

**பாதுகாப்பு இல்லங்களின் கடமைகள்:**

பாதுகாப்பு இல்லங்களில் உள்ள பொறுப்பு அதிகாரியிடம் பாதுகாப்பு இல்லத்தில் ஒரு நபருக்கு தங்கும் அனுமதி தருமாறு பாதிக்கப்பட்டவரின் சார்பாக பாதுகாப்பு அலுவலரோ, சேவை அமைப்போ அல்லது பாதிக்கப்பட்ட நபரோ கோரினால் பாதுகாப்பு இல்லத்தின் பொறுப்பாளர் அனுமதி அளிக்க வேண்டும்.

**'மருத்துவ வசதி'யின் கடமைகள்:**

பாதிக்கப்பட்டவரின் சார்பாக, பாதுகாப்பு அதிகாரியோ, சேவை அமைப்போ அல்லது பாதிக்கப்பட்ட நபரோ மருத்துவ உதவியில் உள்ள பொறுப்பாளரிடம் ஏதேனும் மருத்துவ உதவியை தருமாறு கோரினால் பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது அவசியமா?**

இல்லை புகார் அளிக்கப்படும் போது ‘‘குடும்ப சம்பவ அறிக்கை தயார் செய்து அதனை மேற்படி நடவடிக்கைக்காகக் குற்றவியல் நடுவருக்கு அனுப்புவது பாதுகாப்பு அதிகாரியின் கடமையாகும்.

**குற்றவியல் நடுவருக்கு விண்ணப்பம் அளிப்பதற்கான நடைமுறை என்ன?**

இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற வகுக்கப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கலாம். குற்றவியல் நடுவர் விசாரணைத் தேதியை அறிவிப்பார். முதல் விசாரணை நிகழ்ந்து 60 நாட்களுக்குள் அவ்விண்ணப்பம் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

**பாதுகாப்பு உத்தரவினை வன்முறை நிகழ்த்தியவர் கீழ்ப்படியாவிடில் நடவடிக்கை என்ன?**

ஒரு வருட சிறைக்காவல் அல்லது ரூ.20,000/– அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். ஏனைய தண்டனைச் சட்டங்களின் கீழும் வழக்குப் பதிவு செய்யப்படலாம்.

**பாதுகாப்பு அதிகாரி தனது கடமையைச் செய்யாவிட்டால் என்ன செய்யலாம்?**

அரசின் முன் அனுமதியுடன் பாதுகாப்பு அதிகாரியின் மீது புகார் பதிவு செய்யலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு வருட சிறைக் காவல் அல்லது ரூ. 20,000/– அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

●●●●

# குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009

## அத்தியாயம்–1

## (முன்னுரை)

**சுருக்கமான தலைப்பும், தொடக்கமும்**

1. (1) இந்தச் சட்டம் ''குழந்தைகளின் இலவச, கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009'' என்று குறிப்பிடப்படும்.

(2) ஜம்மு காஷ்மீர் மாநிலம் தவிர்த்து இந்தியா முழுவதற்கும் இந்தச் சட்டம் பொருந்தும்

(3) மத்திய அரசு அதிகாரப் பூர்வமாக அரசிதழில் அறிவிக்கிற நாளிலிருந்து இது நடைமுறைக்கு வரும்

**விளக்கங்கள்**

2. இந்த சட்டத்தில், வேறு நிலைமைகள் எற்படாத சூழலில் பின்வரும் சொற்களுக்கான பொருள்கள் வருமாறு;

(a) ''உரிய அரசாங்கம்'' (அப்ரோபிரையேட் கவர்மென்ட்) என்பது–

(I) மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட, அதற்கு சொந்தமான அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படுகிற பள்ளி அல்லது சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசத்திற்கு பொறுப்பு அரசாங்கமாக இருக்கும் மத்திய அரசாங்கம் என்று பொருள்படும்.

(II) முதல் துணைப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிக்கு அப்பால்

(A) ஒரு மாநிலத்தின் எல்லைக்குள், அந்த மாநில அரசாங்கம் என்றும்

(B) சட்டமன்றம் உள்ள ஒரு யூனியன் பிரதேசத்தில் அந்த யூனியன் பிரதேச அரசாங்கம் என்றும் பொருள்படும்

(b) ''தலைக்கட்டணம்'' என்பது பள்ளியால் அறிவிக்கப்பட்ட கட்டணம் அல்லாத எந்த விதமான நக்கொடை அல்லது நிதி வழங்கல் அல்லது கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றைக் குறிப்பிடும்

(c) ''குழந்தை'' என்பது 6 முதல் 14 வயது வரை உள்ளஆண் அல்லது பெண் குழந்தையைக் குறிப்பிடும்

(d) ''வாய்ப்பற்ற பிரிவை சேர்ந்த குழந்தை'' என்பது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சமூக ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது, சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின் மூலம் வரையறுக்கப்படும் சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம், நிலப்பரப்பு, மொழி, பாலினம் அல்லது இத்தகைய இதர அம்சங்களால் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவை சேர்ந்த குழந்தை என்று பொருள்படும்.

(e) "நலித்த பிரிவைச் சேர்ந்த குழந்தை" என்பது சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின் மூலம் வரையறுக்கப்படும் குறைந்தபட்ச வருடாந்திர வருமானத்திற்கும் குறைவான வருமானம் உள்ள பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் (கார்டியன்) குழந்தை என்று பொருள்படும்.

(f) "தொடக்கக் கல்வி'' என்பது முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலான கல்வி என்று பொருள்படும்.

(g) குழந்தையை பொருத்தவரையில் ''பாதுகாப்பாளர்'' (கார்டியன்) என்பது குழந்தையைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ள, மற்றும் கவனித்துக் கொள்கிற ஒருவர் என்ற பொருள்படும்; இது இயற்கையான பாதுகாப்பாளர் அல்லது ஒரு நீதிமன்றத்தாலோ அல்லது சட்டப்பூர்வமாகவோ பாதுகாப்பளர் என்ற அறிவிக்கப்பட்டவராக இருக்கலாம்.

(h) "உள்ளூர் அதிகாரத்துவம்'' (லோக்கல் அத்தாரிட்டி) என்பது மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அல்லது நகர ஊராட்சி அல்லது கிராம ஊராட்சி என எந்த பெயரில் குறிப்பிடப்பட்டாலும் அந்த நிர்வாகத்தை குறிக்கும். இது அந்த பள்ளியின் மீது அந்த நிர்வாகம் அல்லது அமைப்பிற்கு நிர்வாக அதிகாரம் இருப்பதும் இதில் உள்ளடங்கும் அல்லது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தின்படியும் ஒரு நகரம் அல்லது ஊர் அல்லது கிராமத்தில் உள்ளாட்சி நிர்வாகமாக செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பையும் குறிக்கும்.

(I) "தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்'' என்பது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005 பிரிவு 3ன் கீழ் அமைக்கப்பட்ட தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை குறிக்கும்.

(j) ''அறிவிக்கை'' என்பது அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை என்று பொருள்படும். **2006ல் 4**

(k) "பெற்றோர்'' என்பது ஒரு குழந்தையின் இயற்கையான அல்லது மாற்று அல்லது தத்தெடுத்துக் கொண்ட தந்தை அல்லது தாய் என்று பொருள்படும்.

(l) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளின்படி வகுத்துரைக்கப்படுவது என்று பொருள்.

(m) ''அட்டவணை'' (ஷெட்யூல்) என்பது இந்தச் சட்டத்தில் இணைக்கப்பட்ட அட்டவணையைக் குறிக்கும்.

(n) ''பள்ளி'' என்பது தொடக்கக் கல்வியை வழங்குகிற எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியும் என்று பொருள்படும் –அது பின்வரும் பள்ளிகளை உள்ளடக்கியதாகும்.

(i) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்பட்டு, அதற்கு சொந்தமாக உள்ள, அதனால் கட்டுப்படுத்தப்படுகிற ஒரு பள்ளி;

(ii) உரிய அரசாங்கம் அல்லது ஊராட்சி நிர்வாகத்திடமிருந்து தனது முழு

செலவுகளுக்கு அல்லது பகுதிச் செலவுகளுக்கு உதவி அல்லது நிதி ஒதுக்கீடு பெறுகிற ஒரு அரசு உதவி பெறும் பள்ளி;

(iii) குறிப்பாக சுட்டிக்காட்டப்படும் பிரிவை சேர்ந்த ஒரு பள்ளி; மற்றும்

(iv) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்திடமிருந்து தனது செலவுகளுக்காக எந்தவகையான உதவி அல்லது நிதி ஒதுக்கீடும் பெறாத அரசு உதவி பெறாத பள்ளி என்று பொருள்படும்

(o) “பரிசீலனை நடைமுறை'' என்பது ஒரு குழந்தையைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காகத் தொடர்பற்ற முறையில் அல்லாமல் ஒன்றுக்கு பதிலாக இன்னொன்று என்ற முறையில் மேற்கொள்ளப்படும் தேர்வு முறை என்று பொருள்படும்

(p) ''வகுத்துரைக்கப்பட்ட பிரிவு'' என்பது ஒரு பள்ளியைப் பொறுத்தவரையில், கேந்திரிய வித்யாலயா, நவோதயா வித்யாலயா, சைனிக் பள்ளி அல்லது உரிய அரசாங்கத்தால் அறிவிக்கை மூலம் குறிப்பிடப்படுகிற ஒரு தனித்தன்மையுள்ள எந்தவொரு பள்ளியையும் குறிக்கும்.

(q) ''மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்'' என்பது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005ன் கீழ் அமைக்கப்படுகிற மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை குறிக்கும்.

**2006ல்4**

## அத்தியாயம்–2

### இலவச கட்டாய கல்வி உரிமை

**குழந்தையின் இலவச கட்டாய கல்வி உரிமை**

3. (1) 6 முதல் 14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு அருகாமைப் பள்ளியில் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவசமாக, கட்டாயமாகக் கல்வி பெறுவதற்கு உரிமை உண்டு.

(2) மேற்படி முதல் துணைப்பிரிவில் கூறப்பட்டுள்ள நோக்கத்திற்காக, எந்தவொரு குழந்தையும் தொடக்கக் கல்வியை தொடர்ந்து படித்து முடிப்பதை தடுக்கக் கூடிய வகையில் எந்தவிதமான கட்டணமோ, கட்டணங்களோ செலுத்த வேண்டியதில்லை அல்லது செலவுகளைச் செய்ய வேண்டியதில்லை.

**1996ல்1** ஊனமுற்றோர் சட்டம் 1996 (சம வாய்ப்புகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) பிரிவு 2ன் துணை பிரிவு 1ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒரு குழந்தை ஊனமுற்றிருக்குமானால் அக்குழந்தைக்கு குறிப்பிட்ட சட்டத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் உள்ள பிரிவுகளின் படி இலவச கட்டாய தொடக்கக் கல்வி பெறுகிற உரிமை உண்டு.

**பள்ளியில் சேர்க்கப்படாத குழந்தைகள் அல்லது தொடக்கக்**

4. 6 வயதுக்கு மேற்பட்ட ஒரு குழந்தை எந்தவொரு பள்ளியிலும் சேர்க்கப்படவில்லை என்றால் அல்லது சேர்க்கப்படடிருந்தாலும் தனது தொடக்கக் கல்வியை முடிக்க இயலவில்லையென்றால் அந்தக் குழந்தை அதன் வயதுக்குப் பொருத்தமான ஒரு வகுப்பில் சேர்க்கப்படும்

**கல்வியை முடிக்காத குழந்தைகளுக்கான சிறப்பு விதிகள்**

தனது வயதுக்கு பொருத்தமானவகுப்பில்நேரடியாக சேர்த்துக் கொள்ளப்படும் ஒரு குழந்தைக்கு, மற்றவர்களுக்கும் இணையாக இருப்பதற்காக, குறிப்பிட்ட கால அளவுகளில், குறிப்பிட்ட வகையில் வகுத்துரைக்கப்படுகிற சிறப்புப் பயிற்சியைப் பெறுகிற உரிமை உண்டு.

மேலும், ஒரு தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்படும் ஒரு குழந்தைக்கு 14 வயதுக்குப் பிறகும் கூட தொடக்கக் கல்வியை முடிக்கும்வரையில் இலவசமாக கல்வி பெறம் உரிமை உண்டு.

**வேறுபள்ளிக்கு மாறுவதற்கான உரிமை**

5. (1) தொடக்கக் கல்வியை முடிப்பதற்கு வழியில்லாத, ஒரு பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக வேறு பள்ளிக்கு மாற்றக் கோரும் உரிமை உண்டு. இதில் பிரிவு 2 உட்பிரிவு (n) துணை பிரிவு (iii) மற்றும் (iv) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகள் அடங்காது.

(2) தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக ஒரு மாநிலத்திற்கு உள்ளோயோ அல்லது வெளியேயோ ஒரு பள்ளியில் இருந்து வேறொரு பள்ளிக்கு மாறவேண்டிய அவசியம் உள்ள ஒரு குழந்தைக்கு எந்தவொரு பள்ளிக்கும் தன்னை மாற்றுமாறு கோர உரிமை உண்டு. **இதில் பிரிவு 2 உட்பிரிவு (n) துணை பிரிவு (iii) மற்றும் (iv) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகள் அடங்காது.**

(3) அப்படிப்பட்ட வேறொரு பள்ளியில் சேர்த்துக் கொள்ளக் கோருவதற்காக, கடைசியாக அந்தக் குழந்தை படித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் உடனடியாக மாற்றுச் சான்றிதழ் வழங்க வேண்டும்

மாற்றுச் சான்றிதழ் வழங்குவதற்கும் தாமதமாகும் நிலையில் அது அந்தக் குழந்தையை இப்படிப்பட்ட வேறொரு பள்ளியில் சேர்ப்பதற்கு தாமதப்படுத்துவதற்கான அல்லது மறுப்பதற்கான காரணம் ஆகாது.

மேலும் மாற்றுச் சான்றிதழ் வழங்குவதை தாமதப்படுத்தும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் பொருத்தமான பணி விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

## அத்தியாயம்–3

### உரிய அரசாங்கம், உள்ளாட்சி நிர்வாகம் மற்றம் பெற்றோர் கடமைகள்

**பள்ளியை நிறுவுவதில் உரிய அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தின்**

6. இந்த சட்டத்தை செயல்படுத்துவதற்காக உரிய அரசாங்கமும் உள்ளாட்சி நிர்வாகமும் அப்படிப்பட்ட பள்ளி இல்லாத பகுதியில் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி அந்தப் பகுதி அல்லது அருகாமை வட்டாரத்திற்குள் அப்படி ஒரு பள்ளியை, இந்த சட்டம் நடைமுறைக்கு வரத்தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவிட வேண்டும்

**நிதி மற்றும் இதர பொறுப்புகள் பங்கீடு**

7. (1) இந்தச்சட்டத்தின் விதிகளை செயல்படுத்த மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் நிதி வழங்குவதற்கான பொது பொறுப்பு உண்டு.

(2) இந்தச்சட்ட விதிகளை செயல்படுத்துவதற்கு ஏற்படும் முதலீடு மற்றும் செலவுகள் குறித்த மதிப்பீட்டை மத்திய அரசாங்கம் தயாரிக்க வேண்டும்

(3) மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு மேற்படி துணை பிரிவு (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளுக்கான விகிதாச்சாரத்தை வருவாய் நிதி ஒதுக்கீடுகளாக வழங்க வேண்டும் அதனை மாநில அரசாங்கங்களோடு அவ்வப்போது கலந்தாலோசித்து நிர்ணயிக்க வேண்டும்

(4) இந்தச்சட்ட விதிகளை செயல்படுத்த ஒரு மாநில அரசாங்கம் தனது பங்கு நிதியை வழங்கும் வகையில், சரத்து 280 பிரிவு (3) ன், துணைப்பிரிவு (b) ன் கீழ் நிதி ஆணையம் கூடுதல் நிதி ஆதாரங்களை வழங்குவது குறித்து ஆய்வு செய்யுமாறு நிதி ஆணையத்தை பணிக்குமாறு குடியரசு தலைவரை மத்திய அரசாங்கம் கேட்டுக் கொள்ளலாம்.

(5) துணைப்பரிவு (4)ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் துணைப் பிரிவு (3)ன் கீழ் ஒரு மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியை கணக்கில் கொண்டு இந்த சட்ட விதிகளைச் செயல்படுத்துவதற்கான நிதிகளை வழங்குவது மாநில அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

(6) மத்திய அரசாங்கம் பின்வரும நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

(a) பிரிவு 29ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ கல்வி அமைப்பின் உதவியோடு தேசிய பாடத்திட்டத்திற்கான ஒரு சட்ட வரைமுறையை உருவாக்கும்.

(b) ஆசிரியர்கள் பயிற்சிக்கான தர நிர்ணயங்களை வகுத்துச் செயல்படுத்தும்

(c) புதிய அணுகுமுறைகள், ஆய்வுகள், திட்டமிடுதல் மற்றும் திறன் மேம்பாட்டை வளர்ப்பதற்காக மாநில அரசாங்கத்து தொழில் நுட்ப ஆதரவையும் ஆதாரங்களையும் வழங்கும்.

**உரிய அரசாங்கத்தின் கடமைகள்**

8. உரிய அரசாங்கம் பின்வருமாறு செயல்பட வேண்டும்.

(a) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்குதல்

உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்படாத, அதற்குச் சொந்தமல்லாத அதனால் கட்டுப்படுத்தப்படாத அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டவட்டமாக நிதி வழங்கப்படாத வேறு பள்ளிகளில் ஒரு குழந்தை சேர்க்கப்பட்டிருக்குமானால் அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளருக்கு அப்படிப்பட்ட வேறு பள்ளியில் குழந்தைக்கு தொடக்க கல்வி அளிப்பதில் ஏற்படும் செலவை ஈடுகட்டுமாறு கோருவதற்கு உரிமை இல்லை.

விளக்கம் – ‘‘கட்டாயக் கல்வி என்ற சொல்லாடலின் அர்த்தம்’’ பின்வருமாறு;

(i) உரிய அரசாங்கம் 6 முதல்14 வயது வரை ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசமான தொடக்கக்கல்வி வழங்குவது:

(ii) 6 முதல் 14 வயது வரையுள்ள ஒவ்வொரு குழந்தையும் கட்டாயமாக பள்ளியில் சேர்க்கப்படுவது, பள்ளிக்கு வருவது மற்றும் தொடக்கக் கல்வியை முடிப்பது என்பதை உறுதிபப்டுத்துவது.

(b) பிரிவு 6ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு அருகாமைப் பற்றி கிடைப்பதை உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

(c) நலிந்த பிரிவையும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவையும் சேர்ந்த குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும், அவர்கள் எந்த காரணத்திற்காகவும் தங்கள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதிலிருந்து தடுக்கப்படாமல் இருப்பதையும் உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

(d) பள்ளிக் கட்டடம், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சாதனங்கள் உள்ளிடட உள் கட்டுமானங்களை வழங்க வேண்டும்

(e) பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்

(f) ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்.

(g) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் தரங்களின் படி நல்ல, தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(h) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் உரிய காலத்தில் வகுக்கப்படுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(i) ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்

**உள்ளாட்சி நிர்வாகத்தின் கடமைகள்**

9. ஒவ்வொரு உள்ளாட்சி நிர்வாகமும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

(a) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச, கட்டாய கல்வியை வழங்க வேண்டும்

உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்படாத, அதற்குச் சொந்தமல்லாத மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்படாத அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டவட்டமாக நிதி வழங்கப்படாத வேறு பள்ளிகளில் ஒரு குழந்தை சேர்க்கப்பட்டிருக்குமானால் அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அப்படிப்பட்ட வேறு பள்ளியில் குழந்தைக்கு தொடக்க கல்வி அளிப்பதில் ஏற்படும் செலவை ஈடுகட்டுமாறு கோருவதற்கு உரிமை இல்லை

(b) பிரிவு 6ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு அருகாமைப் பள்ளி கிடைப்பதை உறுதிப்படுத்த

வேண்டும்

(c) நலிந்த பிரிவையும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவையும் சேர்ந்த குழந்கைளுக்கு பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும், அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் தங்கள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதிலிருந்த தடுக்கப்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(d) தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில், வகுத்துரைக்கப்படும் வழிமுறைப்படி, அப்பகுதியில் வசிக்கும் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பற்றிய ஆவணங்களைப் பராமரிக்க வேண்டும்

(e) தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்.

(f) பள்ளி கட்டிடம், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பொருள்கள் உள்ளிட்ட உள் கட்டுமானங்களை வழங்க வேண்டும்.

(g) பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்

(h) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் மற்றும் நெறிகளின்படி நல்ல, தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்

(i) தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் உரிய காலத்தில் வகுக்கப்படுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(j) ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை வழங்க வேண்டும்

(k) புலம் பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

(l) தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பள்ளிகளின் செயல்பாட்டை கண்காணிக்க வேண்டும்.

(m) கல்வி ஆண்டைத் தீர்மானிக்க வேண்டும்.

**பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர் கடமை**

10. தங்கள் குழந்தை அல்லது தங்கள் பொறுப்பில் உள்ள குழந்தை, அந்தந்த நிலைமைக்கேற்ப, அருகாமை பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வி பெறுவதற்காக பள்ளியில் சேர்ப்பது அல்லது சேர்க்க வைப்பது என்பது ஒவ்வொரு பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கடமையாகும்.

**உரிய அரசாங்கம் பள்ளிக்கு முந்தைய கல்வியை வழங்குதல்**

11. 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை தொடக்க கல்வி பெற தயார்ப்படுத்துவதற்காகவும் 6 வயது நிறைவடையும் வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்க நிலை குழந்தைப் பருவ கவனிப்பு மற்றும் கல்வி கிடைக்கச் செய்வதற்காகவும் உரிய அரசாங்கம் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பள்ளிக்கு முந்தைய கல்வி வழங்குவதற்கு அவசியமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

## அத்தியாயம்–4

## பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள்

**இலவச கட்டாய கல்வி வழங்குவதில் பள்ளியில் பொறுப்பு வரம்பு**

12. (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு பள்ளி பின்வருமாறு செயல்பட வேண்டும்:

(a) சேர்க்கப்படும் அனைத்து குழந்தைகளுக்கும் பிரிவு 2 விதி (n) துணை விதி (i) ன்படி இலவச, கட்டாயக் கல்வி வழங்க வேண்டும்

(b) பிரிவு 2 விதி (n) துணை விதி (ii) ன்படி, தனது வருடாந்திர செலவு ஆகியவற்றுக்கு உட்பட்டு, குறைந்தது 25 விழுக்காடு அளவிலான விகிதாச்சாரப்படி சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி வழங்க வேண்டும்

(c) பிரிவு 2 விதி (n) துணை விதி (iii) (iv) ன்படி முதல் வகுப்பில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகாமை பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த குழந்தைகளாக சேர்த்து அவர்களுக்கு தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கவேண்டும்.

மேலும் பிரிவு 2 விதி (n) ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்விக்காக குழந்தைகளை சேர்த்துக் கொள்வது என்பதற்கும் பிரிவு (a), (c) ஆகிய விதிகள் பொருந்தும்.

(2) பிரிவு 2 விதி (n) துணை விதி (iv)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, துணைப் பிரிவு (1) விதி (c)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலவச, கட்டாயக் கல்வி வழங்குகிற பள்ளி, அரசாங்கத்தால் ஒரு குழந்தைக்கு இவ்வளவு என நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவுத் தொகையை அல்லது குழந்தையிடமிருந்து வசூலிக்கப்பட்ட உண்மைத் தொகையை, இவற்றில் எது குறைவோ அந்தத் தொகையை, வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி ஈடு செய்யக் கோர முடியும்.

இவ்வாறு ஈடு செய்யக்கோரும் தொகையானது, பிரிவு 2 (n) துணை விதி (i)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு குழந்தைக்கு இவ்வளவு என அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் இருக்கக் கூடாது

மேலும், இலவசமாகவோ அல்லது சலுகை விலையிலோ நிலம், கட்டடம், கல்விச் சாதனங்கள் அல்லது இதர வசதிகளை பெற்றுக்கொண்டதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்கியாக வேண்டிய நிலையில் ஒரு பள்ளி இருக்குமானால் அந்தப் பள்ளி, அவ்வாறு இலவசக் கல்வி வழங்கியாக வேண்டிய அளவு வரையிலான தொகையை (அரசாங்கத்திடமிருந்து) ஈடு செய்யயக்கோர முடியாது.

(3) ஒவ்வொரு பள்ளியும் அந்தந்த நிலைமையைப் பொறுத்தவரையில் உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் கோருகிற இப்படிப்பட்ட தகவல்களை ஒப்படைத்தாக வேண்டும்.

**பள்ளி சேர்க்கைக்கு கல்வி கட்டணமோ சோதனை நடைமுறையோ**

13. (1) எந்தப் பள்ளியும் ஒரு குழந்தையை சேர்க்கும் பொழுது அதன் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரிடமிருந்து எந்தவொரு கல்வி கட்டணமும் வசூலிக்கக்கூடாது, குழந்தையை எந்தவொரு பரிசீலனை நடைமுறைக்கும் உட்படுத்தக் கூடாது.

கூடாது

(2) துணைப்பிரிவு (1)ன் விதிகளை மீறி எந்தவொரு பள்ளியாவது அல்லது எந்தவொரு நபராவது

(a) கல்விக் கட்டணம் வசூலித்தால் வசூலிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தைப்போல் 10 மடங்கு வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

(b) குழந்தையைப் பரிசீலனை நடைமுறைக்கு உட்படுத்தினால் முதல் தடவையாக விதியை மீறும்பொழுது இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் வரையில் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். மீண்டும் மீண்டும் மீறும்பொழுது ஒவ்வொரு முறையும் ஐம்பதாயிரம் ரூபாய் வயைில் அபராதம் விதிக்கப்படும்.

**பள்ளிச் சேர்க்கைக்கான வயது சான்று**

14. (1) தொடக்கக் கல்விக்கு குழந்தையை சேர்ப்பதற்கு, அந்த குழந்தையின் வயது 1986 ஆம் ஆண்டின் பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவுச்சட்ட விதிகளின்கீழ் வழங்கப்படும் பிறப்பு சான்றிதழின் அடிப்படையில் அல்லது அதுபோன்ற இதர ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும்.

(2) வயது சான்றிதழ் இல்லாத காரணத்திற்காக எந்தவொரு குழந்தைக்கும் பள்ளிச் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது **1886ல் 6**

**பள்ளியில் சேர்க்க மறுத்தலாகாது**

15. கல்வி ஆண்டு தொடங்கும் போது அல்லது வகுத்துரைக்கப்படும் கால நீட்டிப்புக்குள் ஒரு குழந்தை பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும்

நீட்டிக்கப்பட்ட காலத்தை ஒட்டி பள்ளியில் சேர்ப்பதற்கு விண்ணப்பிக்கப்படுமானால் எந்தவொரு குழந்தைக்கும் சேர்க்கை அனுமதி மறுக்கப்படமாட்டாது.

மேலும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு பின் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும், உரிய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் முறையில் கல்வியை முடிக்கலாம்.

**ஒரே வகுப்பில் இருக்க வைத்தல் மற்றும் வெளியேற்றுவதற்கு தடை**

16. ஒரு பள்ளியில் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும் தொடக்கக் கல்வி முடியும் வரையில் எந்தவொரு வகுப்பிலும் தொடர்ந்து இருக்க வைக்கப்படக்கூடாது, பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவும் கூடாது

**குழந்தைக்கு உடல் ரீதியான தண்டனை அல்லது மன ரீதியான துன்புறுத்தல் எற்படுத்த தடை**

17. (1) எந்தவொரு குழந்தையும் உடல் ரீதியான தண்டனைக்கோ மன ரீதியான துன்புறுத்தலுக்கோ உள்ளாக்கப்படக்கூடாது.

(2) இந்த துணைப்பிரிவு 1 விதிகளை மீறக்கூடிய எவரும் அத்தகைய நபருக்கான சேவை விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

**அங்கீகாரச் சான்றிதழ் பெறாமல் எந்நவொரு பள்ளியும்**

18. (1) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்பட்டு உடமையாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிற பள்ளியல்லா வேறு எந்தப் பள்ளியும், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரத் தொடங்கியபிறகு வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி உரிய முறையில் விண்ணப்பித்து உரிய அதிகார அமைப்பிபடமிருந்து அங்கீகாரச் சான்றிதழ் பெறாமல் நிறுவப்படவோ செயல்படவோ

**நிறுவப்படக்கூடாது.** கூடாது.

(2) துணை விதி 91)ன் கீழ்கூறப்பட்டுள்ள அதிகார அமைப்பு, வகுத்துரைக்கப்பட்ட முறையில், அதற்குரிய காலத்திற்குள், அதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கீகாரச் சான்றிதழ் வழங்க வேண்டும்

பிரிவு 19ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்யாத ஒரு பள்ளிக்கு இப்படிப்பட்ட அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

(3) அங்கீகாரத்திற்கான நிபந்தனைகள் மீறப்படுமானால் வகுத்துரைக்கப்பட்ட அதிகார நிர்வாகம் அந்த அங்கீகாரத்தை எழுத்துப்பூர்வ ஆணைப்படி விலக்கிக் கொள்ளும்.

இவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்படும் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் அடுத்து எந்த அருகாமைப் பள்ளியில் சேர்க்கப்படுவார்கள் என்பதற்கான ஆணைகளும் அந்த ஆணையில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலும் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி உரிய முறையில், இப்படிப்பட்ட ஒரு பள்ளி விளக்கமளிப்பதற்கு வாய்ப்பளிக்காமல் அதன் அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்படமாட்டாது.

(4) துணைப் பிரிவு (3) ன்கீழ் அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்படும் தேதியிலிருந்து எந்தவொரு பள்ளியும் தொட ந்து செயல்படக்கூடாது

(5) அங்கீகாரச் சான்று பெறாமல் ஒரு பள்ளியை நிறுவுகிற அல்லது நடத்துகிற எந்நவொரு நபரும், அல்லது அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு தொடர்ந்த பள்ளியை நடத்துகிற எந்தவொரு நபரும், ஒரு லட்சம் ரூபாய் வரையில் தண்டனைத் தொகைக்கு உட்படுத்தப்படுவார். இந்த மீறல் தொடரும் நிலையில், மீறல் தொடரும் வரையில் நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

**பள்ளிக்கான நடைமுறை மற்றும் தரங்கள்**

19. (1) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்யாத எந்தவொரு பள்ளியும் பிரிவு 18ன் கீழ் நிறுவப்படக்கூடாது, அதற்கு அங்கீகாரம் அளிக்கப்படமாட்டாது.

(2) இந்த சட்டம் நடைமுறைக்கு வர தொடங்குவதற்கு முன்பே அட்டவணையில் கூறப்பட்டுள்ளபடி நடைமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்யாத ஒரு பள்ளி நிறுவப்பட்டிருக்குமானால், அவ்வாறு நடைமுறைக்கு வரத் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் அந்தப் பள்ளி தனது சொந்தச் செலவில் இப்படிப்பட்ட நடைமுறைகளையும் தரங்களையும் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(3) துணை பிரிவு 2ன் கீழ் கூறப்பட்டுள்ள காலத்திற்குள் இந்த நடைமுறைகள் மற்றும் தரங்களை நிறைவு செய்ய ஒரு பள்ளி தவறுமானால், பிரிவு 18 துணைப்பிரிவு (1) ல் கூறப்பட்டுள்ள அதிகார அமைப்பு அந்த பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை துணைப் பரிவு 3 ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படி விலக்கிக் கொள்ளும்.

(4) துணைப் பரிவு 3ன் கீழ் அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து எந்நவொரு பள்ளியும் தொடர்ந்து செயல்படக் கூடாது.

95) அங்கீகாரம் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு பள்ளியைத் தொடர்ந்து நடத்துகிற எந்தவொரு நபரும், ஒரு லட்சம் ரூபாய் வரையில் தண்டனைத் தொகைக்கு உட்படுத்தப்படுவார். இந்த விதி மீறல் தெடரும் நிலையில், மீறல் தொடரும் வரையில்

நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

**அட்டவணையை திருத்துவதற்கான அதிகாரம்**

20. மத்திய அரசாங்கம், அறிவிக்கை மூலமாக, எந்தவொரு நடைமுறை அல்லது தரங்களை சேர்த்தால் அல்லது நீக்குதல் மூலமாக அட்டவணையில் திருத்தம் செய்யலாம்.

**பள்ளி நிர்வாகக் குழு**

21. (1) பிரிவு 2 விதி (n) துணை விதி (iv)ல் வரையறுக்கப்பட்டுள்ள பள்ளிகள் அல்லாத ஒரு பள்ளி, உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட குழுவின் உறுப்பினர்களில் முக்கால் பங்கினர் பெற்றோர்கள் அல்லது பாதுகாப்பாளர்களாகவே இருக்க வேண்டும்,

மேலும், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகங்களையும் நலிந்த பிரிவுகளையும் சேர்ந்த பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களுக்கு அக்குழுவில் விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம்அளிக்கப்பட வேண்டும்.

அத்துடன், இப்படிப்பட்ட குழுவின் உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டினர் பெண்களாக இருக்க வேண்டும்

(2) பள்ளி நிர்வாகக் குழு பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:

(a) பள்ளியின்  செயல்பாடுகளைக் கண்காணித்தல்.

(b) பள்ளி மேம்பாட்டுத்திட்டம் தயாரித்தல், பரிந்துரைத்தல்,

(c) உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் அல்லது வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும்

(d) வகுத்துரைக்கப்படும் இத்தகைய இதர பணிகளைச் செய்தல்.

**பள்ளி மேம்பாட்டுத் திட்டம்.**

22. (1) பிரிவு 21 துணைப்பிரிவு (1) ன் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் வகுத்துரைக்கப்படும் வகையில் பள்ளிமேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

(2) இவ்வாறு தயாரிக்கப்படும் பள்ளி மேம்பாட்டுத்திட்டமே சம்பந்தப்பட்ட உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையாக இருக்கும்

**ஆசிரியர்கள் நியமனத்திற்கான தகுதிகள் மற்றும் பணிகளுக்கான நடைமுறைகளும் நிபந்தனைகளும்**

23. (1) மத்திய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு கல்வித்துறை அமைப்பு வகுத்துள்ள குறைந்தபட்ச தகுதிகள் உள்ள எந்த ஒரு நபரும் ஆசிரியராக நியமிக்கப்படத்தகுதி உள்ளவராவார்.

(2) ஒரு மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்குப் போதுமான நிறுவனங்கள் இல்லாத நிலையில் அல்லது துணைப்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தகுதிகள் கொண்ட ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாத நிலையில், தேவைப்படுமானால், மத்திய அரசாங்கம் ஆசிரியர் நியமனத்திற்கான குறைந்தபட்சத் தகுதிகளை அதிகாரப்பூர்வ

அறிவிக்கை மூலம் தளர்த்தலாம்: அதன் மூலம் ஐந்தாண்டுகளுக்கு மிகாத காலத்திற்கு ஒரு நியமித்து அதனை அறிக்கையில் வெளியிட வேண்டும்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகிறபோது துணைவிதி (1)ல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்சத் தகுதிகள் ஒரு ஆசிரியருக்கு இல்லை என்றால், அவர் ஐந்தாண்டுகளுக்கு மிகாத காலத்திற்குள் இந்தக் குறைந்தபட்சத் தகுதிகளைப் பெற வேண்டும்.

(3) ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், படிகள் அவரது பணிமுறைகள் மற்றும் பணி நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படும் வகையில் இருக்கும்.

**ஆசிரியர்களின் கடமைகளும் குறை தீர்ப்பும்**

24. (1) பிரிவு 23, துணைப்பிரிவு (1)ன் கீழ் நியமிக்கப்படும் ஒரு ஆசிரியர் பின்வரும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்:

(a) பள்ளிக்குத் தொடர்ச்சியாகவும் உரிய நேரப்படியும் வருதல்:

(b) பிரிவு 29, துணைப்பிரிவு (2)ல் வரையறுக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப, பாடத்திட்டத்தை நடத்தி முடித்தல்;

(c) முழு பாடத்திட்டத்தையும் வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் முடித்தல்:

(d) ஒவ்வொரு குழந்தையின் கற்றல் திறனையும் மதிப்பிடுதல், தேவைப்படுமானால் கூடுதல் பயிற்சி வழங்கி ஈடுசெய்தல்;

(e) பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்களுடன் சந்திப்புக் கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி, குழந்தையின் தொடர்சியான வருகை, கற்றல் திறன், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இதர பொருத்தமான தகவல்களைத் தெரிவித்தல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படக்கூடிய இப்படிப்பட்ட இதர பணிகளைச் செய்தல்

(2) துணை பிரிவு (1) ல் வரையறுக்கப்பட்ட கடமைகளை ஒரு ஆசிரியர் செய்யத் தவறுவாரானால் அவர் பொருத்தமான பணிவிதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

அப்படிப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாக அவர் தரப்பு வாதத்தை கேட்பதற்க வாய்ப்பு அளிக்கப்படும்

(3) ஆசிரியருக்கு ஏதேனும் குறை இருக்குமானால் அது வகுத்துரைக்கப்படும் வழிமுறையில் கையாளப்படும்.

**மாணவர் ஆசிரியர் விகிதம்**

25. (1) இந்த சட்டம் நடைமுறைக்கு வர தொடங்கும் 6 மாதங்களுக்குள் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்–ஆசிரியர் விகிதம் இருப்பதை உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும்.

(2) துணைப் பிரிவு (1) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாணவர் –ஆசிரியர் விகிதத்தை பராமரிக்க ஒரு பள்ளியில் நியமிக்கப்படும் எந்தவொரு ஆசிரியரும் வேறு பள்ளியிலோ அல்லது அலுவலகத்திலோ பணியாற்றும்படி செய்யக்கூடாது, அல்லது பிரிவு 27ல் வரையறுக்கப்பட்டுள்ள பணிகள் அல்லா கல்வி சாராத வேறு பணிகளுக்கு

அனுப்பப்படக்கூடாது.

**ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்புதல்**

26. உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறுவப்பட்டு, உடமையாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிற அல்லது நிதி வழங்கப்படுகிற ஒரு பள்ளி தொடர்பான நியமன அதிகாரம் கொண்ட அமைப்பு, அந்த பள்ளியில் காலியாகும் ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட மொத்த ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கையி 10 விழுக்காட்டிற்கு மேல் செல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**கல்விசாரா நோக்கங்களுக்கு ஆசிரியர்களை அனுப்ப தடை**

27. மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரண பணிகள் அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ மாநில சட்டமன்றத்துக்கோ நாடாளுமன்றத்துக்கோ நகடைபெறும் தேர்தல்கள் தொடர்பான பணிகள் அல்லா வேறு கல்வி சாராத எந்த நோக்கத்திற்காகவும் எந்த ஒரு ஆசிரியரும் அனுப்பப்படமாட்டாது.

**ஆசிரியர்கள் தனிப்பட்ட பயிற்சி அளிக்க தடை**

28. எந்தவொரு ஆசிரியரும் தனிப்பட்ட கல்வி பயிற்சி (டியூசன்) அல்லது தனிப்பட்ட பயிற்றுவிப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.

## அத்தியாயம்–5

### பாடத்திட்டமும் தொடக்கக்கல்வியை முடித்தலும்

**பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்ட நடைமுறை**

29. (1) உரிய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி வரையறுக்கப்படுகிற, ஒரு கல்வித்துறை அதிகார அமைப் தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டத்தையும் மதிப்பிடும் நடைமுறையையும் வகுத்தளிக்கும்.

(2) துணைப் பிரிவு (1) ன் கீழ் பாடத்திட்டத்தையும் மதிப்பிடும் நடைமுறையையும் வகுக்கிற கல்வித் துறை அதிகார அமைப்பு பின்வரும் அம்சங்களை கருத்தில் கொள்ளும்;

(a) அரசமைப்பு சாசனத்தில் கூறப்பட்டுள்ள மாண்புகளுக்கு ஒத்திசைந்ததாக இருத்தல்.

(b) குழந்தையின் ஒட்டுமொத்த மேம்பாடு,

(c) குழந்தையின் அறிவு ஆற்றல் மற்றும் திறனை வளர்த்தல்,

(e) குழந்தைக்கு இனக்கமான முறையிலும், குழந்தையை மையப்படுத்திய முறையிலும் செயல்வழி கற்றல், கண்டறிதல் மற்றும் ஆராய்ந்தறிதல் ஆகியவற்றை வளர்த்தல்,

(f) பயிற்று மொழி என்பது கூடிய வரையில் குழந்தையின் தாய்மொழியிலேயே இருத்தல்,

(g) குழந்தை அச்சமின்றியும் மன உலைச்சல் இன்றியும் பதட்டமின்றியும் பயில செய்தல், குழந்தை தன் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த உதவுதல் மற்றும்

(h) குழந்தையின் அறிவு புரிதல் மற்றும் அதனை செயல்படுத்தும் திறன் ஆசியவற்றை விரிவாகவும் தொடர்ச்சியாகவும் மதிப்பிடுதல்.

30. (1) தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் எந்தவொரு குழந்தையும் எந்தவொரு வாரிய (போர்டு) தேர்வையும் எழுதி தேர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை. **தேர்வு மற்றும் படிப்பை முடிப்பதற்கான சான்றிதழ்**

(2) தொடக்கக் கல்வியை முடிக்கிற எந்தவொரு குழந்தைக்கும் வகுத்துரைக்கப்படும் வடிவத்திலும் முறையிலும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

## அத்தியாயம்–6

### குழந்தை உரிமை பாதுகாப்பு

**2006ல் 4** 31.(1) குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005ன் பிரிவு (3) ன் கீழ் அமர்த்தப்படும் தேசிய குழந்தை உரிமைகள்பாதுகாப்பு ஆணையம் அல்லது பிரிவு 17ன் கீழ் அமர்த்தப்படும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் சடடத்தின்படி அவைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிகளோடு சேர்த்து பின்வரும் பணிகளையும் மேற்கொள்ளும் **குழந்தையின் கல்வி உரிமை கண்காணித்தல்**

(a) இந்த சட்டத்தால் அல்லது இந்த சட்டத்தின் கீழ் உரிமைகளை பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பரிசீலித்தல், மறு ஆய்வு செய்தல், அவற்றை பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

(n) குழந்தையின் இலவச கட்டாயக் கல்வி தொடர்பான புகார்கள் குறித்து விசாரித்தல் மற்றும்

(c) ஏற்கனவே சொல்லப்பட்ட குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டத்தின் 15 மற்றும் 24 வது பிரிவுகளில் உள்ளபடி உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

(2) துணைப் பிரிவு (1) ன் விதி (c)ன் கீழ் குழந்தையின் இலவச கட்டாயக் கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சனையையும் விசாரிக்கிற மேற்படி ஆணையங்களுக்கு குழந்தை உரிமைகள்பாதுகாப்பு அணையங்கள் சட்டத்தின் பிரிவு 14,24 ஆகியவற்றின் கீழ் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்கள் இருக்கும்.

(3) ஒரு மாநிலத்தில் இப்படிப்பட்ட மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்படாத நிலையில், உரிய மாநில அரசாங்கமானது துணை பிரிவு (1), விதிகள் (a) முதல் (c) வரையறுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வகுத்துரைக்கப்படும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக அப்படிப்பட்ட ஒரு ஆணையத்தை அமைக்க வேண்டும்.

32. (1) பிரிவு 31ல் என்ன கூறப்பட்டிருந்தாலும், இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குழந்தையின் உரிமை தொடர்பாக எவருக்கேனும் எதேனும் குறை இருக்குமானால் அவர் அதனை அதிகார எல்லைக்குட்பட்ட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு எழுத்துப்பூர்வமான புகாராக அளிக்கலாம். **குறைதீர்ப்பு**

(2) துணை பிரிவு (1) ன் கீழ் இந்த புகாரை பெற்றுக்கொண்டபின், உள்ளாட்சி

நிர்வாகமானது, சம்பந்தப்பட்டவர் தரப்பு வாதத்தை கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்ட பின்பு மூன்பு மூன்று மாத காலங்களுக்குள் இதுகுறித்து முடிவு செய்யும்.

(3) உள்ளாட்சி நிர்வாகத்தின் முடிவால் பாதிக்கப்படக் கூடிய எந்தவொரு நபரும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு அல்லது பிரிவு 31 துணை பிரிவு (3) ன் கீழ் வகுத்துரைக்கும் அதிகார அமைப்பிற்கு மேல் முறையீடு செய்யலாம்.

(4) துணைப் பிரிவு (3)ன் கீழ் செய்யப்படுகிற மேல் முறையீடு தொடர்பாக மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அல்லது பிரிவு 31 துணைப்பிரிவு (3)ல் வகுத்துரைக்கப்படும் நிர்வாக அமைப்பு, பிரிவு 3 துணைப்பிரிவு (1) விதி (c) ன் கீழ் முடிவு செய்யும்.

**தேசிய ஆலோசனைக் குழு அமைத்தல்**

33. (1) மத்திய அரசாங்கம் அதிகாரப்பூர்வ அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம், தொடக்கக் கல்வி துறையிலும் குழந்தை மேம்பாட்டிலும் அறிவும் நடைமுறை அனுபவமும் உள்ள நபர்களில் இருந்து, எண்ணிக்கையில் 15 பேர்களுக்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேசிய ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும்.

(2) தேசிய ஆலோசனைக் குழுவின் செயல்பாடு, சட்டத்தின் விதிகளை பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவதாகும்.

(3) தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் நியமனம், படிகள் மற்றும் இதர நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை வகுத்துரைக்கப்படும் வகையில் முடிவு செய்யப்படும்.

**மாநில ஆலோசனைக் குழு அமைத்தல்**

34. (1) மாநில அரசாங்கம் அதிகாரப்பூர்வ அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம், தொடக்கக் கல்வி துறையிலும் குழந்தை மேம்பாட்டிலும் அறிவும் நடைமுறை அனுபவமும் உள்ள நபர்களில் இருந்து, எண்ணிக்கையில் 15 பேர்களுக்கு மிகாத உறுப்பினர்களை கொண்ட ஒரு மாநில ஆலோசனைக்குழுவை அமைக்க வேண்டும்.

(2) மாநில ஆலோசனைக்குழுவின் செயல்பாடு, சட்டத்தின் விதிகளை பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை மாநில அரசாங்கத்திற்கு வழங்குவதாகும்.

(3) மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் நியமனம், படிகள் மற்றும் இதர நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை வகுத்துரைக்கப்படும் வகையில் முடிவு செய்யப்படும்.

## அத்தியாயம் –7

## இதர அம்சங்கள்

**ஆணைகள் வெளியிடும் அதிகாரம்**

35. (1) இந்தச் சட்ட விதிகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக உரிய அரசாங்கத்திற்கோ அல்லது நிலமைக்கேற்ப உள்ளாட்சி நிர்வாகத்திற்கோ உரிய வழிகாட்டல்களை மத்திய அரசாங்கம் வழங்கலாம்.

(2) இந்தச் சட்ட விதிகளை செயல்படுத்துவது தொடர்பாக உள்ளாட்சி நிர்வாகத்திற்கோ அல்லது பள்ளி நிர்வாக குழுவிற்கோ நிலமைக்கேற்ப உரிய வழிகாட்டல்களையும் ஆணைகளையும் உரிய அரசாங்கம் வழங்கலாம்.

(3) இந்தச் சட்ட விதிகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளி நிர்வாக குழுவிற்கு நிலைமைக்கேற்ப உரிய வழீகாட்டல்களையும் ஆணைகளையும் உள்ளாட்சி நிர்வாகம் வழங்கலாம்

**வழக்கு தொடுப்பதற்கான முன் அனுமதி**

36. உரிய அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வ அறிவிக்கையின்படி அதன் சார்பில் செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு அதிகாரியின் முன் அனுமதி பெறாத நிலையில் பிரிவு– 13, துணைப்பிரிவு (2), பிரிவு 18 துணைப்பிரிவு (5) மற்றும் பிரிவு 19 துணைப்பிரிவு (5) ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய எந்தவொரு குற்றத்திற்காகவும் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

**நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு பாதுகாப்பு**

37. இந்தச் சட்டத்தை அல்லது சட்ட விதிகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக நல்ல எண்ணத்துடன் செய்யப்படுகிற அல்லது நல்ல எண்ணத்துடன் செய்தவற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்பாடுகள் தொடர்பாக மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உள்ளாட்சி நிர்வாகம், பள்ளி நிர்வாகக் குழு அல்லது எந்தவொரு நபர் மீதும் எந்தவொரு வழக்கு அல்லது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது.

**சட்டவிதிகள் பிறப்பிப்பதற்கு உரிய அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரம்**

38. (1) இந்தச் சட்ட விதிகளை செயல்படுத்துவதற்காக உரிய அரசாங்கமானது அதிகாரப்பூர்வ அறிவிக்கையின் மூலம் தேவையான விதிகளை பிறப்பிக்க வேண்டும்.

(2) குறிப்பாகவும், தற்போது நடைமுறையில் உள்ள பொதுவான அதிகார அமைப்புகளுக்கு முரண்படாத வகையிலும் பின்வரும் அம்சங்களில் அனைவருக்குமான விதிகள் உருவாக்கப்பட வேண்டும்:

(a) பிரிவு 4க்கான முதல் விதியின் கீழ் சிறப்பு பயிற்சி அளிப்பதற்கான நடைமுறை மற்றும் கால அளவு

(b) பிரிவு 6ன் கீழ் அருகாமைப் பள்ளி அமைப்பதற்கான வட்டார மற்றும் எல்லைகள்.

(c) பிரிவு 9 விதி (d)ன் கீழ், 14 வயது வரையுள்ள குழந்தைகளின்ஆவணங்களை பராமரிக்கும் நடைமுறை.

(d) பிரிவு 12 துணைப்பிரிவு (2) ன் கீழ் செலவு தொகை ஈடுகட்டுவதற்கான நடைமுறையின் அளவு,

(e) பிரிவு 14 துணைப்பிரிவு (1)ன் கீழ் குழந்தையின்வயதை தீர்மானிப்பதற்கான வேறு எந்த ஆவணமும்,

(f) பள்ளியில் சேர்ப்பதற்கான கால நீட்டிப்பும் பிரிவு 15ன் கீழ், நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு

பின் குழந்தை சேர்க்கப்பட்டிருக்குமானால் படிப்பை முடிப்பதற்கான நடைமுறை.

(g) பிரிவு 18 துணைப்பிரிவு (1)ன் கீழ் அங்கீகார சான்றிதழுக்கு விண்ணப்பிக்க மேற்கொள்ள வேண்டிய அதிகார அமைப்பு, வடிவம் மற்றும் நடைமுறை,

(h) பிரிவு 18 துணைப்பிரிவு (2)ன் கீழ் அங்கீகாரச் சான்றிதழ் வடிவம், கால அளவு, நடைமுறை மற்றும் நிபந்தனைகள்,

(i) பிரிவு 18 துணைப்பிரிவு (3)ன் 2வது வகையின் கீழ் விசாரணையில் சம்பந்தப்பட்ட தரப்பின் வாதத்தை கேட்க வாய்ப்பளிக்கப்படுவதற்றான நடைமுறை.

(j) பிரிவு 21 துணைப்பிரிவு (2) விதி (d) ன் கீழ் பள்ளி நிர்வாக குழு மேற்கொள்ள வேண்டிய இதர பணிகள்,

(k) பிரிவு 22 துணைப்பிரிவு (1)ன் கீழ் பள்ளி மேம்பாட்டு திட்டம் தயாரிப்பதற்கான நடைமுறைகள்,

(l) பிரிவு 23 துணைப்பிரிவு (3)ன் கீழ் ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் மற்றும் அவரது பணி வரம்புகளும் பணி நிலைகளும்,

(m) பிரிவு 24 துணைப்பிரிவு (1)ன் கீழ் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள்.

(n) பிரிவு 24 துணைப்பிரிவு (3) ன் கீழ் ஆசிரியர்களின் குறை தீர்ப்பு நடைமுறைகள்,

(o) பிரிவு 30 துணைப்பிரிவு (2)ன் கீழ் தொடக்கக் கல்வி நிறைவடையும் போது வழங்கப்பட வேண்டிய சான்றிதழுக்கான வடிவமும் நடைமுறையும்

(p) பிரிவு 31 துணைப்பிரிவு (3)ன் கீழ் இதனை சட்டப்பூர்வமாக்குதல் மற்றும் நிறுவுதல் மற்றும் வரம்புகளும் நிபந்தனைகளும்,

(q) பிரிவு 33 துணைப்பிரிவு (3) ன் கீழ் தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கான படிகள் மற்றும் அவர்களது பணி வரம்புகள் மற்றும் நியமன நிபந்தனைகள் மற்றும்

(r) பிரிவு 34 துணைப்பிரிவு (3) ன் கீழ் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கான படிகள் மற்றும் அவர்களது பணி வரம்புகள் மற்றும் நியமன நிபந்தனைகள்.

(3) இந்த சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும் பிரிவு 20, 23 ன் கீழ் மத்திய அரசாங்கத்தால் எழுதப்படும் ஒவ்வொரு அறிவிக்கையும் அவ்வாறு வெளியிடப்பட்ட பின் உடனடியாக, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிக்கும்போது அதன் ஒவ்வொரு அவையிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும்; மொத்தம் 30 நாட்கள் அவ்வாறு நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அது நாடாளுமன்றத்தின் ஒரே கூட்டமாகவோ அல்லது அடுத்தடுத்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டங்களாகவோ இருக்கலாம்; கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாக, அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாக இரண்டு அவைகளும் சட்ட ஆணை (ரூல்) அல்லது அறிவிக்கையில் எந்தவொரு திருத்தம் செய்வதற்கு ஒப்புக்கொள்ளுமானால், அல்லது அந்த சட்ட ஆணை அல்லது அறிவிக்கை செய்யப்படக்கூடாது என இரு அவைகளும்

ஒப்புக்கொள்ளுமானால், அந்த ஆணையோ அல்லது அறிவிக்கையோ நிலைமைக்கு ஏற்ப அவ்வாறு திருத்தப்பட்ட வடிவத்தில் தான் செயலுக்கு வரும் அல்லது செயலுக்கு வராமல் இருக்கும்; எனினும், குறிப்பிட்ட சட்ட ஆணை அல்லது அறிவிக்கையின் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எந்த ஒன்றுடனும் முரண்படாததாக அந்த திருத்தம் அல்லது நீக்கம் இருக்கும்.

(4) மாநில அரசாங்கத்தால் இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் எந்நவொரு சட்ட விதிகள் அல்லது அறிவிக்கை கொண்டுவரப்பட்ட பின் மாநில சட்டமன்றத்தால் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

## அட்டவணை

**(19, 25 ஆகிய பிரிவுகளை காண்க)**

**ஒரு பள்ளிக்கான நடைமுறைகளும் தரங்களும்**

| **வரிசை எண்** | **பொருள்** | **நடைமுறைகளும் தரங்களும்** | |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர்களின் எண்ணிக்கை | **சேர்க்கப்பட்ட குழந்தைகள்** | **ஆசிரியர்களின் எண்ணிக்கை** |
| | (a) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அறுபது வரை | அறுபத்து ஒன்று முதல் தொண்ணூறு வரை | இரண்டு<br>மூன்று |
| | | தொண்ணூற்று ஒன்று முதல் நூற்று இருபது வரை | நான்கு |
| | | நூற்று இருபத்து ஒன்று முதல் இருநூறு வரை | ஐந்து |
| | | நூற்று ஐம்பது குழந்தைகளுக்கு மேல் | ஐந்து ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் |
| | | இருநூறு குழந்தைகளுக்கு மேல் | மாணவர் ஆசிரியர் விகிதம் (தலைமை ஆசிரியர் அல்லாமல்) நாற்பதுக்கு மேல் செல்லலாகாது |
| | (b) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை | (1) ஒரு வகுப்புக்கு குறைந்தது ஒரு ஆசிரியர்; இதனால் பின்வரும் பாடப்பிரிவு ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஒரு ஆசிரியர் இருப்பார் | |
| | | (i) அறிவியல் மற்றும் கணிதம் | |
| | | (ii) சமூகவியல் | |

| | | |
|---|---|---|
| | | (iii) மொழிகள் |
| | | (2) ஒவ்வொரு முப்பத்தைந்து குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் |
| | | (3) நூறு குழந்தைகளுக்கும் மேல் சேர்க்கப்படுமு நிலையில் |
| | | (i) ஒரு முழு நேர தலைமை ஆசிரியர் |
| | | (ii) பின்வரும் பாடங்களுக்கு பகுதி நேர பயிற்சியாளர்கள் |
| | | (A) கலைக்கல்வி |
| | | (B) உடல் நலம் உடற்பயிற்சிக் கல்வி |
| | | (C) வேலைக் கல்வி |
| 2. | கட்டிடம் | அனைத்து தட்பவெட்ப நிலைமைகளுக்கும் எற்ற கட்டடமாக பின்வரும் எற்பாடுகளுடன் இருக்க வேண்டும் |
| | | (i) ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது ஒரு வகுப்பறை மற்றும் அலுவலகமும் பொருள்கள் வைப்பறையும் தலைமை ஆசிரியர் அறையும் இணைந்து அறை |
| | | (ii) தடையற்ற தொடர்பு வசதி |
| | | (iii) ஆண் மாணவர்களுக்கும் பெண் மாணவர்களுக்கும் தனித்தனி கழிப்பறைகள் |
| | | (iv) அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான போதுமான குடிநீர் வசதி |
| | | (v) பள்ளியில் மதிய உணவு சமைப்பதற்கான ஒரு சமையலறை |
| | | (vi) விளையாட்டு மைதானம் |
| | | (vii) சுற்றுச்சுவர் அல்லது வேலி ஏற்பாட்டின் மூலம் பள்ளிக் கட்டடத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகள் |
| 3. | ஒரு கல்வியாண்டில் பணி நாட்களுக்கான குறைந்தபட்ச எண்ணிக்கை/பயிற்சி நேரங்கள் | (i) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருநூறு வேலை நாட்கள் |
| | | (ii) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை இருநூற்று இருபது வேலை நாட்கள் |
| | | (iii) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒரு கல்வி ஆண்டில் எண்ணூறு மணி பயிற்சி நேரங்கள் |
| | | (iv) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஒரு கல்வி ஆண்டில் ஒராயிரம் பணி பயிற்சி நேரங்கள் |

| | | |
|---|---|---|
| 4. | ஆசிரியருக்கு ஒரு வாரத்திற்கான குறைந்தபட்ச பணி நேரங்கள் | தயாரிப்பு உட்பட நாற்பத்தி ஐந்து மணி பயிற்சி நேரங்கள் |
| 5. | பயிற்றுவிப்பு/கற்றல் சாதனங்கள் | ஒவ்வொரு வகுப்பிற்கும் தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும் |
| 6. | நூலகம் | ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு நூலகம் இருக்க வேண்டும். செய்தி ஏடு, பருவ இதழ்கள் மற்றும் கதை புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருகள் குறித்த புத்தகங்களும் இருக்க வேண்டும். |
| 7. | விளையாடுவதற்கான பொருள்கள், விளையாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் | ஒவ்வொரு வகுப்பிற்கும் தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும். |

**T.K.விஸ்வநாதன்,**

செயலர், இந்திய அரசு

## பொது நலனுக்காக மொழிப்பெயர்ப்பு

# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கும் சட்டம்-2012

**அத்தியாயம்-01**

**01- தலைப்பு**

1. இச்சட்டம் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம்-2012 என்று அழைக்கப்படும்.
2. ஜம்மு காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுவதற்கும் பொருந்தும்.
3. மத்திய அரசு அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். (16.07.2012)

**02- சொற்பொருள் விளக்கம்**

1. இச்சட்டத்தில் குறிப்பிட்ட இடங்களில் வேறு பொருள்தரும் இடங்கள் தவிர...

அ. ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் என்பது பிரிவு 5இல் உள்ளவாறு பொருள்படும்.

ஆ. மோசமாக பாலியல் கொடுமை என்பது பிரிவு 9இல் உள்ளவாறு பொருள்படும்.

இ. ஆயுதப் படைகள் அல்லது பாதுகாப்பு படைகள் என்பது மத்திய ஆயுதப்படைகள், பாதுகாப்பு படைகள், காவல் துறை மற்றும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவைகள்.

ஈ. குழந்தை என்பவர் 18 வயதிற்குட்பட்டவர்கள்.

உ. குடும்ப உறவுமுறை என்பது குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம்-2005இல் பிரிவு (2) க இல் உள்ளவாறு பொருள்படும்.

ஊ. ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் என்பது பிரிவு 3இல் உள்ளவாறு பொருள்படும்.

எ. வரைந்தளிக்கப்பட்ட என்பது இச்சட்டத்தின் விதிகளில் வரைந்தளிக்கப்பட்டது.

ஏ. மத நிறுவனங்கள் என்பது மத நிறுவனங்கள் (தவறாக பயன்படுத்தலை தடுக்கும்) சட்டம் 1988இல் உள்ளவாறு பொருள்படும்.

ஐ. பாலியல் கொடுமை என்பது பிரிவு 7இல் உள்ளவாறு பொருள்படும்.

ஒ.பாலியல் துன்புறுத்தல் என்பது பிரிவு 11இல் உள்ளவாறு பொருள்படும்.

ஓ.பகிர்ந்து கொள்ளப்பட்ட இருப்பிடம் என்பது குழந்தை குடும்ப ரீதியாக உறவு கொண்டிருந்தவராக அல்லது கொண்டிருக்கும் குற்றம் இழைத்த நபருடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட இருப்பிடம் என்று பொருள்படும்.

ஔ. சிறப்பு நீதிமன்றம் என்பது பிரிவு 28இன்படி ஏற்படுத்தப்படும் நீதிமன்றமாகும்.

**அத்தியாயம்-02-குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்**

**ஹ. ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் தண்டனைகளும்**

3. ஒரு நபர் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை நிகழ்த்துதல் என்பது.....
   a. ஒரு நபர் தனது பிறப்புறுப்பை குழந்தையின் பிறப்புறுப்பில், வாய், ஆசனவாய் ஆகியவற்றில் நுழைத்தல் அல்லது குழந்தையை செய்ய வைத்தல் அல்லது வேறு நபருடன் செய்ய தூண்டுதல்.
   b. ஒரு நபரின் பிறப்புறுப்பு அல்லாத வேறு ஏதேனும் பொருள் அல்லது தனது உடல் பாகங்களை குழந்தையின் பிறப்புறுப்பில், வாய், ஆசனவாய் ஆகியவற்றில் நுழைத்தல் அல்லது குழந்தையை செய்ய வைத்தல் அல்லது வேறு நபருடன் செய்ய தூண்டுதல்.
   c. குழந்தையின் உடலில் எந்த பாகத்திலும் பிறப்புறுப்பு, சிறுநீர் பாதை, ஆசனவாயில் ஊடுருவத்தக்க வகையில் கையாண்டால்.

d. தீங்கு இழைக்கும் நபர் தனது முகத்தை குழந்தையின் பிறப்புறுப்பு, சிறுநீர் குழாய், ஆவனவாய் போன்ற பகுதிகளில் வைத்தல் அல்லது குழந்தையை வைக்க தூண்டுதல் அல்லது வேறு நபருடன் மேற்கண்டவாறு செய்ய தூண்டுதல்.

4. மேற்கண்ட குற்றங்களை செய்தால் 7 வருடங்களுக்கு குறையாமலும் அதிகபட்சமாக ஆயுள் சிறை தண்டனை வரை விதிக்கப்படும் அல்லது71சிறை தண்டனையுடன் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

**க்ஷ. மோசமான ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல்களும் தண்டனைகளும்**

5. a. காவல் துறையைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....

i. காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்ட அல்லது

ii. காவல் நிலையம் அல்லது தனது அதிகார எல்லைக்கு அல்லாத காவல் நிலையத்திலோ அல்லது

iii. பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது

iv. காவலர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருப்பவர்.

b. ஆயுதப்படை மற்றும் பாதுகாப்பு படையைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....

i. தனக்கு வரையறுக்கப்பட்ட பணி இடத்திலோ அல்லது

ii. தனக்கு ஆயுதப் படை அல்லது பாதுகாப்பு படையால் ஒதுக்கப்பட்ட பணி எல்லைக்குள் அல்லது

iii. பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது

iv. ஆயுதப்படையினர் அல்லது பாதுகாப்பு படையினர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருப்பவர்.

c. அரசுப் பணியைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

d. சிறைத் துறை நிர்வாகத்தை சார்ந்தவர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது பாதுகாப்பு இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட இதர பாதுகாப்பு இல்லங்கள் அல்லது கொட்டடியில் பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

e. அரசு அல்லது தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.

f. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால் அல்லது

g. ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாக மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால்

h. மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் அல்லது சூடேற்றப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது அரிக்கும் பொருளை பயன்படுத்தி ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால் அல்லது

i. ஊடுருவதக்க பாலியல் தாக்குதல் மூலம் கொடூரமான காயம் அல்லது உடல் ரீதியான காயம், குழந்தையின் பால் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால்.

j. குழந்தைகள் மீது ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபடுவோர்...

1. மனநல சட்டம் 1987இன்படி மனநலம் குறித்த விளக்கத்தின்படி ஒரு குழந்தையின் உடல் மற்றும் மன நல அளவில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பாதிப்பை ஏற்படுத்துவோர்.
2. பாலியல் தாக்குதல் மூலம் ஒரு பெண் குழந்தையை கருவுறச் செய்வோர்.

3. அன்றாட பணிகளை தற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாக பாதிக்கும் வகையில் எய்ட்ஸ் அல்லது உயிரை கொல்லும் நோய்கள் அல்லது தொற்று மூலம் உடல் மனநலம் பாதிப்பை ஏற்படுத்துவோர்.
4. உடல் மற்றும் மன ரீதியாக இயலா குழந்தைகளை அவர்களின் இயலாமையை பயன்படுத்தி பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
5. ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது தொடர்ச்சியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
6. 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
7. இரத்த உறவு, தத்தெடுப்பு, திருமணம், பாதுகாவலர், வளர்ப்பு குழந்தை அல்லது பெற்றோருடன் குடும்ப உறவு கொண்டு ஒரே வீட்டில் அல்லது குடியிருப்பு பகுதியில் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
8. குழந்தைகள் தொடர்பாக பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
9. குழந்தைகளுக்கான சேவை செய்யும் ஒரு நிறுவனத்தில் அல்லது காப்பகத்தில் அதன் பொறுப்பானவர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
10. குழந்தை ஏற்கனவே கருவுற்ற நிலையில் இருக்கும் போது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
11. பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குழந்தையை கொலை செய்ய முற்படுவோர்.
12. வகுப்புவாதம் அல்லது குழு மோதலின் போது குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
13. ஏற்கனவே பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குற்றம்சாட்டப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒருவர் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
14. குழந்தையை பாலியல் தாக்குதலை தொடுத்து பொது இடத்தில் நிர்வாணமாக ஓடவிட்டால்.

இவைகள் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதல்களாகும்.

6. தண்டனைகள்

மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபடும் ஒருவருக்கு 10 ஆண்டுகளுக்கு குறையாமலும் அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

### C-பாலியல் தாக்குதலும் தண்டனையும்

7. **பாலியல் தாக்குதல் என்பது**-பாலியல் நோக்கத்தோடு ஒரு குழந்தையின் பெண் ஆண் பிறப்புறுப்புகள், ஆனசக்குழாய், மார்பகங்களை தொடுவது அல்லது பாலியல் தாக்குதலில் ஈடுபடுபவரின் பெண் ஆண் பிறப்புறுப்புகள், ஆனசக்குழாய், மார்பகங்களை குழந்தையை தொட செய்தல் அல்லது வேறு பாலியல் வக்கிரங்களில் ஈடுபடுதல். இதில் உடல் ரீதியான தாக்குதல் இருக்கும் ஆனால் குழந்தை அல்லது குற்றவாளியிடம் ஊடுருவதக்க பாலியல் தாக்குதல் நிகழாது.
8. மேற்கண்ட பாலியல் தாக்குதலில் ஈடுபடும் நபருக்கு 3 ஆண்களுக்கு குறையாமலும் அதிகபட்சமாக 5 வரையிலும் சிறை தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

### D-மோசமான பாலியல் தாக்குதலும் தண்டனையும்

9. a. காவல் துறையைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....

   i. காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்ட அல்லது
   ii. காவல் நிலையம் அல்லது தனது அதிகார எல்லைக்கு அல்லாத காவல் நிலையத்திலோ அல்லது
   iii. பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது
   iv. காவலர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருந்தாலே

b. ஆயுதப்படை மற்றும் பாதுகாப்பு படையைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....

   v. தனக்கு வரையறுக்கப்பட்ட பணி இடத்திலோ அல்லது
   vi. தனக்கு ஆயுதப் படை அல்லது பாதுகாப்பு படையால் ஒதுக்கப்பட்ட பணி எல்லைக்குள் அல்லது
   vii. பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது

viii. ஆயுதப்படையினர் அல்லது பாதுகாப்பு படையினர் என்று அடையாளம் காணப்பட்டாலே, இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருந்தாலே

c. அரசுப் பணியைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

d. சிறைத் துறை நிர்வாகத்தை சார்ந்தவர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது பாதுகாப்பு இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட இதர பாதுகாப்பு இல்லங்கள் அல்லது கொட்டடியில் பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

e. அரசு அல்லது தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.

f. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால் அல்லது

g. ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாக மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால்

(விளக்கம்-உஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால் தனிநபருக்கு விதிக்கப்படும் தண்டனை ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக விதிக்கப்படும்.)

h. மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் அல்லது சூடேற்றப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது அரிக்கும் பொருளை பயன்படுத்தி பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால் அல்லது

i. பாலியல் தாக்குதல் மூலம் கொடூரமான காயம் அல்லது உடல் ரீதியான காயம், குழந்தையின் பால் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால்.

j. குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபடுவோர்...

1. மனநல சட்டம் 1987இன்படி மனநலம் குறித்த விளக்கத்தின்படி ஒரு குழந்தையின் உடல் மற்றும் மன நல அளவில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பாதிப்பை ஏற்படுத்துவோர்.
2. பாலியல் தாக்குதல் மூலம் ஒரு பெண் குழந்தையை கருவுறச் செய்வோர்.
3. அன்றாட பணிகளை தற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாக பாதிக்கும் வகையில் எய்ட்ஸ் அல்லது உயிரை கொல்லும் நோய்கள் அல்லது தொற்று மூலம் உடல் மனநலம் பாதிப்பை ஏற்படுத்துவோர்.
4. உடல் மற்றும் மன ரீதியாக இயலா குழந்தைகளை அவர்களின் இயலாமையை பயன்படுத்தி பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
5. ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது தொடர்ச்சியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
6. 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
7. இரத்த உறவு, தத்தெடுப்பு, திருமணம், பாதுகாவலர், வளர்ப்பு குழந்தை அல்லது பெற்றோருடன் குடும்ப உறவு கொண்டு ஒரே வீட்டில் அல்லது குடியிருப்பு பகுதியில் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
8. குழந்தைகள் தொடர்பாக பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
9. குழந்தைகளுக்கான சேவை செய்யும் ஒரு நிறுவனத்தில் அல்லது காப்பகத்தில் அதன் பொறுப்பானவர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
10. குழந்தை ஏற்கனவே கருவுற்ற நிலையில் இருக்கும் போது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
11. பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குழந்தையை கொலை செய்ய முற்படுவோர்.
12. வகுப்புவாதம் அல்லது குழு மோதலின் போது குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
13. ஏற்கனவே பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குற்றம்சாட்டப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒருவர் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

14. குழந்தையை பாலியல் தாக்குதலை தொடுத்து பொது இடத்தில் நிர்வாணமாக ஓடவிட்டால்.
இவைகள் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதல்களாகும்.

10. தண்டனைகள்
மோசமான பாலியல் தாக்குதலில் ஈடுபடும் ஒருவருக்கு 05 ஆண்டுகளுக்கு குறையாமலும் அதிகபட்சமாக 07 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

**E-பாலியல் துன்புறுத்தலும் தண்டனையும்**

11. ஒரு நபர் பாலியல் துன்புறுத்தல் செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால்...

i. குழந்தைகளிடம் பாலியல் ரீதியான பேச்சுகள்,வார்த்தைகள், சேய்கைகள், பாலியல் எண்ணத்தை தூண்டும் வகையில் பொருட்களை காட்டுவது அல்லது உடலை காட்டுவது
ii. குழந்தையின் உடலை அல்லது உடல் உறுப்புகளை பார்க்கும்படி செய்தல் அல்லது மற்றவர்கள் பார்க்கும் வகையில் செய்தல்.
iii. குழந்தைகளிடம் பாலியல் உள்நோக்கம் கொண்ட பொருட்களை காட்டி அவர்களை தவறான பாலியல் ரீதியாக சித்தரிக்க தூண்டுவது.
iv. ஒரு குழந்தையை தொடர்ந்து பின்தொடர்வது அல்லது கண்காணிப்பது, இது நேரடியாகவோ அல்லது இதர மின்னனு சாதனங்கள் மூலம் கண்காணித்தல் அல்லது தொடர்பு கொள்வது.
v. குழந்தைகளை மிரட்டி தவறாக பாலியல் ரீதியான படங்களை பார்க்க கட்டாயப்படுத்துவது அல்லது இன்னும் பிற ஊடகங்களை காட்டுதல்.
vi. பாலியல் வக்கிர படங்களை காட்டி தூண்டுவது அல்லது அவர்களை வேறு வழிகளில் கவர்ந்து இழுப்பது.

12. மேற்கண்ட குற்றங்களுக்கு 3 வருடங்களுக்கு குறையாமல் சிறை தண்டனை விதிக்கப்படும். சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

**அத்தியாயம்-03**

**குழந்தைகளை ஆபாசமாக படம் எடுத்தலும் தண்டனைகளும்**

01. ஊடகங்களில் குறிப்பாக மின்னனு ஊடகங்களில் (தொலைக்காட்சி , இனையதளம்) நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்களில் குழந்தைகளை ஆபாசமாக சித்தரிப்பது.
1. குழந்தைகளின் பிறப்புறுப்பை காட்சிப்படுத்துவது.
2. குழந்தைகளை தானாகவோ அல்லது தூண்டப்பட்ட பாலியல் சேய்கைகள்
3. குழந்தைகளை ஆபாசமாக சித்தரிப்பது.

14. மின்னனு மற்றும் அச்சு ஊடகங்களில் குழந்தைகளை சித்தரிப்பது மட்டுமல்லாமல் ஆபாச படங்களை தயாரிப்பது, வெளியீடுவது, விநியோகிப்பது குற்றமாகும்.

14.1.1. தண்டனைகள்-குழந்தைகளை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்தால் 5 வருட சிறை தண்டனையும் இரண்டாவது முறை தொடர்ந்து செய்தால் 7 ஆண்டுகள் வரை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

14.1.2. . குழந்தையை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்து படத்தை எடுப்பது மட்டுமல்லாமல் நேரடியாக பங்கேற்றிருந்தால் அவருக்கு 10 வருடங்களுக்கு குறையாமல் அதிகபட்சமாக ஆயுள் சிறை தண்டனை வரை விதிக்கப்படும். மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

14.2.1 . குழந்தையை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்து எடுக்கும் படத்தில் நேரடியாக பங்கேற்றிருந்தால் அவருக்கு ஆயுள் சிறை தண்டனை முதல் 8 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

15. வணிக நோக்கில் ஆபாச அச்சு பொருட்கள் மற்றும் மின்னனு பொருட்களை சேகரித்து வைத்தால் 3 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

**அத்தியாயம்-04**

## குற்றம் செய்வதற்கான முயற்சி மற்றும் உடந்தை

16. ஒருவர் இக்குற்றத்தை செய்ய...

1. ஒருவரை இக்குற்றத்தை செய்ய தூண்டுவது.
2. ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இணைந்து குற்றச் செயலில் ஈடுபட சதி செயலில் ஈடுபடுவது.
3. குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அச்சுறுத்துவது, கட்டாயப்படுத்துவது, கடத்துதல், ஏமாற்றுவது, பொய் சொல்வது, அதிகாரம், குழந்தையின் இயலாத நிலை, ஆசை காட்டி இணங்க செய்தல் போன்றவை இச்செயல்களுக்கு உதவும் செயலாக கருதப்படும்.

17, 18. தண்டனை- உடந்தையாக செயல்பட்டமைக்கு அல்லது தூண்டியமைக்கு, ஆயுள் தண்டனையில் பாதியளவு தண்டனை அளிக்கப்பட வேண்டும். அல்லது பாலியல் குற்றங்களுக்கு வழங்கப்படும் நீண்டகால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம்-05

## அறிக்கை தயார் செய்யும் முறை

**19.** (1). குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973இன்படி குறிப்பிட்ட பாலியல் தொடர்பாக குற்றம் நடைபெற்றிருந்தால் அல்லது நடைபெற்றதை ஏதோ ஒரு வகையில் அறிந்திருந்தால் (பாதிக்கப்பட்ட குழந்தையும் உள்ளடக்கம்) கீழ்க்கண்டவர்களுக்கு புகாராக தெரிவிக்கலாம்.

a) சிறப்பு சிறார் காவல் பிரிவு

b) உள்ளூர் காவல் துறை

(2). ஒவ்வொரு அறிக்கையும் துணைப் பிரிவு (1)இன்படி கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

a) எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட எண் கொடுக்க வேண்டும்.

b) தகவல் தருபவருக்கு வாசித்து காட்ட வேண்டும்.

c) காவல் பிரிவில் இதற்கென ஆவணப் புத்தகம் தனியாக பராமரிக்க வேண்டும்.

(3). அறிக்கையில் பதிவு செய்யப்படும் தகவல்கள் எளிய மொழியல் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.

(4). குழந்தை புரிந்து கொள்ளும் வகையில் அறிக்கை இல்லையெனில் குழந்தைக்கு புரியும் வகையில் அனுபவம் உள்ள மொழிப் பெயர்பாளர் அல்லது தொடர்பாளரை வைத்து கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

(5). பாதிக்கப்பட்ட குழந்தைக்கு பாதுகாப்பு தேவை என்று சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினர் கருதினால் அறிக்கை கிடைத்த 24 மணி நேரத்திற்குள் பாதுகாப்பும் கவனிப்பும் அளிக்க வேண்டும். தேவையெனில் மருத்துவ வசதியும் செய்து தர வேண்டும்.

(6). 75சிறப்பு சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினர் அறிக்கை கிடைத்த 24 மணி நேரத்திற்குள் சிறப்பு நீதிமன்றத்திற்கும் குழந்தைகள் நல (Child Welfare Committee) குழுவிற்கும் தெரிவிக்க வேண்டும்.

(7). தகவல்களை அளிப்பவர்களுக்கு எந்தவிதமாக பிரச்சனைகளும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**20.** ஊடகம், உணவகம், தங்கும் விடுதிகள், மனமகிழ் மன்றங்கள், ஸ்டுடியோ அல்லது புகைப்படம் எடுக்கும் வசதியுள்ள இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் பணித் தளத்தில் குழந்தைகளை பாலியல் ரீதியாக சுரண்டக் கூடிய வகையிலான ஆபாசப் படம் எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக சிறார் சிறப்பு காவல் பிரிவுக்கு அல்லது உள்ளூர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**21.** a. பிரிவு 19இன் துணைப் பிரிவு 1 இன்படியும் பிரிவு 20இன்படியும் சம்பவம் நடந்து உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்க தவறினால் 6 மாத காலத்திற்கு குறையாத கால அளவிற்கு சிறை தண்டனையும் மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

b. ஒரு கம்பெனி அல்லது நிறுவனத்தில் அதிகாரியாக அல்லது மற்றவர்களின் பணிகளை மேற்பார்வையிடும நபரின் அதிகாரத்தின் கீழ் அவருடைய சகாக்கள் பிரிவு 19இல் துணைப் பிரிவு 1 இன்படி தகவலை உரிய சிறார் சிறப்பு காவல்

பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினருக்கு தகவல் தர தவறினால் அவருக்கு 1 வருடத்திற்கு குறையாமல் சிறை தண்டனையும் மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

**22.** 1. எவரேனும் ஒருவரை பயமுறுத்தவோ, நற்பெயரை கெடுக்கவோ, அவரது மாண்பை குலைக்கும் நோக்கில் பொய் புகாரோ அல்லது பொய் தகவலோ அளித்தால் அது குற்றம். இதற்கு 6 மாதத்திற்கு குறையாமல் சிறை தண்டனையும் அபராதம் என தனித் தனியே அல்லது இரண்டும் சேர்ந்து வசூலிக்கப்படும்.

1. மேற்கண்ட பொய் புகாரை ஒரு குழந்தை அளித்த புகார் பொய்யாக இருக்குமானால் குழந்தைக்கு எவ்வித தண்டனையும் அளிக்கக் கூடாது.
2. குழந்தையாக அள்ளாமல் ஒருவர் குழந்தையின் மீது பொய் புகார் அளித்தால் அவருக்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனை விதிக்கப்படுவார் அல்லது அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

**23.** 1. ஒருவருடைய தனிப்பட்ட அந்தரங்கத்தை பாதிக்குமு வகையில் எவ்வகையான ஊடகத்திலும், வழக்கின் முழுமையான தகவல் தெரியாமல் வழக்கு பற்றிய தகவல்களை அளிக்கக் கூடாது அல்லது பகிர்ந்து கொள்ளக் கூடாது.

2. ஊடகங்களில் குழந்தையின் பெயர், முகவரி, புகைப்படம், குடும்ப விபரம், பள்ளி, அண்டை வீட்டார் மற்றும் இன்னும் பிற விபரங்களை வெளியிடக் கூடாது.(சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட 3 குழந்தைகளின் பெயர்களை நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டதை தொடர்ந்து எழுந்த அமளியால் உடனடியாக மன்னிப்பு கோரினார்.) குழந்தையின் நலனில் பாதிப்பு ஏற்படாது என்று சிறப்பு நீதி மன்ற கருதினால் அறிக்கை வெளியிட அனுமதிக்கலாம்.

3.ஊடக வெளியீட்டாளர் அல்லது ஸ்டுடியோ உரிமையாளர் ஆகியோருக்குமு இரகசியத்தை காக்கும் உரிமை உள்ளது.

4. துணைப் பிரிவு 1 மற்றும் 2இல் உள்ள அடிப்படையான அம்சங்களை மீறுவோர் அல்லது முரண்படுவோர் 6 மாதத்திற்கு குறையாமலும் 1 வருட வரையிலான சிறை தண்டனை மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

## அத்தியாயம்-06

## குழந்தையின் வாக்குமூலத்தை பெறும் முறைகள்

**24.** 1. குழந்தையின் வாக்குமூலத்தை அதன் வீட்டிலேயே பெற வேண்டும் அல்லது அதற்கு தோதான இடத்தில் பெற வேண்டும். காவல் உதவி ஆய்வாளர் தகுதிக்கு குறையாத பெண் காவல் அதிகாரியே வாக்குமூலத்தை பெற வேண்டும்.

2. குழந்தையின் வாக்குமூலத்தை பெறும் காவல் துறை அதிகாரி தனது காவல் உடையில் வாக்குமூலத்தை பெறக் கூடாது.

3. விசாரணை நடைபெறும் போது எக்காரணம் கொண்டும் குற்றவாளி குழந்தையை சந்திக்கும் வாய்ப்பு அளிக்கக் கூடாது.

4. எக்காரணம் கொண்டும் பாதிக்கப்பட்ட குழந்தையை இரவில் காவல் நிலையத்தில் தங்க வைக்கக் கூடாது.

5. காவல் துறை அதிகாரி எக்காரணம் கொண்டும் வெகுஜன ஊடகங்களில் குழந்தையைப் பற்றிய தகவல்க76 வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தையின் நலன் கருதி சிறப்பு நீதிமன்றம் இசைவு தெரிவிக்கும் தகவல்களை மட்டும் வெகுசன ஊடகங்களில் வெளியிடலாம்.

**25.** 1. குற்றவியல் நடைமுறை விதிகள்164இன்படி மாஜிஸ்ரேட் குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்வார். மாஜிஸ்ரேட் குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்யும் போது குற்றவியல் நடைமுறை விதிகள் 164 இன் பிரிவு 1இன்படி குற்றவாளியின் வழக்கறிஞர் இருக்க வேண்டும் என்ற விதி இத்தகைய வழக்குகளில் பொருந்தாது.

**26.** 1. குழந்தையின் வாக்குமூலத்தை பெற்றோர் அல்லது உறவினர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மாஜிஸ்ரேட் அல்லது காவல் துறை அதிகாரி குழந்தை பேசுவதை அப்படியே பதிவு செய்வார்.

2. பதிவு செய்யும் காவல் துறை அதிகாரி அல்லது மாஜிஸ்ரேட் தேவைப்படுமானால் திறமையான மொழிப் பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளலாம்.

3. குழந்தை உடல், மன ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் வாக்குமூலம் அளிப்பதில் சிக்கல் இருந்தால் இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற நபரை தொடர்பாளரா வைத்து குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும்.

4. சாத்தியப்படும் சூழல்களில் குழந்தையின் வாக்குமூலத்தை ஒலி, ஒளி முறைகளில் பதிவு செய்ய வேண்டும்.

27. இச்சட்டத்தில் வரையறுத்துள்ளபடி பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை முதல் தகவல் அறிக்கை, புகார் அளிக்காமல் இருக்கும் சூழலிலும் குற்றவியல் நடைமுறை விதிகள்1973 இன்படி பிரிவு 164A இன்படி மருத்துவ பரிசோதனை நடத்த வேண்டும்.

2. பாதிக்கப்பட்டது பெண் குழந்தையாக இருக்கும் என்றால் பெண் மருத்துவர்தான் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

3. பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர்களின் முன்னிலையில் பரிசோதனை நடைபெற வேண்டும்.

4. மருத்துவ பரிசோதனையின் போது பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் வர மறுத்தால் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் ஒரு பெண் முன்னிலையில் நடத்தலாம்.

## அத்தியாயம்-07

## சிறப்பு நீதிமன்றம்

**28. சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்துதல்-**

1. இச்சட்டத்தின் கீழ் வழக்கு விசாரணை விரைவாக நடைபெறும் வகையில் மாநில அரசு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசனை செய்து மாவட்டம் தோறும் சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தி அரசிதழில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.

குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் சட்டம்-2005இன்படி ஏற்படுத்தப்பட்ட சிறப்பு77சிறார் நீதிமன்றம் அல்லது வேறு ஏதேனும் குழந்தைகள் பாதுகாப்புக்கென்று ஏற்படுத்தப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களும் இப்பிரிவின் கீழ் சிறப்பு நீதிமன்றமாக கருதப்படும்.

2.இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றத்தை செய்தவரை இச்சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும் அதே வேலையில் குற்றவாளி குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973இன்படியும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்.

29. ஒரு நபர் குற்றம் இழைத்த அல்லது தூண்டிய அல்லது உடந்தையாக இருந்தமைக்கு இச்சட்டத்தின் பிரிவுகள் 3,5,7 மற்றும் 9 இன்படி குற்றம் சாட்டப்பட்டிருந்தால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை என்று நிருபிக்கும் வரை சிறப்பு நீதி மன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாகவே பார்க்கும்.

30. இச்சட்டத்தின்படி ஒருவர் மீது குற்றம் சாட்டப்படும் போது அவர் குற்றமிழைக்கும் மனநிலையில் உள்ளவரா என்பதை அறிய வேண்டும். அவரே தனக்கு அப்படி ஒரு மனநிலை இல்லை என்று நிருபிக்க வேண்டும்.

31. குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973 இன்படி உள்ள நடைமுறைகள் சிறப்பு நீதிமன்றத்திற்கும் பொருந்தும். (பிணை மற்றும் பிணையப் பத்திரமும் உள்ளடக்கம்).

32. 1. இச்சட்டத்தின்படி சிறப்பு நீதிமன்றத்தில் வாதாட சிறப்பு அரசு வழக்கறிஞரை நியமித்து அரசிதழில் வெளியிட வேண்டும்.

2. சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமிக்கப்படுபவர் அனைத்து தகுதிகளையும் பெற்று 7 ஆண்டுகளுக்கு குறையாமல் வழக்கறிஞர் பணியை செய்திருக்க வேண்டும்.

## அத்தியாயம்-08

## சிறப்பு நீதிமன்றங்களின் நடைமுறைகள், அதிகாரங்கள் மற்றும் சாட்சியங்களைப் பதிவு செய்யும் முறை

**33.** 1. இச்சிறப்பு நீதிமன்றம், இச்சட்டத்தின்கீழ் தான் அறிந்த குற்ற செயல்களை வழக்காக எடுத்துக் கொள்ள முடியும். குற்றங்கள் நிகழ்ந்ததாகக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் அல்லது காவல் துறையினர் தரும் அறிக்கையின் அடிப்படையிலோ வழக்கை சிறப்பு நீதிமன்றம் எடுக்க முடியும். அதனால் குற்றம் சுமத்தப்பட்டவரை விசாரணைக்கு உட்படுத்திய பின்புதான் வழக்கை எடுக்க வேண்டும் என்ற அவசியம் எழாது.

3. சிறப்பு நீதிமன்றம் குழந்தையை விசாரிக்கும் போது சீரான இடைவெளி78விட்டு விசாரிக்க வேண்டும்.

4. சிறப்பு நீதிமன்றத்தின் நடைமுறைகள் குழந்தைகள் மைய நடைமுறைகளாக இருக்க வேண்டும். அவர்களுக்கு பயத்தை போக்கி நம்பிக்கை ஏற்படுத்துவம் வகையில் குடும்ப உறுப்பினர்கள், பாதுகாவலர், உறவினர்கள் மற்றும் நன்பர்கள் ஆகியோரை அனுமதிக்க வேண்டும்.

5. குழந்தையை வழக்கு விசாரணைக்காக தொடர்ந்து அழைக்காமல் இருப்பதை உறுதிச் செய்ய வேண்டும்.

6. வழக்கு விசாரணையின் போது குழந்தையின் மாண்பு எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதனால் குழந்தைகளிடம் கேட்கப்படும் கேள்விகளில் எளிமையாகவும் அவர்களின் நடத்தையை கேள்விக்குள்ளாக்காமல் இருப்பதையும் உறுதிச் செய்ய வேண்டும்.

7. சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் போதும், விசாரணை நடைபெறும் போதும் குழந்தையின் அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடாது.

8. பொருத்தமான சில வழக்குகளில் சிறப்பு நீதிமன்றம் கூடுதல் தண்டனையை விதிக்கும் அதே போல் உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைக்கு நேரடியாக செலுத்ததக்க வகையிலான அபராத தொகையினையும் விதிக்கும்.

**34.** 1. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை ஒரு குழந்தை (18 வயது வரை) செய்தால் இளம் சிறார் நீதிச் சட்டம்-2000ன் கீழ் விசாரிக்க வேண்டும்.

2. ஒரு குழந்தையின் வயது குறித்த சர்ச்சை வரும் போது பொருத்தமான வயது உள்ளதா அல்லது இல்லையா என்பதை சிறப்பு நீதிமன்றமே தீர்மானிக்கும்.

**35.** 1. குழந்தை தரும் சாட்சியத்தை, சிறப்பு நீதிமன்றம் 30 நாட்களுக்குள் பதிவுச் செய்ய வேண்டும். சாட்சியத்தை பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால் அதற்கான உரிய காரணங்களுடன் சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டும்.

1. நீதிமன்றத்தில் வழக்கை எடுத்து ஓராண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

**36.** 1. குழந்தை சாட்சியம் அளிப்பதை பதிவு செய்யும் போது எக்காரணம் கொண்டும் குற்றம் சுமத்தப்பட்டவர் அறிய வாய்ப்பு தரப்படல் கூடாது. அதே நேரத்தில் குழந்தை தரும் சாட்சியத்தின் முக்கிய அம்சங்களை மட்டும் வழக்கறிஞர் மூலம் குற்றம் சுமத்தப்பட்டவர் அறிந்து கொள்ளலாம்.

2. குழந்தையின் சாட்சியத்தை வீடியோ கான்பரன்சிங் மூலம் அல்லது ஒரு பக்க பார்வை உடைய கண்ணாடி மூலம் அல்லது இன்னும் பிற பொருத்தமான கருவிகள் மூலம் பதிவுச் செய்யலாம்.

**37.** 1. சிறப்பு நீதிமன்றம் தனது விசாரணையை மறைவாகவும் நடத்தலாம். இம்மறைவான விசாரணையின் போது குழந்தையின் பெற்றோர் அல்லது நம்பிக்கையான நபர்கள் உடன் இருக்கலாம்.

2. சிறப்பு நீதிமன்றம், விசாரணையை நீதிமன்றத்திற்கு வெளியே நடத்த விரும்பினால் குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973இன்படி பிரிவு 284இன்படி நடத்தலாம்.

**38.** 1. குழந்தையின் சாட்சியத்தை முழுமையாக பதிவுச் செய்ய தகுதியான மொழிப் பெயர்பாளரை நியமித்துக் கொள்ளலாம்.

2. ஒரு குழந்தை உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தால் அத்தகைய குழந்தைகளின் சாட்சியங்களையும் முழுமையாக பதிவு செய்ய இத்தகைய குழந்தைகளை கையாளும் அனுபவம் உள்ள நிபுணர்களின் உதவியுடன் பதிவுச் செய்யலாம்.

**அத்தியாயம்-09**

**இதர அம்சங்கள்**

**39. குழந்தை சிறப்பு வல்லுநர்களின் உதவியைப் பெறுதற்கான வழிகாட்டல்–**விசாரணைக்கு முன்பு அல்லது விசாரணையின் போது குழந்தைக்கு உதவி செய்ய அரசு சார நிறுவனங்களை சார்ந்தோர், நிபுணர்கள், தொழில்முறை வல்லுநர்கள், உளவியல் அறிஞர்கள், சமூகப் பணியாளர்கள் போன்றோரை பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாநில அரசு வழிகாட்டுதலை உருவாக்க வேண்டும்.

**40. குழந்தை சட்ட உதவிப் பெறுவதற்கான உரிமை–** குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973இன் பிரிவு 301இன்படி குழந்தையின் குடும்பத்தினர் அல்லது பாதுகாவலர் சட்ட உதவி ஆணையத்தை அனுகி இச்சட்டத்தின் கீழ் நடைபெற்ற குற்றத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. தேவைப்பட்டால் இலவச சட்ட உதவி ஆணையத்தின் மூலம் வழக்கறிஞரை வைத்துக் கொள்ளலாம்.

**41. பிரிவு 03 முதல் 13 வரை உள்ள பிரிவுகள் சில வழக்குகளுக்கு பொருந்தாது**-பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன் பிரிவு 3 முதல் 13 வரை உள்ள அம்சங்கள் குழந்தைகளுக்காக நடத்தப்பெறும் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் பொருந்தாது.

**42. மாற்று தண்டனைகள்–** இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் நபருக்கு வேறு சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்குமானால் இதில் எது அதிகமோ அத்தண்டனையை குற்றவாளி பெறுவார்.

**43**. சட்டம் பற்றிய பொது விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்–

- சட்டம் பற்றிய விழிப்புணர்வை பரந்த அளவில் முன்னேடுத்து செல்ல வேண்டும். இதற்கு அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள் மூலம் சீரான இடைவெளியில் சட்டம் பற்றிய விளம்பரங்கள் செய்ய வேண்டும். இதன் மூலம் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை குழந்தைகள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் தெரிந்து கொள்வார்கள்.
- இச்சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு (காவல் துறையினர் உட்பட) சீரான இடைவெளியில் பயிற்சி அளிக்க வேண்டும்.

**44.** 1. சட்டம் நடைமுறைப்படுத்துவதை கண்காணித்தல்– தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை இசட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும்.

2. இச்சட்டத்தின்படி ஒரு குற்றம் நிகழ்ந்திருக்கும் சூழலில் அதனை விசாரிப்பதற்கான உரிமை தேசிய மற்றும் மாநில ஆணையங்களுக்கு உண்டு.

3. ஒவ்வொரு ஆண்டும் தேசிய மற்றும் மாநில ஆணையம் இச்சட்டம் தொடர்பான தனது செயல்பாடுகளை உள்ளடக்கிய ஆண்டறிக்கையை தயார் செய்ய வேண்டும்.

**45.** 1. மத்திய அரசு இச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவம் வகையில் விதிகளை அரசிதழில் வெளியிட வேண்டும்.

2. மொழிப் பெயர்ப்பாளர், தொடர்பாளர், வல்லுநர் ஆகியோரின் தகுதிகள், விதிகள், அளிக்கப்பட வேண்டிய சம்பளம், குழந்தைகளுக்கான அவசர மருத்துவ சிகிச்சை, நஷ்ட ஈடு வழங்கல் மற்றும் இதர பிரிவுகளை கண்காணிக்கும் முறைகள்.

**46.** இச்சட்டத்தை நடைமுறைப்டுத்துவதில் குழப்பம் ஏதாவது ஏற்படுமானால் மத்திய அரசு உரிய மாற்றங்களை செய்து அரசிதழில் வெளியிட வேண்டும்.

குறிப்பு-

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்-2012 தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழாக்கத்தில் பொருள் கொள்வதில் ஏதாவது குழப்பம் அல்லது சந்தேகம் இருந்தால் இதன் ஆங்கில மூலசட்டத்தை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் இணையத்தளத்தில் பார்க்கவும். எளிய முறையில் மக்களுக்கு பொது நலன் கருதி தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. நன்றி.

**-தமிழாக்கம் எல்.பெர்னாட்**

# பெண்ணுடல் மீதான வன்முறை

பெண்ணுடல் மீதான ஆணின் கண்காணிப்பும், அதனை தொடர்ந்த பலாத்காரமும், பாலியல் வதையும் இந்தியாவில் சமீப ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றனஆதி மனித . சமூகம் தாய்வழி சமூக கட்டமைப்பிலிருந்து தந்தை வழி சமூக கட்டமைப்பிற்கு மாறிய நிலையில் இதற்கான தொடக்கம் குறிக்கப்பட்டு விடுகிறது. நிலப்பிரபுத்துவ சமூக கட்டமைப்பில் தான் பெண்கள் அதிகம் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள்முந்தைய அடிமை முறை சமூகத்தில் அதற்கு . பெண்கள் அடிமைகளாக மாற்றப்பட்டு வன்புணர்விற்கு பிறகு கொல்லப்பட்டார்கள். வரலாற்றில் தந்தைவழி சமூக மாறுதலுக்கு பிந்தைய எல்லா சமூக கட்டமைப்பிலும் பெண்களின் உடல் என்பது ஆணின் அதிகாரத்திற்கு உட்பட்டது தான்இதன் . தொடர்ச்சியில் இன்றைய நவீன காலகட்டத்தில் அதன் வடிவம் மாறியிருக்கிறதுஅதே . நேரத்தில் பெண்களின் சமூக இருப்பும் மாற்றமடைந்திருக்கிறதுஇன்று சராசரி . இந்திய பெண் எதிர்கொள்ளும் முக்கிய சவால் என்பதே தன் மீதான ஆணின் அதிகாரத்தை வெல்வது தான் .சராசரி ஆண் போல் பெண்களுக்கு 24X7 நடமாடும் சுதந்திரம் )Freedom of Mobility) என்பது ஆபத்தானதாகவும், நிச்சயமற்றதாகவும் இருக்கிறதுசூரிய மறைவிற்கு . பின் நடமாடுவது என்பதேஇந்தியாவின் பெரு நகரங்கள் தொடங்கி சிறு கிராமங்கள் வரை பெண்களுக்கு மிக பாதுகாப்பற்றதாக இருக்கிறதுபல இரவு நேர பாலியல் . ங்கள் மிக இயல்பான ஒன்றாகவன்முறை சம்பவ மாறி விட்டனஇந்தியாவில் . பாலியல் வன்முறை என்பது அசாதாரண நிலையிலிருந்து சாதாரண நிலைக்கு மாற்றமடைந்து வருகிறதுஇந்நிலையில் இதற்கான அடிப்படை . காரணம் என்ன என்பதைப்பற்றி சமீபத்தில் ஐநா சபையின் சார்பில் தெற்காசியா. மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஆண்களிடம் சர்வே ஒன்று நடத்தப்பட்டது.

அதில் பாலியல் வன்முறைக்கான காரணம் என்பதை குறித்து பல கேள்விகள் கேட்கப்பட்டன அதில் .70 -80 சதவீத ஆண்கள் பாலியல் வன்முறைக்கான காரணம் குறித்து பின்வருமாறு தெரிவித்தார்கள்முதலாவது ஆண்கள் தங்களுக்கு . பெண்களின் ஒப்புதல் இல்லாமலேயே அவர்கள் மீது பலாத்காரம் செய்ய உரிமை இருப்பதாக நம்புகின்றனர்இரண்டாவது வெறும் வேடிக்கை ., கோபம் அல்லது அவர்களுக்கான தண்டனை என்பதாக கருதுகின்றனர்இதில் மது உட்கொள்ளல் என்பது . ஒரு சிறு காரணம் மட்டுமேமேலும் பல பெண்களுடன் உறவு .,பாலியல் தொழிலாளர்களுடன் உறவு, மனைவி மீதான உடலியல் வன்முறை போன்றவையும் இதற்கான கூடுதல் காரணங்கள் என்று அறியப்பட்டனமேலும் ஆண்மையை நிரூபிக் .கும் சோதனைக்கூடமாக பெண்ணின் உடலை வக்கிர ஆண்களில் ஒருபகுதியினர் கருதுகின்றனர்இதன் நீட்சியில் மற்றுமொரு முக்கிய காரணமாக குழந்தை . பருவத்தில் குடும்பத்தால், சமூகத்தால் தாங்கள் உளவியல் மற்றும் உடலியல் சித்திரவதைக்கு உள்ளானதன் பழிவாங்கும் செயல்முறை தான் இந்த பலாத்காரம் என்கின்றனர் . அவர்களுக்கு ஆரம்பக்கல்விமறுக்கப்படுவது கூட இதனை நோக்கி அவர்களை நகர்த்துகின்றதுரும்பாலான பாலியல்மேலும் முக்கியமான ஒன்றாக பெ . பலாத்காரங்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அறிமுகமான நபர்களாலே நிகழ்த்தப்படுகின்றன இந்தியாவில் .பாதிக்கப்படும் பெண்களில் நான்கில் மூன்று பேர் பாலியல் குற்றவாளிகளை சரியான அடையாளம் காண்கின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர் தங்களுக்கு நடந்த சம்பவம் குறித்து வெளிப்படுத்துவதில்லைகாவல்துறையில் புகார் அளிக்க . முன்வருவதில்லைமருத்துவ பரி .சோதனைக்கும் அவர்கள் தயாரில்லைகாரணம் .

இந்திய சமூகம் காலங்காலமாக கட்டமைத்து அசைக்காமல் வைத்திருக்கும் பெண்ணிற்கு எதிரான ஆதிக்க மதிப்பீடு தான்னால் தங்களின் எதிர்காலம் இத . பாதிக்கப்படுமோ என்று அவர்கள் அச்சங்கொள்கின்றனர்குற்றவாளிகள் நீதியின் முன் . நிறுத்தப்படும் போது போதுமான சாட்சியங்களுடன், மருத்துவ அறிக்கையும் அவர்கள் மீதான குற்றத்தை நிரூபிக்க ஆதார மூலங்களாக தேவைப்படுகின்றனஆனால் . பாதிக்கப்படும் பெண்கள் தங்களின் எதிர்காலம் கருதி சுய ஆதாரங்களை அழித்து விட்டு உடலை சுத்தம் செய்து விடுவதால் சில சமயங்களில் குற்றத்தை நிரூபிக்க ஆதார பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறதுஇதுவும் இன்றைய இந்தியாவில் பாலியல் . வன்முறை வழக்குகளின் பலவீனத்திற்கு காரணமாகி விடுகிறதுசமயங்களில் பல . குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள்இந்தியாவில் கிரிமினல் சட்ட . நடைமுறைகளில் உள்ள பலவீனம் கூட ஒருவகையில் இப்படியான வன்முறைகள் திரும்ப திரும்ப நிகழ்வதற்கு காரணமாகி விடுகின்றனகுற்றத்திற்கான தண்டனை உறுதியாக ., விரைவாக கிடைக்கும் என்ற நிச்சயமற்ற சூழல் பலருக்கு சிறைச்சாலை குறித்த அசட்டுத்தைரியத்தை கொடுக்கின்றனநடைமுறை இவ்வாறு இருக்க ஆண் பெண் . இணைந்த சமூகத்தில் இதற்கான தீர்வு குறித்து ஆராய வேண்டியதிருக்கிறது.

இந்தியாவின் சமூக கட்டமைப்பில் ஆண் பெண் உறவு குறித்த மதிப்பீடுகள், பெண் உடல் மற்றும் உடை ஆகியவற்றின் மறுசிந்தனை அவசியமாகிறது . கல்விமுறையில் மாற்றம் என்பது இதன் சிறுபகுதியே குறிப்பாக பாலியல் குறித்த . அறிவியல் பூர்வமான ஊட்டத்தை இளந்தலைமுறையினர் மத்தியில் அளிப்பது இன்றைய சூழலில் மிக அவசியமான ஒன்றுஅதாவது அதனை பாலியல் கல்வியாக . க்ககல்விநிலையங்களில் போதி வேண்டும்இதற்கான குரல்கள் பல காலமாக இந்தியா . முழுவதும் எழுந்து வருகின்றன .உலகில் பாலியல் குறித்தும், பாம்பு குறித்தும் தான் அதிகமான தவறான நம்பிக்கைகள் )Myth)நிலவுகின்றனஅறிவியல் பூர்வமான பாலியல் . கல்வி முறை இதனை போக்கும் என்பது பலரின் எதிர்பார்ப்புதாவது இருபாலர் அ . இணைந்த கல்விக்கூடங்களில் இதனை தனித்தனியாகவோ அல்லது சூழலை பொறுத்து இருவருக்கும் சேர்த்தோ நடத்தலாம்இதன் மூலம் பெண் குறித்த ஆணின் . பல தவறான பிம்பங்கள் உடைய வாய்ப்பிருக்கிறதுமேலும் ஆண் பெண் உறவு குறித்த . முறையியல், மதிப்பீடுகள், வரைமுறைகள் மாற வேண்டும்இருபாலர் கல்வி மற்றும் . இருபாலரும் இணைந்த பணி முறை ஆகியவை இம்மாதிரியான மதிப்பீடுகளை ஓரளவிற்கு மாற்றி இருக்கின்றனஆனால் இன்றைய நிலையில் ஒரு பெண் மற்றொரு . பெண்ணுடனோ அல்லது ஓர் ஆண் மற்றொரு ஆணுடனோ தொடர்பு கொண்டால் அது நட்பாக பார்க்கப்படுகிறதுஅதே . நேரத்தில் ஓர் ஆண் மற்றொரு பெண்ணுடனோ அல்லது ஒரு பெண் மற்றொரு ஆணுடனோ தொடர்பு கொண்டால் அது நட்பிற்கு அப்பால் கவர்ச்சியாக , உடலியல் ரீதியான தொடர்பாக பார்க்கும் மனோபாவம் நிலவுகிறதுஇந்த தவறான மனோபாவம் கண்டிப்பாக . மாற வேண்டியது அவசியம் . கொண்ட நட்பு என்பது பரஸ்பர அறிமுகம், உரையாடல் கொண்ட ஓர் ஆத்மார்த்த உளவியல் கூறேஇதன் எதார்த்த அர்த்தம் . மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும் . மேலும் பெண்ணுடல் குறித்த ஆணின் பார்வையாக இன்றைய நிலையில் பெண் அணியும் உடை முன்வைக்கப்படுகிறதுஇனக்குழு . சமூக காலகட்டத்தில் ஆணும் பெண்ணும் இடுப்புக்கு கீழே உடை அணிந்த காலத்தில் அது மேலும் பரிணாம வளர்ச்சி பெற்று உடல் முழுவதையும் மறைக்கும் ஒன்றாக மாறியதுநவீன சமூகம் உடையை . தேர்வு செய்ய காலநிலை, உடல்பொருத்தம் மற்றும் சௌகரியம் போன்ற பல வரைமுறைகளை வகுத்துக்கொண்டு செயல்படுகிறது.

மேற்குலகை பொறுத்தவரை இது ஓரளவிற்கு சரியாக கடைபிடிக்கப்படுகிறது . அங்கு உடை ஒரு பெரும் விவாதப்பொருளே அல்லமாறாக இந்தியா போன்ற வளரும் .

நாடுகளில் உடை என்பது மேற்கண்ட வரைமுறைகளை தாண்டி நாகரீகம் மற்றும் தன்னை வெளிப்படுத்தல் என்ற அம்சங்களாக பார்க்கப்படுகிறதுஅழகு சாதன . பொருட்களுக்கு உலகில் இந்தியா மிகப்பெரும் சந்தை என்பதும் இதனோடு சேர்த்து கவனத்தில் கொள்ள வேண்டியதிருக்கிறதுஉலகமயமாக்கலுக்கு பிறகு ஆடை . சந்தைகளில் பெண்களுக்காக விதவிதமான வடிவங்களில், நிறங்களில், வகைகளில் உடைகள் வந்திறங்குகின்றனஇங்கு எல்லாவித உடைகளும் ஆணின் . கண்காணிப்பிற்கும், கவனத்திற்கும் உட்பட்ட ஒன்றாகவே இருக்கின்றனபெண்கள் . தலைமுதல் கால் வரை முழுவதுமாக தங்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் பிற்போக்கு ஆண்களும், உங்களுக்கு சுதந்திரம் கொடுக்கிறோம் என்று விதவிதமான வடிவங்களில் உடைகளை தயாரித்து பெண்களுக்கு வழங்கும் ஆண்களும் தங்கள் நோக்கத்தில் ஒன்றுபட தான் செய்கின்றனர்.

பெண்ணின் உடல் என்ற நோக்கம் தான் அது .ஆனால் இன்றைய இந்தியாவில் எல்லாவிதமான உடைகளும் பெண்களுக்கு சவாலாக தான் இருக்கின்றனகாரணம் . பெண்கள் மீதான வன்முறை என்பது அதை தாண்டியே இருக்கிறதுகண்முன் நிகழ்ந்து . கொண்டிருக்கும் பல சம்பவங்களை நாம் மேற்கோள் காட்ட முடியும்ஆக இன்றைய . இந்தியாவில் விவாதபொருளாகி இருக்கும் உடையை பொறுத்தவரை உடை தான் எல்லா பிரச்சினைகளுக்கான காரணம் என்பதோ அல்லது உடை தான் பெண் விடுதலைக்கான கூறு என்பதோ இரண்டுமே அபத்தமான வாதம் தான்வக்கிர . கு அது ஒரு பொருட்டேஆண்களுக் அல்லஅவர்களின் கண்காணிப்பும .ு, இச்சையும் பெண்ணுடல் என்ற இலட்சிய கருத்தாக்கத்தை நோக்கியே இருக்கின்றது . தோல்சுருங்கிய மூதாட்டிகள் கூட பலாத்காரத்திற்கு உள்ளாவது இதனால் தான் . இன்றையகல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார அம்சங்களில் இன்றைக்கு பெண்கள் படிப்படியாக சுதந்திர தேடலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் சூழலில் உடையை தாண்டிய சிந்தனைகள் அதிகம் அவசியப்படுகிறது .ஆண்பெண் உடலை தாண்டிய - .சிந்தனை தான் அதுஎந்த சூழலிலும் அது பெண்ணுடலை வன்முறைக்கு உட்படுத்தாத ஒன்றாக இருப்பது அவசியம்.

**நன்றி - [எச்பீர்முஹம்மது.](http://www.penniyam.com/2014/09/blog-post_22.html)**
http://www.penniyam.com/2014/09/blog-post_22.html

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – புரிதல்

**பாலியல் பலாத்காரமும் சித்ரவதையும் எவ்வாறு ஒன்றுக் கொன்று தொடர்புடையது**

அ) சித்ரவதை வழக்குகளில் பெரும்பாலானவை பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் சம்பந்தப்பட்டவை.

ஆ) சித்ரவதைகளால் ஏற்படும் விளைவுகள் இருபாலாருக்கும் ஒரே மாதிரியானவை.

இ) பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் நேரடியாக அரசால் செய்யப்படா விட்டாலும், அரசு இதற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுவது/ உதாசீனப்படுத்துவதால் பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளும் சித்ரவதையே என்று விரிவுபடுத்தப்பட்ட சித்ரவதையின் விளக்கத்தின் கீழ் வரும்.

**பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளின் வடிவங்கள்**

- குடும்ப வன்முறை
- பாலியல் வன்புணர்ச்சி
- குற்றச் செயல்கள் மூலமாக, வார்த்தைகளால் மற்றும் செய்கைகளால் மற்றும் வன்புணர்ச்சிக்கு முயற்சி செய்வதன் மூலமாக மானபங்கப்படுத்துதல்
- பணியிடங்களில் பாலியல் பலாத்காரம்
- வரதட்சணைக் கொடுமைகள்
- விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்
- பெண் சிசுக்கொலை/ கருச்சிதைவு
- திருமணம் சம்பந்தமான குற்றங்கள்
- ஒழுக்கக் கேடான வார்த்தைகள், உடன்கட்டை ஏற்றல், நாணத்தைக் குலைத்தல்.

**குடும்ப வன்முறை**

குடும்ப வன்முறை என்பது பாலியல் ரீதியான தாக்குதல் மற்றும் தூண்டுதல் உள்ளடக்கியதாகும். இது

அ) உடல் ரீதியான கொச்சைப்படுத்துதல்

ஆ) மனநிலை, உணர்வுகளைக் கொச்சைப்படுத்துதல்

இ) வார்த்தை, சமூக அந்தஸ்தை கொச்சைப்படுத்துதல்

ஈ) பாலியல் ரீதியான கொச்சைப்படுத்துதல்

உ) பொருளாதார ரீதியான கொச்சைப்படுத்துதல் ஆகியவைகள் குடும்பங்களில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படுகிறது.

**உதாரணங்கள்:**

- இடித்தல், அறைதல், மிதித்தல், தள்ளுதல்
- கொச்சைப்படுத்துதல், புனைப்பெயர் வைத்து அழைத்தல், கேவலப்படுத்துதல்.
- கட்டாய உடலுறவு, பாலியல் ரீதியான உடற்பாகங்களைத் தாக்குதல்.
- ஒழுக்கத்தை சீர்குலைத்தல், கொச்சையான வார்த்தைகளால் மிரட்டுதல்.
- சூடு வைத்தல், வெட்டுதல், ஆயுதங்களைப் பயன்படுத்துதல்.
- உணவு, கொடுக்க மறுத்தல், தூங்கவிடாமை, மருத்துவ கவனிப்பு மறுத்தல்.
- பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்துதல்.

**குடும்ப வன்முறைக்கான காரணிகள்**

- ஆண் வழிச்சமூக அதிகார வர்க்கம்
- கல்வியறிவின்மை, சார்பு நிலைப் பொருளாதாரம், தாழ்த்தப்பட்ட பெண் கலாச்சாரம்.
- வரதட்சணை முறைகள்
- அற்பமான விஷயங்களைப் பெரிதுபடுத்துதல்
- செயற்கையான பாலியல் தேவைகள், விபச்சாரம்.
- சாராயம் மற்றும் சூதாட்டம்
- ஆண்குழந்தை இல்லாமை மற்றும் விதவை

முக்கியமாக குடும்ப வன்முறை என்பது சாதி, மத பிரிவு மற்றும் சமூக, பொருளாதார கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு செய்யப்படுகிறது.

**உடல்ரீதியான வன்முறை**

- தலைமுடியைப் பிடித்திழுத்தல், உடற்பாகங்களைக் திருகுதல், இடித்தல், வெட்டுதல், குத்துல், எலும்பை உடைத்தல், சூடுபோடுதல்.
- ஆயுதங்கள் மற்றும் தீக்கருவிகளைப் பயன்படுத்துதல்.
- வன்முறையின் மூலாக மாறி, மாறி கட்டாய கருச்சிதைவு மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே கரு வெளியேறுதல்.

**மனநிலை, உணர்வு மீதான வன்முறை**

- அச்சுறுத்தல்
- ஒழுக்கக்கேடான வகையில் பெண்களை குற்றம் சுமத்துதல்.
- பொது மற்றும் தனிநபர்கள் முன்னிலையில் கேவலப்படுத்துதல்.
- வீட்டுச் சாமான்களை உடைத்தல், வளர்ப்புப் பிராணிகளைக் கொல்லுதல்.

- குழந்தைகள் மற்றும் உறவினர்களுக்கு தீங்கு மற்றும் அடிப்பதாக மிரட்டுதல்.

**பாலியல் ரீதியான வன்முறை**

- கட்டாய உடலுறவு அல்லது சம்மதமில்லாத பாலியல் நடவடிக்கைகள்
- பாலியல் பாகங்களைத் தாக்குதல்.
- இச்சைப் பொருளாகப் பாவித்தல்.
- இயற்கைக்கு மாறான பாலியல் நடவடிக்கைகளுக்கு கட்டாயப்படுத்துதல்.
- பாலியல் தேவைகளுக்கு ஆட்படாத போது வன்முறை மூலமாக பயமுறுத்தி பணிய வைத்தல்.

**வார்த்தைகள் மற்றும் சமூக வன்முறை**

- கொச்சைப்படுத்துதல், புனை பெயர் வைத்து அழைத்தல்
- பெண் வீட்டு பெற்றோரை, நண்பர்களை மற்றும் குடும்ப உறவுகளைக் கொச்சைப்படுத்துதல்.
- உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் கேவலப்படுத்துதல்.
- தனிமைப்படுத்துதல், குடும்ப உறவுகளைத் துன்புறுத்தல், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், பொதுவாக அநாகரீகமாக நடத்துதல்.

**பொருளாதார வன்முறை**

- குடும்ப வருமானத்தைக் கட்டுப்படுத்துதல், பொருளாதார நிறைவை அடைவதற்கான வழியைத் தடுத்தல்.
- பொருளாதார சார்புக்கு கட்டாயப்படுத்துதல்.
- வீட்டுச் செலவுகளுக்கு குறைவான பணம் கொடுத்தல்.
- பணத்தை தவறாகப் பயன்படுத்துவதாக அல்லது சுயநலத்திற்கு செலவிடுவதாக குறை கூறுதல்.

**வன்முறையைத் தடுப்பதற்கான நடைமுறை மற்றும் சட்ட இடர்பாடுகள்**

- குடும்ப வன்முறையை சமூக / சட்டப் பிரச்சினையாக ஏற்றுக் கொள்ள மறுத்தல்.
- சமூகக் களங்கம் ஏற்படும் காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பேசாதிருத்தல்
- விழிப்புணர்வு மற்றும் தகவலின்மை

- ❖ நீண்ட சட்டமுறை மற்றும் தெளிவற்ற நடவடிக்கை, இத்தகைய பிரச்சினையைக் கூறுவதற்கு போதிய சட்டமின்மை

**இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தீர்வுகள்**

- ❖ கொடுமை – பிரிவு 498 **(ய)**
- ❖ கொலை – பிரிவு 299 ꟷ 300
- ❖ வரதட்சணைச் சாவு – பிரிவு 304 **(ஞ)**
- ❖ தற்கொலைக்குத் தூண்டுதல் – பிரிவு 305 – 306
- ❖ சிசுக்கொலை மற்றும் கருச்சிதைவு – பிரிவு 312– 318
- ❖ காயம் மற்றும் கொடுங்காயம் – பிரிவு 319 – 324
- ❖ வன்புணர்ச்சி மற்றும் பாலியல் குற்றங்கள் – பிரிவு 375 – 377
- ❖ நம்பிக்கை மோசடி – பிரிவு 493 – 498
- ❖ மானபங்கப்படுத்துதல் – பிரிவு 354 – 509

**உரிமையியல் சட்டத்தில் தீர்வு**

- ❖ திருமணம் சம்பந்தமாக – சட்டப்பூர்வமாக பிரிந்து கொள்ளல், உடன் வாழ அழைத்தல், திருமண முறிவு
- ❖ ஜீவனாம்சம்
- ❖ சாதாரண உரிமையியல்/ தீங்கியல் சட்டத்தில் உறுத்துக்கட்டளை மற்றும் நஷ்ட ஈடு கேட்டல்.

**யாரை அணுகுவது**

- ❖ நீதித்துறை – சட்ட உதவி மையம், மகளிர் நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம்
- ❖ காவல்துறை – மகளிர் காவல் நிலையம், வரதட்சணை சிறப்புப் பிரிவு
- ❖ அரசு நிறுவனம் – சமூக நல வாரியத்தின் ஆதரவால் செயல்படும் ஆலோசனை மையம், அரசு தங்கும் விடுதிகள்
- ❖ தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவிக்கரங்கள், சட்ட ஆலோசனை மையம், சமூக மன ஆலோசனை மையம், பாதுகாப்பு உறைவிடங்கள்.

**இந்தியாவில் குடும்ப வன்முறைக்கெதிரான சட்டங்களின் எதிர்காலம்**

புகுந்த வீட்டிலேயே அடைக்கலம், ஜீவனாம்சம் பாதுகாப்பு உடனடியாகக் கிடைக்குமாறு உத்திரவிடக்கூடிய பெண்பாலியல் வன்முறைக்கெதிரான உரிமையியல் சட்டங்களைக் கொண்டு வருவதற்கான தேசிய பிரச்சாரம்.

**பெண்களுக்கெதிரான வன்முறை**

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பெண்களுக்கு உடல், உளவியல் மற்றும் பாலியல் ரீதியாகத் தீங்கிழைக்கும், துயரை அளிக்கும் பாலியல் ரீதியான வன்முறை நடவடிக்கையாகும். இதில்

அந்நடவடிக்கைக்கான மிரட்டல்கள், நிர்ப்பந்தங்கள், ஏதேச்சதிகாரமாக அவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பது போன்றவை அடங்கும். ஆவை அவர்களின் பொது வாழ்க்கையில் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் நடப்பதாக இருந்தாலும் வன்முறையே.

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும். ஆனால், இவை கீழ்க்கண்டவற்றோடு மட்டும் நின்று விடுவதில்லை. ஆவை "குடும்ப்தில் நிகழும் பெண்களை அடிப்பது, பெண் குழந்தைகளை பாலியல் ரீதியாக, முறைகேடாகப் பயன்படுத்துவது, வரதட்சணை வன்முறை, மனைவியையே பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துவது, பெண்ணுறுப்பைச் சிதைப்பது, பெண்களுக்குத் தீங்கு விளைவிக்கும் மற்ற பாரம்பரிய நடைமுறைகள், சுரண்டல் வன்முறை உள்ளிட்ட உடல், பாலியல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைகளும் சமூகத்தில் பெண்களுக்கெதிராக நடைபெறும் பாலியல் பலாத்காரம், பாலியல் ரீதியாக முறைகேடாக நடத்துதல், பாலியல் ரீதியாக தீங்கிழைத்தல், பணி செய்யும் இடத்திலும், கல்வி உள்ளிட்ட இதர நிறுவனங்களிலும் மிரட்டல்கள் விடுப்பது மற்றும் பெண்களை விற்பது, நிர்பந்தப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது போன்றவையும், பெண்களின் உடல், பாலியல் மற்றும் உளவியல் ரீதியாக வன்முறையை அரசே இழைப்பது அல்லது ஆதரிப்பது போன்றவையும் வன்முறையாகும்.

**– பெண்க஌க்கெதிரான வன்முறை ஒழிப்புக்கான ஐ.நா.வின் பிரகடனம் 1990**

# தேசிய குழந்தைகள் உரிமைக்கான பாதுகாப்பு ஆணையம்

## ஆணையத்தின் பணிகளாக கீழ்க்கண்டவை சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. எந்த சட்டத்தின் கீழும் அல்லது சட்டத்தின்படியும் குழந்தைப் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்தல் மற்றும் பரிசீலித்தல்அவற்றைத் திறம்பட . நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்: பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் தொடர்பான அறிக்கைகளை மத்திய அரசுக்கு அளித்தல்.

2. குழந்தைகள், பயங்கரவாதம், வகுப்புக் கலவரம், வன்முறைகள், இயற்கை சீற்றம், வீடுகளில் வன்முறைக்கு ஆளாக்கப்படுதல், எச்.ஐ.விஎய்ட்ஸ்/., சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுதல், துன்புறுத்தப்படுதல், சித்ரவதை மற்றும் சுரண்டல், பாலுணர்வைத் தூண்டும் நடவடிக்கைகள் மற்றும் விபச்சாரம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுத் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ள அனைத்து அம்சங்களையும் ஆய்வு செய்து, உரிய நிவாரண நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.

3. துயரத்தில் வாழும் குழந்தைகள், அவமானப்படுத்தப்பட்ட குழந்தைகள், குடும்ப ஆதரவு இல்லாமல் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் சிறைக் கைதிகளின் குழந்தைகள் தொடர்பான விஷயங்களை ஆய்வு செய்து உரிய நிவாரண நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

4. சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடையே குழந்தை உரிமைகள் குறித்த விழிப்புணர்வு குறித்த விஷய ஞானத்தைப் பரப்புதல் மற்றும் இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தற்போது நடைமுறையிலுள்ள வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல்.

5. சிறுவர் சீர்திருத்த இல்லங்கள் அல்லது மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் அல்லது வேறு எந்த அரசு அமைப்புகளாலும் நடத்தப்படும் சிறுவர் சீர்திருத்த இல்லங்கள் அல்லது குழந்தைகளுக்கான பராமரிப்பு, பாதுகாப்பு இல்லங்களை ஆய்வு செய்தல் அல்லது அதற்கான காரணங்களை ஆய்வு செய்தல் மற்றும் சீர்திருத்தம் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக குழந்தைகள் காவலில் வைக்கப்பட்டுள்ள, சமூக நல அமைப்புகளால் நடத்தப்படும் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றையும் ஆய்வு செய்தல்.

6. குழந்தை உரிமை மீறல் குறித்து விசாரணை நடத்தி, அவற்றைத் தடுப்பதற்கான சட்டப்படியான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் மற்றும் கீழ்க்கண்ட விவகாரங்கள் தொடர்பாக தாமாகவே முன்வந்து நடவடிக்கை எடுத்தல்:

- குழந்தை உரிமைகளை மறுத்தல் மற்றும் மீறல்.
- குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் இருத்தல்.
- குழந்தைகளின் இன்னல்களைத் தடுப்பதற்கான மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான அரசின் கொள்கை முடிவுகள், வழிகாட்டி நெறிகள் அல்லது ஆணைகளைச் செயல்படுத்தாத நிலை.
- அல்லது இப்படிப்பட்ட விஷயங்கள் தொடர்பான பிரச்சினைகளை உரிய அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.
- உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச அளவிலான மற்ற நடைமுறைகளை செய்தல்; குழந்தை உரிமைகள் தொடர்பான தற்போதைய கொள்கைகள், நிகழ்ச்சிகள், மற்றும் பிற செயல்திட்டங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்தல் மற்றும் குழந்தைகள்

சிறந்த பலன் அடைவதற்காக அந்தத் திட்டங்களையும் கொள்கைகளையும் திறம்பட நடைமுறைப்படுத்துதல்.

- தற்போதைய சட்டம், கொள்கையை ஆய்வு செய்தல்குழந்தை உரிமைகள் மாநாட்டு . பிரகடனத்திற்கு இணங்க அவை நடைமுறைப் படுத்தப்படுவது குறித்து மதிப்பீடு செய்தல் . கொள்கையோ அல்லது நடைமுறையோ எந்தவிதத்திலாவது குழந்தைகளை பாதிக்கும் நிலையில் அதுகுறித்து விசாரணை நடத்தி, அறிக்கை தாக்கல் செய்தல் . உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்டம் குறித்து, ஒரு குழந்தையின் உரிமைகள் தொடர்பான கண்ணோட்டத்தின் அடிப்படையில் கருத்து தெரிவித்தல்.

7. குழந்தைகள் தொடர்பான திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளின் செயல்பாட்டில் குழந்தைகளின் கருத்துகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, மதிப்பளித்தல்.

8. குழந்தைகள் உரிமைகள் குறித்தத் தகவல்களைத் திரட்டிப் பரப்புதல்.

9. குழந்தைகள் தொடர்பான புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

10. குழந்தை உரிமைகள் தொடர்பானவற்றை பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கு முனைப்புடன் செயல்படுதல்ஆசிரியர்கள ுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் குழந்தைகளைக் கையாள்வதில் பயிற்சியளித்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துதல்.

## ஆணையத்தின் அமைப்பு முறை

மத்திய அரசால் நியமிககப்படும் பின்வருவோர் ஆணையத்தின் உறுப்பினர்களாக இடம் பெற்றிருப்பார்கள் இந்த உறுப்பினர்கள் மூன்றாண்டு .காலத்திற்குப் பதவி வகிப்பர்.

1. ஒரு தலைவர் குழந்தைகள் நலன் மேம்பாட்டில் தலைசிறந்த சேவையாற்றி வரும் புகழ் - .வாய்ந்த ஒருவர்
2. ஆறு உறுப்பினர்கள் கல்வி -, குழந்தை உடல் நலன், பராமரிப்பு, மேம்பாடு, சீர்திருத்தப் பள்ளி சிறுவர்களுக்கு நீதி வழங்குதல், புறக்கணிக்கப்பட்ட அல்லது வஞ்சிக்கப்பட்ட குழந்தைகள் அல்லது உடல் குறைபாடு கொண்ட குழந்தைகளின் நலன் காத்தல், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, குழந்தை உளவியல் மற்றும் குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் ஆகிய துறைகளில் அனுபவமும் திறனும் வாய்ந்த புகழ்பெற்றுள்ள நேர்மையானவர்களாக இவர்கள் இருக்க வேண்டும்.
3. உறுப்பினர் செயலாளர் இணைச்செயலாளர் அந்தஸ்துக்கு குறையாதவராக இருக்க - .வேண்டும்

## அதிகாரங்கள்

ஒரு வழக்கை விசாரிக்கும் சிவில் நீதி மன்றத்திற்கு உரிய அனைத்து அதிகாரங்களையும் இந்த ஆணையம் பெற்றுள்ளதுகுறிப்பாக ., பின்வரும் விவகாரங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் அதிகாரம் கொண்டுள்ளது

1. இந்தியாவில் எந்தப் பகுதியிலுள்ள யாரை வேண்டுமானாலும் ஆணையத்தின் முன் ஆஜர்ப்படுத்த உத்தரவிட்டு, அந்த நபர்களிடம் பிரமாணத்தின் அடிப்படையில் விசாரணை நடத்தும் அதிகாரம்.

2. எந்த ஆவணத்தையும் கண்டுபிடிக்க, தாக்கல் செய்ய உத்தரவிடும் அதிகாரம்.

3. தாக்கல் செய்யப்படும் மனுக்களின் அடிப்படையில் சாட்சியங்களைக் கோருதல்.

4. எந்த ஒரு நீதிமன்றத்திலிருந்தும் அரசின் எந்த ஆவணங்களையும் அல்லது அவற்றின் நகல்களையும் கோருதல்.

5. சாட்சியங்களை விசாரணை நடத்த உத்தரவிடுதல்.

## புகார்ப் பதிவு

குழந்தைகள் உரிமை பறிக்கப்படுதல் தொடர்பான புகார்களை விசாரிக்கும் அதிகாரம் ஆணையத்தின் முக்கியமான ஓர் அதிகாரமாகும்குழந்தை உரிமை மீறல்கள் குறித்த . முக்கியமான விவகாரங்கள் தொடர்பாக யாரிடமிருந்தும் எந்தப் புகார்களும் பெறப்படாத நிலையில் தாமாகவே முன்வந்து ஒரு வழக்காக ஏற்றுக்கொண்டு ஆணையம் விசாரணை நடத்தும்மேலும் ., தங்கள் உரிமைகளை குழந்தைகள் அனுபவிக்கத் தடையாக இருக்கும் விஷயங்கள் குறித்தும் ஆய்வு செய்யும் அதிகாரத்தை ஆணையம் கொண்டுள்ளது.

1. அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள எந்த மொழியில் வேண்டுமானாலும் ஆணையத்திற்குப் புகார் அனுப்பலாம்.
2. இப்படிப்பட்டப் புகார்களை அளிக்க எந்தக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது.
3. தேவைப்படுவதாகக் கருதப்படும் தருணங்களில் ஆணையம் மேலும் கூடுதல் தகவலையோ .வாக்குமூலத்தையோ கோரக்கூடும் /
4. புகார் தெரிவிக்கும்போது பின்வரும் விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்:
5. புகார்கள் தெளிவாகவும் புரியும்படியாகவும் எழுதப்பட்டிருக்க வேண்டும் . மேம்போக்காகவோ பெயர் குறிப்பிடப்படாமலோ அல்லது கற்பனையான ஒரு பெயரிலோ .புகார்களை அளிக்கக் கூடாது
6. இப்படிப்பட்ட புகார்களுக்கு எந்தக் கட்டணமும் விதிக்கப்பட மாட்டாது.
7. ஒப்பந்தம் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட விவகாரங்கள், சொத்துரிமைச் சிக்கல்கள், போன்ற சிவில் தகராறு தொடர்பான புகார்களாக இருக்கக் கூடாது.
8. பணி விவகாரங்கள் தொடர்பான புகார்களாக இருக்கக் கூடாது.
9. சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள எந்த ஒரு ஆணையம், நீதிமன்றம் முன்பு நடுவர் மன்றம் / .நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான புகார்களாக இருக்கக் கூடாது
10. ஆணையத்தால், ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்ட விஷயங்கள் தொடர்பான புகார்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
11. வேறு எந்த விதத்திலும் ஆணையத்தின் அதிகார வரம்புக்கு உட்படாத விஷயங்கள் தொடர்பான புகார்களாக இருக்கக் கூடாது.

## தேசிய குழந்தைகள் உரிமைக்கான பாதுகாப்பு ஆணையம்

5 - வது மாடி, சந்திரலோக் பில்டிங்,

36, ஜன்பத்; புதுதில்லி-110 001. இந்தியா.

# மகளிர் ஆணையங்கள்

## 1. தேசிய மகளிர் ஆணையம்

தேசிய மகளிர் ஆணையம் 1992-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் தேதி அமைக்கப்பட்டது . தியாவிலுள்ளஇந் பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக 1990-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வ அமைப்பாக இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

தேசிய மகளிர் ஆணையத்தின் பணி மிகவும் விரிவானதுபெண்களின் நலன் மற்றும .ம் மேம்பாடு சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களிலும் இந்த ஆணையம் முக்கியப் பங்காற்றுகிறது . அரசியல் சாசனப் படியும், சட்டப்படியும் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்கள் குறித்து ஆய்வு செய்தல், கண்காணித்தல் போன்வற்றில் தேசிய மகளிர் ஆணையம் முக்கியப் பங்காற்றுகிறதுபெண்களின் நலன் . தொடர்பாக தற்போதுள்ள சட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்யும் இந்த ஆணையம், அந்தச் சட்டங்களில் எங்கெல்லாம் குறைகளும், பலவீனங்களும் இருக்கின்றனவோ அவற்றை ஆய்வுசெய்து தேவையான திருத்தங்களைச் செய்ய பரிந்துரைக்கிறது .இவை தவிர எத்தகைய புதியச் சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது குறித்த பரிந்துரைகளையும் தேசிய மகளிர் ஆணையம் வழங்குகிறது .

பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவது சம்பந்தப்பட்ட புகார்களைப் பெற்று அவற்றின் அடிப்படையிலும், குற்றச் செயல்களை அறிந்து தாமாகவும் நோட்டீஸ் அனுப்பி இந்த ஆணையம் நடவடிக்கை எடுக்கிறது .உரிமைகள் பறிக்கப்படும்போது அவர்களுக்குத் தேவையான உதவி, ஆதரவு, சட்ட கவனிப்பு ஆகியவற்றை வழங்க வேண்டும் என்பதற்காகவே தேசிய மகளிர் ஆணையம் இவ்வாறு செய்கிறதுவாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் . பெண்கள் சமத்துவம் பெறுவதற்கு வசதியாக, அவர்களின் நலனைப் பாதுகாக்க கொண்டுவரப்பட்டுள்ள சட்டங்கள் அனைத்தும் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா? என்பதையும் இந்த ஆணையம் கண்காணிக்கிறது. பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் சாசன மற்றும் சட்டப் பாதுகாப்புகளை ஆய்வு செய்வது, சட்டத் தீர்வுகளைப் பரிந்துரைப்பது, குறைகளைத் தீர்க்க உதவி செய்வது, பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து கொள்கை விசயங்களிலும் அரசுக்கு அறிவுரை வழங்குதல் ஆகியவைதான் தேசிய மகளிர் ஆணையத்தின் முதன்மைப் பணிகள் ஆகும்.

## அமைப்பும் செயல்பாடுகளும்

- ஒரு தலைவரும், ஒரு உறுப்பினர் செயலரும், 5 அலுவலர் சாராத உறுப்பினர்களும் இருப்பார்கள் .
- இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் மொத்தம் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன .
  - புகார்கள் மற்றும் விசாரணைப் பிரிவு,
  - சட்டப்பிரிவு,
  - வெளிநாடுவாழ் இந்தியர்கள் பிரிவு,
  - ஆய்வுப் பிரிவு
- புகார்கள் மற்றும் விசாரணைப் பிரிவுதான் மகளிர் ஆணையத்தின் முதன்மைப் பிரிவு ஆகும் . வாய்வழிப் புகார்கள், எழுத்து மூலமான புகார்கள், செய்தித்தாள்களில் வந்த செய்திகள் ஆகியவற்றை இந்த ஆணையம் ஆய்வும் செய்யும் .
- 1990- ஆம் ஆண்டின் தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் 10(1)(7)(94) ஆகிய பிரிவுகளின்படி பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக மகளிர் ஆணையம் தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்கும் .
- கடுமையான குற்றங்கள் என்றால் அதுபற்றி விசாரிக்க விசாரணை ஆணையத்தை மகளிர் ஆணையம் அமைக்கும். இந்த ஆணையம் குற்றம் நடந்த இடத்திற்கே சென்று விசாரணை நடத்தும்இதில் . சம்பந்தப்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தி சாட்சியங்களைச் சேகரித்து,

அவற்றின் அடிப்படையில் பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை தேசிய மகளிர் ஆணையத்திடம் விசாரணை ஆணையம் தாக்கல் செய்யும் .

- வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணமும், நீதியும் கிடைக்க இந்த விசாரணைகள் உதவும்விசாரணை ஆணையங்களின் அறிக்கையை . மாநில அரசுகள்அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று விசாரணை ஆணையத்தின் / பரிந்துரைகள் செயல் படுத்தப்படுவதை மகளிர் ஆணையம் கண்காணிக்கும்.
- இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தேசிய மகளிர் ஆணையம், தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களின் மகளிர் கல்வி மையங்கள் ஆகியவற்றின் சார்பில் நடத்தப்படும் சட்டங்கள்/கருத்தரங்குகள் / பயிலரங்குகள்பொது விசாரணைகளில் பங்கேற்பதற்காக மகளிர் / ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொள்வார்கள்.
- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து விசாரிப்பார்கள். சிறைகளில் வாடும் பெண் கைதிகள், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் ஆகியோரின் துன்பங்களை அறிவதற்காக முறையே சிறைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் செல்லும் ஆணைய அதிகாரிகள், பெண்களின் குறைகளைக் களையும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பரிந்துரைப்பார்கள் .
- பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை முதல் நோக்கில் அறிந்துகொள்வதற்காகவும், அதற்கான தீர்வுகளைத் தெரிவிப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரச்சினைகளைக் கொண்டு சென்று தீர்ப்பதற்காகவும், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் மகளிர் கல்வி மையங்களின் சார்பில் ஏற்பாடு செய்யப்படும்பெண்களின் சட்ட உரிமைகள் . தொடர்பான விழிப்புணர்வு முகாம்களில் இவர்கள் கலந்துகொள்கின்றனர்.

## புகார்கள் மீது நடவடிக்கை எடுத்தல்

- தேசிய மகளிர் ஆணையத்திற்கு ஏராளமான புகார்கள் வருகின்றனவிசாரணைக்குக் . குழுக்களை அமைத்து விரைவான நீதி வழங்குவதற்காக பல வழக்குகளை ஆணையம் தாமாகவே முன்வந்து எடுத்துக்கொள்கிறது. சட்ட விழிப்புணர்வு திட்டங்கள், மகளிர் மக்கள் நீதிமன்றங்கள் போன்றவற்றை நடத்த இந்த ஆணையம் உதவிசெய்கிறது.
- பணியிடங்களில் பெண்களுக்குப் பாலியல் தொல்லைகள் அளிக்கப்படுவது தொடர்பான புகார்கள் வந்தால், அதுபற்றி விசாரிப்பதற் காக, விஷகாய ராஜஸ்தான் அரசு ஆஒத)1997 உச்சநீதிமன்றம் 3011) வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, விசாரணைக் குழு ஒன்றை அமைக்கும்படி சம்பந்தப்பட்ட நிறுவனத்தைத் தேசிய மகளிர் ஆணையம் கேட்டுக்கொள்ளும் .
- குடும்ப வன்முறை, வரதட்சணைக் கேட்டல், வரதட்சணைக் கொடுமை, கொலை, சித்ரவதை செய்தல், கடத்தல், வெளிநாடுவாழ் இந்தியர்கள்/ வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணம் தொடர்பான மோசடிகள், பெண்களை கைவிட்டுவிட்டுக் கணவர்கள் ஓடுதல், முதன் மனைவி இருக்கும்போதே இரண்டாவது மணம் செய்தல், பாலியல் வன்முறைகள், காவல்துறை அலட்சியம், தொல்லை தருதல், கணவனால் கொடுமைக்குள்ளாக்கப் படுதல், பெண்களின் உரிமைகளைப் பறித்தல், பாலின பாகுபாடு பாலினத் தொல்லை உள்ளிட்டவை தொடர்பான புகார்கள் தேசிய மகளிர் ஆணையத்தால் பெறப்படுகின்றன.

## திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்

தேசிய மகளிர் ஆணையத்தால் பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள், மாநாடுகள் ஆலோசனைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில், குழந்தைப்பேறுக்கு வாய்ப்பில்லாத பெண்களுக்காக கருவை சுமக்க கருப்பையை வாடகைக் விடுதல் மற்றும் குழந்தைப் பெறு தொழில்நுட்பங்கள், ஊடகங்களில் பெண்களை அநாகரீகமாக பிரதிநிதித்துவபடுத்தல், பாலியல் வன்புணர்ச்சிக்கு இலக்கான பெண்களுக்கு இழப்பீடு அளித்தல், தொழிற்சாலைகளில் இரவு நேரங்களில் பெண்கள் வேலைசெய்தல், திருமணம் சம்பந்தப்பட்ட சட்டங்கள், பெண்களைச் சூனியக்காரிகள் என முத்திரை குத்தி கொடுமைப்படுத்துதல், பெண் களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள், பெண்களுக்கு அதிகாரமளித்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை ஆய்வுசெய்வதை தடைசெய்யும் சட்டம்,

பாலியல் தொல்லைகளுக்கு எதிராக பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, பெண்கள் பரிமாற்றம், இந்தியாவில் மனிதக் கடத்துதலை தடுத்தல் மற்றும் ஒடுக்குதல், முடிவெடுக்கும் நடைமுறை தொடர்பான அரசியலில் பெண்களின் பங்கேற்பு ஆகிய தலைப்புகள் அடங்கும்.

குடும்ப வன்முறை, கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை சோதனை மூலம் கண்டறிதல், குறைந்துவரும் பாலின விகிதம், தாய்மார்களுக்கான சுகாதார சேவைகள், வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் ஆயுதப் போராட்டங்களால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், பெண்களின் உரிமைகள், முஸ்லீம் பெண்கள், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளில் பெண்ணின் பங்கு, குழந்தை திருமணம் போன்றவை குறித்து பொது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 2. தமிழ் நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரித்து வருகிறதுஇவ்வாணையத்தில் மாநில மகளிர் . ஆணையத் தலைவி மற்றும்9 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் .

## ஆணையத்தின் குறிக்கோள்கள்

1. மகளிரின் நலனை உறுதி செய்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.
2. பாலினப்பாகுபாடு குறித்த விவகாரங்களை கவனித்தல்.
3. பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக ஆணையத்தின் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தல்.

## மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள் பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விபரங்களை கவனித்தல்.
2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முறையாக செயல்படுத்தப்படாத போது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்
3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் தேவையான நீதியைப் பெறுவதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ளஅரசுக்கு பரிந்துரை செய்தல்.
4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் . பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் கண்டுள்ளவாறு பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படாத நிலையிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அணுகலாம்.

## வெளியில் தங்கி பணிபுரியும் மற்றும் படிக்கும் மகளிரின் பாதுகாப்பிற்கான தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்

பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக, விடுதியில் தங்கியுள்ள மாணவிகள், பெண் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பராமரிப்பு, பாதுகாப்புக்காக, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழாமல் இருப்பதிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதிலும், தமிழக காவல் துறை கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகிறது.

### பொது விதிமுறைகள்

பொதுவாக, வீட்டை விட்டு வெளியே தங்கும் பெண் குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் பெண்கள், சிறார் இல்லங்கள், மாணவியர் விடுதிகள், பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஆகியவற்றில் தங்குகின்றனர்மேற்கண்ட அமைப்புகள் பொதுவாக அரசு மற்றும் அரசு சாரா . நிறுவனங்கள், அறக்கட்டளைகள், சங்கங்கள், மதம் சார்ந்த நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள், நிறுவனங்கள் தொழிற்சாலைகள் / தனியார் மற்றும் தனி நபர் ஆகியோரால் நடத்தப்பட்டு வருகின்றனபெண் குழந்தைகள் ., வளர் இளம் பெண்கள் மற்றும் பெண்கள் விடுதிஇல்லங்களை நடத்தும் நிறுவனங்கள் கீ/ழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உடனடியாக உட்படுத்தப்படும்.

1. கட்டடங்களுக்கான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து உரிய அதிகாரியால் ஒப்பளிக்கப்பட்ட கட்டடங்களில் மட்டுமே விடுதி அமைவிடம் அமைக்கப்பட / காப்பகம் / .வேண்டும் அவ்வாறு அமைக்கப்படும் விடுதி /காப்பகம் அமைவிடம் போதிய பாதுகாப்பு / மற்றும் உரிய தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடியதாக இருக்க வேண்டும்.
2. ஆண் பெண் குழந்தைகள் மற்றும் / பெண்கள் தங்கும் அமைவிடமாக இருப்பின் மாணவர்களுக்கு என தனியாகவும் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு என தனியாகவும் கட்டடங்கள் அமையப் பெற வேண்டும்.
3. ஆண்பெண் குழந்தைகள் தங்கும் / அமைவிடமாக இருப்பின் மாணவர்களுக்கு என தனியாகவும் பெண் குழந்தைகளுக்கு என தனியாகவும் கட்டடங்கள் அமையப் பெற வேண்டும் . தவிர்க்க முடியாத காரணங்களினால் மாணவர் மற்றும் மாணவியர் ஒரே கட்டடத்தில் தங்க நேரிடின், தனித்தனியான அறைகளில் தங்க வைக்கப்படவேண்டும்.
4. வளர் இளம் பெண்கள் மற்றும் பெண்களுக்கான விடுதி அமைவிடங்களில் / காப்பகம் / / விடுதிக் காப்பாளர் பொறுப்பாளர்களாக பெண்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்.
5. 50 குழந்தைகளுக்கு ஒரு விடுதிக் காப்பாளர் இருக்க வேண்டும்.
6. விடுதிகளில் தங்கும் நபர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி தேவைக்கேற்ப 24 மணி நேரமும் பணியில் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
7. ஒன்றுக்கு மேற்பட்ட வாயில்கள் இருந்தால் அனைத்து வாயில்களிலும் பாதுகாப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.
8. 50க்கு மேற்பட்டோர் இருக்கும் இல்லங்களில் சிசிடிவி தங்குமிடங்களின் வாயில்களில் / கேமரா, டிவிஆர் பொருத்தப்படவேண்டும்.
9. விடுதிக் காப்பாளர் பாதுகாவலர் /, முன் அனுமதி பெறாமலோ மாற்று ஏற்பாடு செய்யாமலோ பணிக்கு வராமல் இருக்கக் கூடாதுஇவர்கள் பணிக்கு வராத நேரத்தில் உரிய பொறுப்பு .ள்ள ஆட்களை நியமிப்பதை சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்விடுதி . காப்பாளர் அல்லது துணை விடுதி காப்பாளர் எந்த ஒரு நேரத்திலும் விடுதியில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
10. மேற்கண்ட அமைவிடங்களில் உள்ள பாதுகாவலர்கள் அவசர காரணமேதுமின்றி குழந்தைகள், வளர் இளம் பெண்கள், பெண்கள் தங்கியுள்ள விடுதி கட்டடங்களுக்குள் அனுமதிக்கப்படக்

கூடாதுநுழைவாயிலின் . அருகே அமைந்துள்ள அவர்களுக்கென அமைக்கப்பட்ட அறைகளில் மட்டுமே இருக்க வேண்டும்.

11. அமைவிடங்கள் நான்குபுற சுற்றுச் சுவர்களுக்குட்பட்டு இருக்க வேண்டும் மேலும் உள்ளே . மற்றும் வெளியே செல்லும் வாயில்களில் தாழ்ப்பாளுடன் கூடிய கதவுகள் அமைக்கப்பட வேண்டும்.
12. விடுதியில் தங்கியிருப்பவர்கள், அவர்கள் விடுதியை விட்டு வெளியில் செல்லும் நேரம், விடுதிக்கு திரும்பும் நேரம் ஆகியவற்றை தினசரி வருகைப் பதிவேட்டில் விடுதி காப்பாளர் பதிவு செய்ய வேண்டும்ங்கச்மேலும் விடுதியில் தங்கியிருப்பவர்கள் அவர்கள் தூ . செல்வதற்கு முன்பு கணக்கெடுக்கப்பட வேண்டும்.
13. தங்கியிருப்பவர்களைச் சந்திக்க பார்வையாளர்களாக அவர்களுடைய பெற்றோர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பாளர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.
14. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வரவேற்பறையில் மட்டுமே பார்வையாளர்களை பாதுகாப்பாளர்களின் கண்காணிப்பில் அனுமதிக்க வேண்டும்.
15. வெளி நபர்கள் கட்டடத்தினுள் நுழைவது முற்றிலுமாக தடை செய்யப்பட வேண்டும்.
16. இளம் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களை காண வரும் பார்வையாளர்களின் சந்திப்பு கண்டிப்பாக விடுதிக் காப்பாளர் கண்காணிப்பிற்குட்பட்டு நடைபெற வேண்டும்.
17. சிறு வயதுடைய ஆண் மற்றும் பெண் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோரை விடுமுறை நாட்களில் வீட்டிற்கு அனுப்பும் போது, அவர்களுடைய பெற்றோர் / பாதுகாப்பாளரிடம் அந்த விடுதி காப்பாளர் ஒப்படைக்க வேண்டும்எந்த ஒரு நேரத்திலும் . தனியாகவோ வெளியாட்களுடனோ அனுப்பக் கூடாது.
18. விடுதிக் காப்பாளர் பாதுகாவலர் பார்வையாளர்களை விடுதிக்குள் நுழைய அனுமதிக்கக் / .கூடாது
19. பார்வையாளர் புத்தகம் விடுதிக் காப்பாளரால் பராமரிக்கப்பட வேண்டும்.
20. பார்வையாளர் புத்தகத்தில் பெயர், முகவரி, உறவு முறை மற்றும் சந்திப்பிற்கான நோக்கம் ஆகியவை பதிவு செய்யப்பட்டு பார்வையாளரால் கையொப்பம் இடப்பட வேண்டும்அங்கு . பணிபுரியும் பணியாளர் ஒருவரால் மேலொப்பம் இடப்படவேண்டும்.
21. விடுதிக் காப்பாளர் மற்றும் பாதுகாவலர் ஆகியோருக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.
22. பெற்றோர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பாளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பபட வேண்டும்.
23. விடுதிக் காப்பாளர் மற்றும் பாதுகாவலர்களது தொலைபேசி எண் மற்றும் முகவரி ஆகியவை காப்பகத்தின் முன்வாயிலில் எளிதில் காணக் கூடிய வகையில் பார்வையில் வைக்கப்பட வேண்டும்.

## விடுதிக் காப்பாளர் மற்றும் பாதுகாவலர் காப்பாளர் நியமனங்களுக்கான நெறிமுறைகள்

1. விடுதிக் காப்பாளர் மற்றும் பாதுகாவலர்களாக முன்னாள் குற்றவாளிகள் மற்றும் சந்தேகத்திற்கிடமானவர்கள் நியமிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு, நியமிக்கப்பட உள்ளவர்களின் முந்தைய நன்னடத்தை பற்றிய சான்றிதழ்களை உள்ளூர் காவல் துறையிடமிருந்து பெற்று, முழுமையான பரிசீலனைக்குப் பின்னரே அவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.
2. தொற்று நோய் உள்ளவர்கள் நியமிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டு, நியமிக்கப்பட உள்ளவர்களின் மருத்துவ ஆவணங்கள் உள்ளூர் அரசு மருத்துவமனையால் சான்றளிக்கப்பட வேண்டும். அவர்களின் மன நிலை மற்றும் மன உறுதியினை மதிப்பீடு செய்ய வேண்டும்.
3. அரசு அல்லாத நிறுவனங்களால் நடத்தப்படும் காப்பகங்களில் நியமிக்கப்படும் விடுதிக் காப்பாளர் மற்றும் பாதுகாவலர்களுக்கு போதுமான அளவு ஊதியம் வழங்கப்பட வேண்டும் . இவ்வாறு வழங்கப்படும் ஊதியம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
4. மாவட்ட நிர்வாகத்தினால் கண்காணிக்கப்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்
5. சிறு வயதுடைய ஆண் மற்றும் பெண் குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் மகளிர் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்து விடுதி அமைவிடங்கள் மாவட்ட / இல்லம் /

ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்வதை உறுதி செய்திட மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

6. பதிவு செய்யப்பட்ட விடுதிகள் / இல்லங்கள் குறித்த பட்டியல் முறையான அமைவிடங்கள் / ஆய்வு மற்றும் கண்காணிப்பிற்காக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்காவல் துறையினரால் மேற்கொள்ளப்படும் ரோந்து பணியில் . இத்தகைய அமைப்புகளை, குறிப்பாக இரவு நேரங்களில் கண்காணிக்க மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஏற்பாடு செய்ய வேண்டும்மாதத்திற்கு ஒரு முறையேனும் . ரோந்துப் பணி பதிவேடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
7. மாவட்ட ஆட்சியர்கள் தங்களது மாதாந்திர சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டத்தில் இத்தகைய விடுதிகள் / இல்லங்கள் பு மற்றும் நலன் குறித்து ஆய்வுஅமைவிடங்களின் பாதுகாப் / மேற்கொள்ள வேண்டும்.
8. மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் வருவாய், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், தொழிலாளர் நலன், சமூக நலம், பள்ளிக் கல்வி, உயர்கல்வி மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களை உள்ளடக்கிய அனைத்து மாவட்ட நிர்வாக அமைப்புகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
9. விடுதிகள் / காப்பகங்கள் / அமைவிடங்களின் உரிமையாளர்களுக்கு பாதுகாவலர் நியமனத்தில் உதவிடும் வகையில், மாவட்டத்தில் ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஊர்க்காவல் படையினர்களது பட்டியலை காவல் துறை தயாரிக்க வேண்டும்.
10. அரசால் வகுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை மேற்கண்ட இல்லங்கள் பின்பற்றுகின்றனவா என்பதை குழந்தைகள் நலக் குழு அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.
11. விடுதிகள் / இல்லங்கள் / அமைவிடங்களில் தங்கியிருப்பவர்கள் உடல் ரீதியாகவோ மற்றும் உள ரீதியாகவோ பாதிக்கப்படுவதை தடுப்பது கண்காணிப்பு அதிகாரிகளால் உறுதி செய்யப்பட வேண்டும்.
12. பாதிப்பிற்குள்ளாகக் கூடிய நிலையினை கருத்திற் கொண்டு, மாவட்ட ஆட்சியரால் இவ்வில்லங்கள் வகைப்படுத்தப்பட்டு தேவையான கண்காணிப்பு இயக்கமுறை வடிவமைக்கப்பட வேண்டும்.

## விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. இத்தகைய அமைப்புகள் மாவட்ட நிர்வாகத்திடம் உடனடியாக பதிவு செய்வதை உறுதி செய்திட உள்ளூர் ஊடகங்கள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகளின் வாயிலாக நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.
2. தற்போதுள்ள குழந்தைகள் உதவி எண் 1098-ஐ பயன்படுத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் தகுந்த விளம்பரம் செய்ய வேண்டும்.
3. பாதுகாவலர் மற்றும் விடுதிக் காப்பாளரின் தொலைபேசி எண்ணுடன் கூடிய இவ்வமைப்புகளின் பட்டியல் பொதுமக்களின் தகவலுக்காக மாவட்ட வலைதளத்தில் ஏற்றப்பட வேண்டும்இது ., தகுந்த பதிவு செய்யப்படாமல் இயங்கும் அமைப்புகள் குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிப்பதற்கு மக்களை ஊக்கப்படுத்தும்.

ஆதாரம் தமிழ்நாடு அர :சின் சமூக நலத் துறை, நன்றி-விகாஸ்பீடியா

# தேசிய மற்றும் மாநில மனித உரிமை நிறுவனங்களுக்கு புகார் அனுப்பும் முறை

**a). National Human Rights Institutions–தேசிய மனித உரிமை காப்பு நிறுவனங்கள்.**

- National Human Rights Commission–தேசிய மனித உரிமை ஆணையம்.
- National SC/ST Commission- தேசிய பட்டியலின பழங்குடியினர் ஆணையம்.
- National Women's Commission– தேசிய மகளிர் ஆணையம்
- National Commission for Minorities–தேசிய சிறுபான்மையினர் ஆணையம்.
- National Commission for Safai Karamchari - தேசிய மனித கழிவகற்றும் பணியாளர்களுக்கான ஆணையம்.

**b). To the Central / State Governments–மத்திய / மாநில அரசுகள்.**

- To the Prime Minister / Chief Minister–பிரமத மந்திரி / முதல் மந்திரி
- Ministers of the concerned departments to which the complaint pertains–சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர்.
- The Chief Secretary of the concerned State Government–சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தலைமைச் செயலாளர்.
- Secretaries of the concerned department to which the complaint pertains.–சம்பந்தப்பட்ட துறையின் செயலாளர்கள்.
- Police department officials–காவல்துறை அதிகாரிகள்.

**c). At the District level–(மாவட்டம்)**

- To the District Collector–மாவட்ட ஆட்சியர்.
- To the Commissioner of Police (in Madurai, Tiruchirapalli, Coimbatore, Tirunelveli and Chennai)–மாநகர காவல்துறை ஆணையர் (மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சென்னை)
- To the DIGs of Police–டி.ஐ.ஜி காவல்துறை
- To the Superintendent of Police–மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்.

## புகாரின் உள்ளடக்கம்.

**புகார் கொடுப்பவரின் பெயர் மற்றும் முழு முகவரி**

- பாதிக்கப்பட்டவரே புகார் கொடுக்கலாம் அல்லது பாதிக்கப்பட்டவர் சார்பாக எவரேனும் ஒருவர் அல்லது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது ஏதேனும் ஒரு அமைப்பு / சங்கம் / அரசு சாரா அமைப்பு ஆகியவற்றின் மூலம் புகார் கொடுக்கலாம்.
- மாநில அரசுக்கு புகார் கொடுக்கும் போது புகார் மனு தமிழில் இருக்க வேண்டும். மத்திய அரசுக்கும், தேசிய மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் கொடுக்கும் போது புகார் மனு ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.
- புகார் மனு அனுப்பப்படும் நபர் அல்லது துறை ஆகியவற்றின் முகவரி தெளிவாக இருக்க வேண்டும்.
- புகார் பற்றிய தலைப்பு பெரிய எழுத்துக்களில் இருக்க வேண்டும். இது புகாரைப் பெறுபவருக்கு அதைப்பற்றிய புரிதலை ஏற்படுத்தும்.
- புகாரின் முதல் பத்தியில் புகார் கொடுப்பவரைப் பற்றியும் புகார் எதற்காக கொடுக்கப்படுகிறது என்பது பற்றியும் குறிப்பிட வேண்டும்.
- நடந்த சம்பவத்தின் நேரடி சாட்சியாக அதைப்பற்றி தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- புகாரை சிறு சிறு பத்திகளாகப் பிரித்து அவைகளுக்கு தலைப்பு கொடுக்க வேண்டும். இது படிப்பவருக்கு சம்பவத்தின் தொடர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவும். முடிந்தால் வாக்கியங்களை சிறிதாக அமைக்கவும்.
- ஆவணங்கள் ஏதேனும் முக்கியமானதாகக் கருதப்பட்டால் அதைப்பற்றி புகார் மனுவில் குறிப்பிட வேண்டும்.
- நடந்த சம்பவத்தை முழுமையாகக் குறிப்பிட்ட பின், கடைசிப் பத்தியில் நடவடிக்கை எடுப்பது பற்றிய நமது வேண்டுகோளை சம்பந்தப்பட்ட அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் புகார்தாரர் எதிர்பார்க்கும் பரிகாரத்தையும் குறிப்பிட வேண்டும்.

**பரிகாரங்கள் :**

- கொடுக்கப்பட்ட புகார் மீது சரிவர நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அரசுத்துறையாக இருந்தால் சம்பந்தப்பட்ட துறை மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும்.

- பாதிக்கபபட்டவரின் உடலுக்கோ அல்லது சொத்துக்கோ சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்குரிய நிவாரணத்தை புகார் மனுவில் தெரிவிக்க வேண்டும்.
- எத்தகைய நிவாரணம் (நிலம், உணவு, இருப்பிடம், உடை, மருத்துவ உதவி போன்றவை) என்பதை குறிப்பிட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரின் சூழ்நிலைக்கேற்றவாறு நிவாரணம் கேட்பது கவனத்தில் கொள்ளப்படும்.
- பாதிக்கப்பட்டவரோ அல்லது பாதிக்கப்பட்டவர் சார்பாக உள்ளவரோ இவர்களில் யார் புகார் மனுவை அனுப்புகிறாரோ அவரே புகார் மனுவில் கையெழுத்திட வேண்டும்.
- புகார் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகலை புகாரோடு இணைத்து அனுப்ப வேண்டும்.
- புகார் மனுவை பதிவுத் தபாலில் ஒப்புகைச் சீட்டுடன் அனுப்பவேண்டும். விரைவாக அனுப்ப வேண்டும். என்றால் சம்மந்தப்பட்ட துறையினருக்கு இ–மெயில் முகவரி இருந்தால் இ–மெயில் மூலமாக அனுப்பலாம்.

**செய்யக்கூடியன / செய்யக்கூடாதன :**

- மூன்றாவது நபரின் சாட்சியத்தை அடிப்படையாக வைத்து புகார் செய்யக்கூடாது. பாதிக்கப்பட்டவரின் நேரடி சாட்சியத்தை அடிப்படையாக வைத்தே புகார் கொடுக்க வேண்டும்.
- நம்பிக்கையற்ற தகவல்களை குறிப்பிடக் கூடாது.
- புகார் மனுவில் யதார்த்தமான சரியான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும். புகார் மனு என்பது பத்திரிகைச் செய்தியல்ல. எனவே பெயருரிச் சொற்களைத் தவிர்க்க வேண்டும்.
- புகார் மனுவில் உங்களுடைய கருத்தைக் குறிப்பிடக்கூடாது.
- சட்டத்தரவுகள் கடைப்பிடிக்கப்படவில்லை எனத் தெரிய வரும் போது அதை புகார் மனுவிலேயே தெளிவாகக் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.
- புகார் கொடுப்பவரின் கையொப்பம் முழுமையான முகவரியில்லாமல் புகார் மனுவை அனுப்பக் கூடாது.
- பாதிப்பை ஏற்படுத்தியவர் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அவரைப் பற்றிய முழுமையான தகவலை இயன்ற வரை திரட்டி புகார் மனுவில் குறிப்பிடவேண்டும்.
- யூகத்தின் அடிப்படையில் எதுவும் இருக்கக் கூடாது.
- எந்த அளவிற்கு தகவல் கொடுக்க முடியுமோ அதை அப்படியே புகார் மனுவில் குறிப்பிட வேண்டும்.

# கண்களைத் தாண்டி– ஊடகக் கல்வி

**ஆரோக்கியமா? அழகா?**

நமது சமுதாயத்தில் மனித உடலின் வெளிப்புற தோற்ற அழகு குறித்த புரிதல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நம்மில் பல கேள்விகளை எழுப்புகிறது. இன்றைக்கும் நமது வீடுகளில் குழந்தை பிறந்தவுடன் கேட்கப்படும் முதன்மையான கேள்விகளில் ஒன்று குழந்தை சிவப்பா? கருப்பா? என்பதுதான். இலக்கிய நாயகிகள் முதற்கொண்டு இன்றைய திரைப்பட நாயகிகள் வரை சிவப்பு என்பது அழகின் முக்கிய குறியிடாக முன்னிருத்தப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. மணமக்கள் தேவை பக்கத்தை ஆராய்ந்தால் சிவப்பழகின் மீதான நமது மோகம் அப்பட்டமாக தெரியும். இதனை அடையாளம் கண்டு கொண்ட பன்னாட்டு நிறுவனங்களும் நம்மை நல்ல சந்தையாக (Market) பயன்படுத்த வியாபார நோக்கத்துடன் பெண்கள் ஆண்கள் என இருபாலருக்குமான முகப் பூச்சுகள், திரவங்கள், சோப்புகள் போன்ற பல்வேறு அழகு சாதனப் பொருட்களை அறிமுகப்படுத்தி அழகு என்பது லாப வணிகமாக மாறியுள்ள போக்கை காண முடிகிறது.

அழகு சார்ந்த உணர்வினை வணிகமயமாக்கி இப்பன்னாட்டு நிறுவனங்களே அழகிப் போட்டிகளை முன்னின்று நடத்துகின்றன. சந்தை சாத்தியக் கூறு மிகுந்த இந்திய நாட்டிலிருந்து உலக அழகிகளும் முடிசூட்டப்பட்டுள்ளனர். அழகு சார்ந்த நமது விழிப்புணர்வையும் நுகர்வையும் அதிகப்படுத்தும் இம்முயற்சியில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஊடகங்கள் சித்தரிக்கும் அழகு நம்மை ஒருவித மாயைக்குள் தள்ளுகிறதோ என்கிற ஐய்யம் எழுகிறது. விளைவு, சந்தையில் அதிகரித்துவரும் அழகு சாதனப் பொருட்களும் அதன் விலைகளும்தான். பல்வேறு வியாபார யுக்திகளால் ஊடகங்களின் துனையோடு லாபம் மட்டுமே குறிக்கோளாய் செயல்படும் இப்பன்னாட்டு நிறுவனங்களுக்கு மத்தியில் உடல் ஆரோக்கியம் குறித்த சிந்தனை சத்தமின்றி மழுங்கடிக்கப்படுகிறது. எனவே ஊடகங்களை குறிப்பாக திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சியின் வாயிலாக மையப்படுத்தும் அழகு சார்ந்த விசயங்களை கண்டிப்பாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. நமது கண்களைத் தாண்டிய அறிவுத் தேடலும் எதையும் கேள்வி கேட்டு ஆராயும் தன்மையும் இன்றைய சூழலில் அவசிமாகிறது. இம்முதல் தொடரில் ஊடகங்கள் சித்தரிக்கும் அழகு என்ற கோட்பாட்டையும் பள்ளிக் குழந்தைகள் குறிப்பாக வளர் இளம் பருவத்தினரிடம் எவ்வாறான தாக்கங்ளை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

ஊடகங்கள் சித்தரிக்கும் கதாநாயகிகள், விளம்பர மாடல்கள் எதார்த்தத்தை மீறிய, நடைமுறை வாழ்க்கையில் நாம் சார்ந்திராத உருவங்களாக நம்மை ஆக்கிரமிப்பது விந்தையாக உள்ளது. அதிகப்படியான சிவப்பழகு, பளிரென்ற தோற்றம், மெலிந்த உடல்வாகு என நாம் அன்றாடம் பார்க்கும் முகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு அதிக செயற்கைத்தனத்தோடு அழகு குறித்த ஆபத்தான கருத்தியலை திணிக்கிறது. இது இளைய தலைமுறையினரிடையே உடல் குறித்த பிம்பத்தை (க்ஷழனல ஐஅயபந) உருவாக்குகின்றது. உடல் ஆரோக்கியத்திற்கு எதிரான தரமற்ற நிர்ணயங்களை நம்மிடையே திணிக்கின்றது. குறிப்பாக ஊடகங்கள் சித்தரிக்கும் கதாநாயகிகள், விளம்பர மாடல்கள் முன்னிருத்தும் 101பூஜ்ய அளவு (ணநசழ ளணைந) என்கிற மெலிந்த தேகம் பெண்களுக்கான உடல் அளவை நிர்ணயிக்கின்றன. இதே போல ஆண்களுக்கான அழகு நிர்ணயங்களாக திரைப்பட கதாநாயகர்களும் விளம்பர மாடல்களும் முன்னிருத்துவது 6 பேக் அல்லது 8 பேக் எனப்படும் உடற்கட்டு ஆகும். விளைவு இவ்வாறான அசாதாரணமான அழகை அடைய

பல்வேறான ஆரோக்கியமற்ற வழிகளை இன்றைய வளர் இள பருவத்தினர் கையாள்வது பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமுதாய ஆர்வளர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நமது நாட்டில் 14 வயது முதல் 17 வயது வரை உள்ள குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் **“உங்கள் புறத்தோற்றம், உடல் அமைப்பு”** உங்களுக்கு பிடித்திருக்கின்றதா**?** என கேட்ட போது பெரும்பாலான குழந்தைகள் **“இல்லை”** என்றும் பலர் **“முழுமையாக திருப்தி இல்லை”** என்றும் கூறியுள்ளனர். இவ்வகையான ஆய்வுகள் அதிர்ச்சிகரமான உண்மைகளை வெளிக்கொணருகிறது. பெரும்பாலான குழந்தைகளின் உடல் சார்ந்த பிம்பம் என்பது பல்வேறு ஊடகங்களால் திணிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. உதாரணமாக பெண்களைப் பொறுத்தமட்டில் உடல் சார்ந்த பிம்பத்தின் புரிதல்கள் சிவப்பழகு மற்றும் பூஜ்ய அளவு எனப்படும் ணநசடி ளுணைந யை எட்டுவதே தங்களுக்கு விருப்பமானது என்று தெரிவித்துள்ளனர். இதற்காக அதிக பணம் செலவழித்து அழகு சாதன பொருட்களை வாங்குவது, தங்களை வருத்திக் கொண்டு முறையான பயிற்சிகளின்றி, புரிதலின்றி உடல் மெலிய மற்றும் ஏற தவறான அனுகுமுறைகளை கையாள்வது வாடிக்கையாகிவிட்டது. இன்றைக்கு பெரும்பாண்மையான மாணவிகள் காலை அல்லது இரவு உணவை தவிர்க்கும் வழக்கம் மேலோங்கி வருகிறது. தங்களை வருத்திக் கொண்டு உணவை தவிர்த்து தேவையான உடல் எடையைக் காட்டிலும் குறைவான நிலையை அடைய மெனக்கெடுக்கிறார்கள். சாதாரணமான இயற்கையாக அந்த பருவத்திற்கே உரிய எடையை கூட அதிகம் எனக்கருதி உடல் மெலிய ஆரோக்கியமற்ற வழிகளை தேர்வு செய்கின்றனர். மேலும் கருப்பாக இருப்பதே குற்றம், மனித வளர்ச்சிக்கு, இயல்பிற்கெதிரானது எனவே எதையாவது போட்டு நான்கு வாரங்களில் சிவப்பழகு பெற வேண்டும் என ஊடகங்கள் நிற வேற்றுமையை விதைக்க இது இன்றைக்கு ஆண்களையும் விட்டு வைக்கவில்லை.

ஆண்களை பொறுத்தவரை, செயற்கையான உடலமைப்பை பெற துரித உணவுகள், செயற்கை உணவுகள், ஊக்க மருந்துகள், இன்னும் பிற முறைகளை பயன்படுத்துகின்றனர். இந்த ஆபத்தான அழகியல் கூறுகளை இவர்கள் எங்கிருந்து கற்றுக் கொண்டனர். ஆய்வாளர்கள் களமிறங்கிய போது முதன்மை காரணமாக நின்றது உடல் சார்ந்த அழகியல் குறித்த ஊடகங்கின் சித்தரிப்புகளே. ஊடகங்கள் முன்னிருத்தும் அழகு சார்ந்த பரிமாணங்களை இளைய தலைமுறையினர் எட்ட மேற்கொள்ளும் முயற்சிகள் ஏராளம்.

சந்தைகளின் நுகர்வாளர்களாக மாறி ஊடககங்கள் போற்றும் அழகிலக்கணங்களை எட்ட முடியாது நமது வளரிளம் பருவத்தினர் சந்திக்கும் விளைவுகளோ இன்னும் அபாயகரமானது. அழகு பற்றிய தவறான புரிதல் உடல்நலக் கேடுகளை விளைவிக்கின்றது என்பது ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவர்களின் கூற்று. உடல் மெலிய உணவுகளைத் தவிர்ப்பதால் இரத்த சோகை, முடி உதிர்தல், ஞாபக மறதி, கண்பார்வை பாதிப்பு, மாதவிடாய் கோளாறுகள் போன்ற எண்ணற்ற நோய்கள் உருவாக்கும் அபாயம் உள்ளது. அதே சமயம் துரிதமாக எடையை கூட்ட அல்லது குறைக்க எடுக்கும் உணவுகளும் இரசாயன தன்மையுடனும் உள்ளதால் உடல் நலனை பாதிக்கின்றது.

இவ்வாறான போக்கு உடல் கேடுகளை மட்டுமின்றி மனநலனையும் பாதிக்கிறது என கண்டறியப்பட்டுள்ளது. பெரும்பாலான குழந்தைகள் ஊடககங்கள் போற்றும் அழகிலக்கணங்களை எட்ட முடியாத போது மனச்சோவு தாழ்வுமனப்பான்மையை அடைகின்றனர். மேலும் தங்களது இயற்கையான உடல் அமைப்பை வெறுக்கின்றனர் தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

எனவே வளரிளம் பருவத்தினரிடையே ஊடகங்கள் முன்னிருத்தும் அழகு சார்ந்த பரிமாணங்களைப் பற்றிய புரிதல்கள் விவாதிக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். எது அழகு எது ஆரோக்கியம் என்ற புரிதல் மேம்பட வேண்டும். கண்களைத் தாண்டி பகுத்தறிவோடு ஊடகங்களை ஆராய்வோம் செயல்படுவோம்.

**கட்டமைக்கப்படும் எதார்த்தங்கள்**

ஊடகங்கள் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமானது எப்போதும் கணிக்கத்தக்க ஒன்றாக இருப்பதில்லை என்றாலும் அது வலிமை மிகுந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. சமூக நீரோடையில் கவனிக்கதக்க பாதிப்பை ஏற்**படு**த்தும் அளவிற்கு சக்தி மிகுந்தது. இவ்வூடகங்கள் கட்டமைக்கும் எதார்த்தங்கள் சமூகத்தின் பாதிப்பே என்றாலும் அவைகள் பெரும்பான்மையானவை நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக இல்லாதது பல்வேறு விளைவுகளை கொண்டுள்ளது என்கின்றனர் அறிஞர்கள்.

தில்லியில் மருத்துவ கல்லூரி மாணவிக்கு நேர்ந்த நிலையானது எதார்த்த வக்கிரங்கள் நிறைந்த உலகின் பிரதிபலிப்பாகவே உள்ளது.

ஊடக பாத்திர படைப்புகளில் வரும் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்று மிகவும் நல்லவர்களாகவும் (கதாநாயகன்) மற்றொன்று மிகவும் கொடியவர்களாகவும் (வில்லன்) சித்தரிக்கப்படுகின்றனர். இன்றைய இளைஞர்கள் திரைப்பட நாயகர்களைத்தான் அதிகம் கொண்டாடுகின்றனர். திரைப்படங்கள் சித்தரிக்கும் முக்கிய பாத்திரமான கதாநாயகர்கள் பெரும்பாலும் நூறு சதவீதம் வீரமிக்கவர்களாக, எந்த சூழலையும் சமாளிப்பவர்களாக, மிகவும் நல்லவர்களாக இருக்கின்றனர். எனவே ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறோமோ அந்த ஆசைக்கு கற்பனைக்கு உயிர் கொடுக்கும் விதமாக இவர்களது கதாபாத்திரங்கள் வடிவமைக்கப்படுகிறது. இதை பார்க்கும் போது நமக்கு இப்படி ஒரு பிள்ளை இருந்தால் நன்றாக இருக்கும் என பெற்றோர்களும், இப்படி ஒரு கணவர், மாப்பிள்ளை இருந்தால் நல்லா இருக்கும் என நினைக்கின்றனர். ஆனால் எதார்த்த வாழ்க்கையில் நாம் சந்திக்கும் கதாபாத்திரங்கள் நிஜ மனிதர்களைப் பற்றி பெரும்பான்மையான ஊடகங்கள் பேசுவதேயில்லை. கற்பனை உலக நாயகர்கள் போல இருந்தால் நன்றாகத்தான் இருக்கும் ஆனால் நாம் அனைவரும் மனிதர்கள் வெற்றி தோல்வி இன்பம் துன்பம் நன்மைஅ தீமை என எல்லா நிலைகளையும் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு தருணத்தில் சந்தித்துதான் ஆகவேண்டும்.

ஒன்று ஒரேயடியாக நல்லவன் அல்லது மரணத்தை தழுவும் அளவிற்கு தீயவன் இந்த இரண்டே இன்றைய பெரும்பான்மையான இளையோரின் வரவேற்பை பெரும் சினிமாக்களில் தொணிக்கும் முக்கிய கதாபாத்திரங்களும் சராசரியான மனிதர்களை, குணங்களை, வாழ்க்கை முறைகளை மையப்படுத்துவதே இல்லை. எதார்த்த வாழ்க்கை நிலையிலிருந்து ஒரு வித மாயை (குயவேயளல) யில்தான் இன்றைய தலைமுறையினர் அதிகம் ஆக்கிரமிக்கப்படுகின்றனர். அதுபோல இருக்கவும் ஆசைப்படுகின்றனர்.

மேற்கத்திய நாடுகளின் ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கமானது நமது ஊடகங்களிலும் பிரதிபளிக்கிறது. குறிப்பாக இன்றைய திரைப்படங்களில் மேற்கத்திய தாக்கங்களை

கொண்டுதான் இருக்கிறது. உதாரணத்திற்கு ஸ்பைடர் மேன், சூப்பர் மேன், போன்ற படங்களின் தாக்கங்கள் நமது திரைப்படங்களிலும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளிலும் காணப்படுகிறது. இது மனித இனத்திலிருந்து மாறுபட்ட அதீத பலங்ளையும் திறமைகளையும் உள்ளடக்கி சாகசங்கள் புரியும் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எடுக்கப்படுகின்றன. இவை ஒரு வித மாய உலகை நிஜ உலகம் போல் சித்தரிக்கின்றன. இது போன்ற சாகசங்கள் கொடூர கருவிகள், ஆயுதங்களின் பயன்பாட்டை கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான போக்கு இளையோரை எதார்த்த உலகினின்று வெளியில் எடுத்து கற்பனை உலகை ரசிக்க வைக்கிறது. அதுபோன்ற கதாபாத்திரங்கள் நிஜ உலகில் இருந்தால் நன்றாக இருக்குமே என்ற ஆசையை தூண்டுகிறது.

**மனித குலம் ஆண்–வீரம்–பெண்–அழகு**

வன்முறை என்பது ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகிறது.

மேலை நாடுகளில் இவ்வாறான சித்தரிப்புகள் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது வன்முறை கலாச்சாராம் வளர இவ்வாறான சித்தரிப்புகளும் ஒரு காரணமாக அமைகிறது. என்கின்றன ஆய்வுகள்.

பள்ளிப் பருவ காதலை நம் திரைப்படங்கள் கொண்டாடினாலும் அதிலுள்ள ஆபத்துகளை ஆராய மறுக்கின்றன. பள்ளிப் பருவ காதலை மையப்படுத்தும் திரைப்படங்கள் இன்றைக்கும் வெளிவந்து கொண்டுதான் உள்ளது. பள்ளிச் சீருடையில் பள்ளிக் கூடங்களை காட்டும் போது பெரும்பான்மையான நமது திரைப்படங்கள் விடலைப் பருவத்து காதலை மட்டும்தான் மையப்படுத்தி வந்துள்ளது. எதார்த்தங்களில் இல்லாத அளவில் இது குழந்தை திருமணம் சட்டப்படி குற்றம் எனும் போது பள்ளிப்பருவ காதல் சித்தரிப்புகள் முரணாக மாறுவதை காணமுடிகிறது. மாணவ மாணவிகள் மத்தியில் இதன் தாக்கங்கள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. பல நேரங்களில் எதிர்காலமே மாறும் நிலைக்கு இந்த சித்தரிப்புகளும் நியாயப்படுத்தப்பட ஊடகம் ஒரு காரணமாக அமைவது வேதனை அளிக்கிறது.

முழங்கால் வரை சேலையை தூக்கி மடித்து சேற்றில் நாற்று நட்ட போது அதை ஆபாசமாக பார்த்தது இல்லை ஆனால் இன்றைய சூழலிலோ சற்றே விலகும் ஆடையில் கூட பாலியல் வக்கிர பார்வையை தூண்ட ஊடகங்களுக்கு பெரும்பங்கு உண்டு என்பது நிதர்சனமான உண்மை.

ஊடகங்கள் சமூகத்தை பிரதிபலிக்கின்றன என்ற போதும் அவை சமூகத்தை எப்படி நிர்ணயிக்க வேண்டும் எனவும் கற்றுக் கொடுக்கின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஊடகங்கள் சித்தரிக்கும் உலகம் என்பது பெரும்பகுதி கற்பனையானதும் மிகைப்படுத்தப்பட்டதுமானது என்பது இவர்களது கூற்று. எனவே ஊடகங்கள் நம்முன் சித்தரிக்கும் எதார்த்தங்களை பகுத்தாராய்வது அவசியம்.

**எதார்த்த சூழல்**

ஒன்பதாம் வகுப்பு மாணவி மாணவர்களிடம் ஓர் ஆய்வுக்காக ஊடகங்கள் பற்றிய ஓர் விவாதத்தை நடத்திய போது அவர்களது ஊடக புரிதல்களும் அதன் பயன்பாட்டு போக்குகளையும் அதன் விளைவுகளையும் பற்றி ஆராய ஒரு ஆய்வு கிடைத்தது. பெரும்பாலான மாணவ மாணவிகள் ஒரு நாளைக்கு 2 மணி நேரம் முதல் 5 மணி நேரம் வரை ஊடகங்களை(குறிப்பாக தொலைக்காட்சி) பயன்படுத்துகின்றனர். இதில் பொழுது போக்கு, தகவல், விளையாட்டு என அவரவர்

தேவைகளுக்கேற்ப பயன்பாடும் நேரமும் மாறுபடுகின்றனர். ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. ஊடகங்கள் இன்றைய மாணாக்கரின் வாழ்வின் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

ஊடகங்கள் இவர்கள் முன் நிறுத்தம் பெண்கள் பற்றிய புரிதல்களை இந்த இதழில் ஆராய்வோம். பள்ளிகள் ஆண், பெண் சமத்துவத்தை கற்பித்தாலும் ஊடகங்களின் பயன்பாடு அவர்கள் பெறும் கல்வியையும் விஞ்சி தனது ஆதிக்கத்தை முன்னிருத்துவது வியப்பாகத்தான் உள்ளது. ஆண் எப்படி இருக்க வேண்டும் பெண் எப்படி இருக்க வேண்டும் என கற்றுக் கொடுப்பதில் ஊடகங்களின் ஆதிக்கத்தை உணர முடிந்தது. பெண் என்றால் கையெடுத்து கும்பிட வேண்டும், பெண் அதிகம் ஆசைப்படக் கூடாது. ஆம்பிளை என்றால் வீரம் வேணும், ஆண் பிள்ளை அழக்கூடாது என முண்டியடித்து வரும் வார்த்தைகள் பாகுபாட்டை விதைப்பதில் ஊடகங்ளின் தாக்கத்தையும் பங்கையும் உணர்த்தியது. கோபம், ஆசை, சிரிப்பு, அழகை, மனித இனத்திற்கு பொதுவான உணர்வுகள் குணங்களாக இருக்கும் போது எப்படி வேறுபட்டு ஆண் என்றால் இதை செய்ய வேண்டும் பெண் என்றால் இதை செய்ய வேண்டும் இதை செய்யக் கூடாது என்று விதைத்தது.

ஊடகங்கள் பாலினப் பாகுபாட்டு கூறுகளை இன்றைக்கும் ஆழமாய் பிரதிபலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. பெண்னின் சித்தரிப்புகள் பொழுது போக்கு ஊடகங்களில் பல வகையாக உள்ளதை பார்க்கலாம். அழகு, தியாகம், பொறுமை, கற்பு போன்ற இலக்கணங்களுக்கு உட்பட்டவளாக, பாதுகாக்கப்பட, திருத்தப்பட, வழிகாட்டப்பட வேண்டியவளாக என ஒரே மாதிரியான சித்தரிப்புகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதில் நவயுகத்தின் பெண்கள் அனைத்தையும் தாங்கி எதிர்கொள்ளும் சுமைதாங்கிகளாக ஞரயீநச றடிஅயடீ எனப்படும் வீட்டையும், வேலையையும், எதிரிகளையும் ஒரே நேரத்தில் எதிர் கொள்பவளாக அல்லது வில்லத்தனம், விஷமத்தனம் மிகுந்தவளாக அல்லது கடிவாளம் போட்ட குதிரையாய் அவன் எவ்வளவு மோசமாக நபராக இருந்தாலும் கதாநாயகனையே சுற்றி சுற்றி வருபவள் என பல அவதாரங்கள் எதார்த்ததில் செயற்கையாக, எதார்த்தங்களை மறைக்கும் விதமாக அமைகிறது.

கதாநயகர்களுக்கு வில்லன் மீது கோபம் வர வேண்டும். அந்த கோபம் நியாயமானதாக இருக்க வேண்டும். அந்த கோபத்தின் விளைவாக ஆக்ரோஷத்துடன் சண்டை காட்சிகள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு தாய்மார்கள் கொலை செய்யப்படுவதும், தங்கைகள் பலாத்காரம் செய்யப்படுவதும், காதலிகள் கடத்தப்படுவதும் கதைக்கு அத்தியாவசியமான காட்சிபடுத்தப்படுகிறது என பெண்கள மீதான வன்முறைக்கு ஆபத்தான இலக்கணங்களையும் நமது ஊடகங்களில் காண முடிகிறது. மனைவியை அடிப்பது குற்றமில்லை, அடிக்கிற கைதான் அனைக்கும் தவறு செய்யும் பெண்களை துன்புறுத்துவது குற்றமில்லை, காதலிக்க பிடிக்கவில்லையென்றாலும் கட்டாயப்படுத்தி அன்பை புரியவைப்பது, பலாத்காரம் செய்தவர்களையே திருமணம் செய்வது போன்ற யுத்திகளையும் இதனை காணும் போது பெண்கள் மீதான் வன்முறைகளுக்கு காரணங்களை தேடத்தான் முனைகிறோமே தவிர அதை சமூதாய சீர்கேடாகவோ, பிரச்சனையாகவோ பார்ப்பது இல்லை. இவ்வாறு பெண்கள் மீதான வன்முறையை ஹீரோவின் ஆண்மையை நிருபிக்கும் காரணிகளாக சித்தரித்த திரைப்படங்களும் தொலைக்காட்சி தொடர்களும் ஏராளம். இதனால் பெண்கள் மீதான வன்முறை என்பது ஒரு கதைக் கருவியாக பயன்பட்டிக் கொண்டிருக்கும் போக்கு வன்முறை கலாச்சாரத்தை நியாயப்படுத்தும் அபாயம் உள்ளது.

இதன் இன்னொரு பரிணாமம் செய்தி ஊடகங்கள் பெண்கள் மீதான வன்முறைகளை எவ்வாறு பார்க்கின்றன, சித்தரிக்கின்றன என்பது ஆகும். நடத்தை கெட்ட மனைவியின் தலையை துண்டித்து ஊர்வலமாக சென்ற கணவன் என்ற தலைப்பை பார்த்ததும் படிக்க தூண்டும். இவ்வாறு ஏராளமான தலைப்புகளே நடத்த கொடுமைகளை பரபரப்பு செய்திகளாக நம்முன் படைக்கின்றன. இவ்வாறான தலைப்புகள் மறைமுகமாக குற்றங்களை நியாயப்படுத்துகின்றன என்கிறது ஆய்வுகள். இத்தகைய குற்ற செய்திப் பிரிவுகள் பெண்கள் மீதான வன்முறையை அணுகும் விதமே பாகுபாட்டுடன்தான் உள்ளது. தவறு செய்யும் பெண் தண்டிக்கப்பட வேண்டும். ஆண் கோபத்தின் உச்சத்திற்கோ, போதையின் உச்சத்திற்கோ தள்ளப்பட்டதால்தான் இவ்வாறான குற்றங்கள் நிகழ்ந்துள்ளது என சார்பு தன்மையுடன் சித்தரிப்புகள் இவைகளை குற்றங்களாகவே பார்ப்பதில்லை. குற்றங்கள் நிருபிக்கப்படாத சூழலில் அருகில் இருந்து பார்த்தது போல எழுதுவது வேதனையான போக்கு ஆகும்.

மாறாக குற்றத்தை ஏதேனும் ஒரு வகையில் நியாயப்படுத்தவே செய்கிறது என்கின்றன ஆய்வுகள். பொதுவாக பல பத்திரிகைகள் கள ஆய்வுகள் செய்யப்படாமல் செய்தியாக வெளிவருகின்றன.

பெரும்பாலான பொழுது போக்கு ஊடகங்களில், சித்தரிப்புகளில் பெண்கள் வன்முறைக்குள்ளாவதும் அதனால் கோபமுற்று ஆண்கள் பழிவாங்குபவர்களாவும் சித்தரிக்கப்படும் கதை களங்களை கவனிக்க வேண்டும். இவ்வாறான வன்முறைகள் தொடாந்து வரும் போது அது சமூகத்திற்கு சகஜ நிகழ்வாக காணப்படும் அபாயம் ஏற்படுகிறது. மேலும் பெண்கள் குடும்ப சூழல் தவிர வெளியுலக அறிவு சார்ந்து சூழ்நிலைகளை எதிர்கொள்வதில் சாமர்த்தியம் அற்றவர்களாக அப்படியே சமாளித்தாலும் முடிவு தவறாக முடிவுகளால் ஏளனப்படுத்தப்படுபவர்களாகவே கட்டமைக்கப்படுகின்றனர். பெண்கள் பாதிக்கப்படுபவர்களாகவும் ஆண்களை பாதிப்பை ஏற்படுத்துபவர்களாகவே, காப்பாற்றுபவர்களாகவும் அல்லது பழிவாங்குபவர்களாகவே சித்தரிக்கும் போக்கு பெண்களை வலுவற்றவர்களாகவும் ஆண்களை ஆதிக்கத்தின் உருவாகவும் முன்வைக்கிறது. இது ஆண் பெண் பற்றிய பொது புத்தியை பொது சூழலில் நிர்ணயிக்கும் காரணிகளாக அமையும் போது அது பெண்களை இரண்டாம் நிலையிலேயே பார்க்கும் அபாயம் ஏற்படுகிறது.

பரபரப்பு செய்திகளை முந்தி கொடுப்பதில் இருக்கும் முனைப்பு அவை பிரஸ் கவுன்சில் விதிமுறைகளுக்கு உட்பட்டு, பத்திரிகை தர்மத்திற்கு உட்பட்டு உள்ளனவா என பார்க்கப்படுவது குறைவாகவே உள்ளது. தில்லி மாணவி பாலியல் பலாத்கார கொலை வழக்கில் தேசிய ஊடகங்கள் அந்த பெண்ணின் புகைப்படத்தையோ பெயரையோ அடையாளப்படுத்தாமல் அந்த பெண்ணின் கண்ணியத்தை காத்தது. ஆனால் அதே சமயம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைக்குண்டம் அருகே ஒரு பள்ளி சிறுமி பாலியல் பலாத்கார முயற்சியில் கொலை செய்யப்பட்டதை நமது மாநில அளவிலான ஊடகங்கள் சித்தரித்த விதம் ஆராயப்பட வேண்டிய ஒன்று. காரணம் பல முக்கிய ஊடகங்கள் அச்சிறுமியின் புகைப்படத்துடன் பெயர், ஊர் மற்றும் பெற்றோர் குறிப்புகள் தந்து பள்ளி மாணவி பள்ளி மாணவி கற்பழிப்பு என்ற தலைப்பில் பரபரப்பு செய்தியாக வெளியிட்டன. இது அந்த குழந்தையின் மாண்பைப் பற்றியோ பத்திரிகை தர்மம் பற்றியோ குழந்தைகள், பெண்கள் மீதான வன்முறை செய்திகளை கொடுக்கும் முறைப் பற்றியோ கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. பாதிக்கப்பட்டவர்களே செய்தி ஊடகங்களில் அதிகமாக காட்சிப்படுத்தப்படுகின்றனர். இது பாதிக்கப்பட்டவர்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும் செயலாகும்.

குழந்தைகளை தினமும் குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆக்கிரமிக்கும் ஊடகங்கள் முன்னிருத்தும் பெண்கள் பற்றிய விவாதங்கள் மாணவர்கள் மத்தியில் அவசியம் எழ வேண்டும். இது பெண்களை புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். எனவே கீழக்கண்ட கருத்துக்களையும் நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

1. ஊடகங்களில் தொடரும் ஒரே மாதிரியான சித்தரிப்புகள் குறித்து விவாதித்து தெளிவு பெற வேண்டும். எதை நோக்கி இந்த சித்தரிப்புகள் மாணாக்கரிடம் கொண்டு செல்கிறது, இதனால் பெண்கள் குறித்த பார்வை எவ்வாறு உள்ளது என ஆராய வேண்டும்.

   செய்தி ஊடகங்களில் பெண்கள் குறித்த போக்கை ஆராய்வதோடு விவாதிக்க வேண்டும்.

**–இராதா, உதவிப் பேராசிரியை, திருநெல்வேலி**

## தமிழக அரசின் பெண்கள் பாதுகாப்பிற்கான அவரச உதவி எண்கள்

1. இந்த எண் பயன்பாடு திடீர் ஆபத்துக்கள் வரும்போது பெண்கள் இந்த எண்ணைத் தொடர்புகொள்ளலாம். எங்கோ ஓர் இடத்தில் தனித்துவிடப்பட்டு விட்டாலும் அல்லது தங்க இடமில்லாதபோதும் இந்த எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்! இந்த எண் எடுக்கப்படவில்லை என்றால் **044-23452365** என்கிற எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.
2. பெண் குழந்தைகள் என்றால் **1098** என்கிற எண்ணைத் தொடர்புகொள்ளலாம்
3. பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு ஆதரவற்ற நிலையில் இருக்கும் வயதான பெண்கள் என்றால் **1253**-ஐ தொடர்புகொள்ளலாம்.
4. குடும்பத்தில் கணவன் மூலம் வன்கொடுமைக்கு ஆளானாலோ அல்லது வேலை செய்யுமிடத்திலோ, கல்லூரியிலோ பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டாலோ **044-28551155** என்கிற தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் எண்ணுக்கும், **044-25264568** என்ற எண்ணுக்கும் அழைத்து ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதோடு புகாரும் கொடுத்து உங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குத் தீர்வும் காணலாம்.
5. மனரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களை, ஆதரவற்ற பெண்களைப் பாதுகாக்க **044 - 26530504, 044-26530599**- என்கிற எண்களைத் தொடர்புகொள்ளலாம். இது, சென்னை முகப்பேரிலுள்ள பெண்களுக்கான விழுதுகள் தொண்டு நிறுவனத்தின் எண்! மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
6. வாடகைத் தாய்களாகப் போய் புரோக்கர்களிடம் ஏமாறும் பெண்கள் **044-26184392, 9171313424** என்கிற உலக வாடகைத் தாய்களின் உரிமைகள் அமைப்பு எண்ணைத் தொடர்புகொண்டு வாடகைத்தாய் என்றால் என்ன? அவர்களுக்கான உரிமைகள், விதிமுறைகள் என்ன என்பனவற்றை அறியலாம்.
7. ரயில் பயணங்களின்போது பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் புகார் தெரிவிக்க ரயில்வே போலீஸ் நம்பரான **044-25353999, 90031 61710, 99625 00500** எண்களைத் தொடர்புகொள்ளலாம்.
8. சென்னைக் கல்லூரிகளில் ராக்கிங் என்றால் **95000 99100** என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். கொடுத்தால் போதும்,உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுக்கும்.
9. ஆட்டோவில் அளவுக்கதிகமான குழந்தைகளை ஏற்றிச் சென்றால் **044-24749002** மற்றும் **044-26744445** என்கிற எண்களைத் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.
10. பொருட்கள் வாங்கும் கடைகளில் ஏமாற்றப்படுகிறீர்கள் என்று உணர்ந்தால் மாநில நுகர்வோர் புகார்களுக்கான எண்கள் **180011400, 94454 64748, 72999 98002, 72000 18001, 044- 28592828** ஆகிய எண்களைத் தொடர்புகொண்டு புகார் கொடுப்பதோடு ஆலோசனைகளையும் பெறலாம்.
11. பேருந்துகள் சரியான நேரத்திற்கு வராதது, நடத்துநர் மீதி சில்லரையைக் கொடுக்காதது அல்லது குடித்துவிட்டோ, செல்போன் பேசிக்கொண்டோ ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவது போன்ற புகார்களுக்கு **93833 37639** என்கிற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம்.

ஆதாரம் : தமிழக அரசு - செய்தி துறை

# The National Legal Services Authority (NALSA)

INTRODUCTION

The National Legal Services Authority (NALSA) has been constituted under the Legal Services Authorities Act, 1987 to provide free Legal Services to the weaker sections of the society and to organize Lok Adalats for amicable settlement of disputes.

Hon'ble Mr. Justice Tirath Singh Thakur, the Chief Justice of India is the Patron-in-Chief and Hon'ble Mr. Justice Anil R. Dave, Judge, Supreme Court of India is the Executive Chairman of the Authority. NALSA is housed at 12/11, Jam Nagar House, New Delhi-110011.

In every State, State Legal Services Authority has been constituted to give effect to the policies and directions of the NALSA and to give free legal services to the people and conduct Lok Adalats in the State. The State Legal Services Authority is headed by Hon'ble the Chief Justice of the respective High Court who is the Patron-in-Chief of the State Legal Services Authority.

In every District, District Legal Services Authority has been constituted to implement Legal Services Programmes in the District. The District Legal Services Authority is situated in the District Courts Complex in every District and chaired by the District Judge of the respective district.

.

**<u>LEGAL AID MOVEMENT IN INDIA - ITS DEVELOPMENT AND PRESENT STATUS</u>**

Article 39A of the Constitution of India provides that State shall secure that the operation of the legal system promotes justice on a basis of equal opportunity, and shall in particular, provide free legal aid, by suitable legislation or schemes or in any other way, to ensure that opportunities for securing justice are not denied to any citizen by reason of economic or other disability. Articles 14 and 22(1) also make it obligatory for the State to ensure equality before law and a legal system which promotes justice on a basis of equal opportunity to all. Legal aid strives to ensure that constitutional pledge is fulfilled in its letter and spirit and equal justice is made available to the poor, downtrodden and weaker sections of the society.

The earliest Legal Aid movement appears to be of the year 1851 when some enactment was introduced in France for providing legal assistance to the indigent. In Britain, the history of the organised efforts on the part of the State to provide legal services to the poor and needy dates back to 1944, when Lord Chancellor, Viscount Simon appointed Rushcliffe Committee to enquire about the facilities existing in England and Wales for giving legal advice to the poor and to make recommendations as appear to be desirable for ensuring that persons in need of legal advice are provided the same by the State. Since 1952, the Govt. of India also started addressing to the question of legal aid for the poor in various conferences of Law Ministers and Law Commissions. In 1960, some guidelines were drawn by the Govt. for legal aid schemes. In different states legal aid schemes were floated through Legal Aid Boards, Societies and Law Departments. In 1980, a Committee at the national level was constituted to

oversee and supervise legal aid programmes throughout the country under the Chairmanship of Hon. Mr. Justice P.N. Bhagwati then a Judge of the Supreme Court of India. This Committee came to be known as CILAS (Committee for Implementing Legal Aid Schemes) and started monitoring legal aid activities throughout the country. The introduction of Lok Adalats added a new chapter to the justice dispensation system of this country and succeeded in providing a supplementary forum to the litigants for conciliatory settlement of their disputes. In 1987 Legal Services Authorities Act was enacted to give a statutory base to legal aid programmes throughout the country on a uniform pattern. This Act was finally enforced on 9th of November, 1995 after certain amendments were introduced therein by the Amendment Act of 1994. Hon. Mr. Justice R.N. Mishra the then Chief Justice of India played a key role in the enforcement of the Act.

National Legal Services Authority was constituted on 5th December, 1995. His Lordship Hon. Dr. Justice A.S. Anand, Judge, Supreme Court of India took over as the Executive Chairman of National Legal Services Authority on 17the July, 1997. Soon after assuming the office, His Lordship initiated steps for making the National Legal Services Authority functional. The first Member Secretary of the authority joined in December, 1997 and by January, 1998 the other officers and staff were also appointed. By February, 1998 the office of National Legal Services Authority became properly functional for the first time.

In October, 1998, His Lordship Hon. Dr. Justice A.S. Anand assumed the Office of the Chief Justice of India and thus became the Patron-in-Chief of National Legal Services Authority. His Lordship Hon. Mr. Justice S.P. Bharucha, the senior-most Judge of the Supreme Court of India assumed the office of the Executive Chairman, National Legal Services Authority.

Section 12 of the Legal Services Authorities Act, 1987 prescribes the criteria for giving legal services to the eligible persons. Section 12 of the Act reads as under:-

"12.Every person who has to file or defend a case shall be entitled to legal services under this Act if that person is –
(a) a member of a Scheduled Caste or Scheduled Tribe;
(b) a victim of trafficking in human beings or begar as referred to in Article 23 of the Constitution;
(c) a woman or a child;
(d) a mentally ill or otherwise disabled person;
(e) a person under circumstances of undeserved want such as being a victim of a mass disaster, ethnic violence, caste atrocity, flood, drought, earthquake or industrial disaster; or
(f) an industrial workman; or
(g) in custody, including custody in a protective home within the meaning of clause (g) of section 2 of the Immoral Traffic (Prevention) Act, 1956 (104 of 1956); or in a juvenile home within the meaning of clause
(j) of section 2 of the Juvenile Justice Act, 1986 (53 of 1986) or in a psychiatric hospital or psychiatric nursing home within the meaning of clause (g) of section 2 of the Mental Health Act, 1987 (14 of 1987); or
(h) in receipt of annual income less than rupees nine thousand or such other higher amount as may be prescribed by the State Govt., if the case is before a court other than the Supreme Court, and less than rupees twelve thousand or such other higher amount as may be prescribed by the Central Govt., if the case is before the Supreme Court."
(Rules have already been amended to enhance this income ceiling).
According to section 2(1) (a) of the Act, legal aid can be provided to a person for a 'case'

which includes a suit or any proceeding before a court. Section 2(1) (aaa) defines the 'court' as a civil, criminal or revenue court and includes any tribunal or any other authority constituted under any law for the time being in force, to exercise judicial or quasi-judicial functions. As per section 2(1)(c) 'legal service' includes the rendering of any service in the conduct of any case or other legal proceeding before any court or other authority or tribunal and the giving of advice on any legal matter.

Legal Services Authorities after examining the eligibility criteria of an applicant and the existence of a prima facie case in his favour provide him counsel at State expense, pay the required Court Fee in the matter and bear all incidental expenses in connection with the case. The person to whom legal aid is provided is not called upon to spend anything on the litigation once it is supported by a Legal Services Authority.

A nationwide network has been envisaged under the Act for providing legal aid and assistance. National Legal Services Authority is the apex body constituted to lay down policies and principles for making legal services available under the provisions of the Act and to frame most effective and economical schemes for legal services. It also disburses funds and grants to State Legal Services Authorities and NGOs for implementing legal aid schemes and programmes.

In every State a State Legal Services Authority is constituted to give effect to the policies and directions of the Central Authority (NALSA) and to give legal services to the people and conduct Lok Adalats in the State. State Legal Services Authority is headed by the Chief Justice of the State High Court who is its Patron-in-Chief. A serving or retired Judge of the High Court is nominated as its Executive Chairman.

District Legal Services Authority is constituted in every District to implement Legal Aid Programmes and Schemes in the District. The District Judge of the District is its ex-officio Chairman.

Taluk Legal Services Committees are also constituted for each of the Taluk or Mandal or for group of Taluk or Mandals to coordinate the activities of legal services in the Taluk and to organise Lok Adalats. Every Taluk Legal Services Committee is headed by a senior Civil Judge operating within the jurisdiction of the Committee who is its ex-officio Chairman.

After the constitution of the Central Authority and the establishment of NALSA office towards the beginning of 1998, following schemes and measures have been envisaged and implemented by the Central Authority:-
(a) Establishing Permanent and Continuous Lok Adalats in all the Districts in the country for disposal of pending matters as well as disputes at pre-litigative stage;
(b) Establishing separate Permanent & Continuous Lok Adalats for Govt. Departments, Statutory Authorities and Public Sector Undertakings for disposal of pending cases as well as disputes at pre-litigative stage;
(c) Accreditation of NGOs for Legal Literacy and Legal Awareness campaign;
(d) Appointment of "Legal Aid Counsel" in all the Courts of Magistrates in the country;
(e) Disposal of cases through Lok Adalats on old pattern;
(f) Publicity to Legal Aid Schemes and programmes to make people aware about legal aid facilities;
(g) Emphasis on competent and quality legal services to the aided persons;
(h) Legal aid facilities in jails;

(i) Setting up of Counseling and Conciliation Centers in all the Districts in the country;
(j) Sensitisation of Judicial Officers in regard to Legal Services Schemes and programmes;
(k) Publication of "Nyaya Deep", the official newsletter of NALSA;
(l) Enhancement of Income Ceiling to Rs.1,25,000/- p.a. for legal aid before Supreme Court of India and to Rs.1,00,000/- p.a. for legal aid upto High Courts; and
(m) Steps for framing rules for refund of court fees and execution of Awards passed by Lok Adalats.

The First Annual Meet of the State Legal Services Authorities was held on 12th of September, 1998 at Vigyan Bhawan, New Delhi which was presided over by His Lordship Hon. Dr. Justice A.S. Anand, the then Executive Chairman, NALSA. His Lordship Hon. Mr. Justice S.B. Majmudar, Judge, Supreme Court of India and Chairman, Supreme Court Legal Services Committee, the Members of the Central Authority and the Executive Chairmen and Member Secretaries of the State Legal Services Authorities attended this Meet. In this Meet, the progress of on-going schemes which had been initiated by NALSA was examined and decisions of far reaching implications were taken with a view to strengthen and streamline legal aid programmes in the country. The Second Annual Meet of the State Legal Services Authorities was held at Jubilee Hall, Hyderabad on 9th of October, 1999. This Meet was inaugurated by His Lordship Hon. Dr. Justice A.S. Anand, the Chief Justice of India and Patron-in-Chief, NALSA. Hon. Mr. Justice S.P. Bharucha, Executive Chairman, NALSA delivered the keynote address. Other dignitaries present at the inaugural function included Hon. Mr. Justice S.B. Majmudar, Judge, Supreme Court of India and Chairman, Supreme Court Legal Services Committee, Hon. Mr. Justice M.S. Liberhan, Chief Justice of Andhra Pradesh High Court and Members of Central Authority.

In pursuance of the call given by His Lordship Hon. Dr. Justice A.S. Anand, the Chief Justice of India in the First Annual Meet, 9th of November is being celebrated every year by all Legal Services Authorities as "Legal Services Day". NALSA issues Press Releases in almost all the leading newspapers in the country in English, Hindi and regional languages to convey to the public salient provisions of the Legal Services Authorities Act, the important schemes introduced by NALSA for providing legal aid and the utility of Lok Adalats, so that people should know about the facilities being provided by Legal Services Authorities throughout the country. State Legal Services Authorities all over the country organise Lok Adalats, legal literacy camps and undertake legal awareness campaign to make people aware of their legal rights.

Permanent and Continuous Lok Adalats are being established in all the Districts in the country. NALSA has been providing and shall continue to provide funds to State Legal Services Authorities for the implementation of the Legal Aid Schemes and Programmes but the infrastructure has to be provided by the State Govts. Separate Permanent and Continuous Lok Adalats in Govt. Departments are aimed at amicably settling pending cases as well as the matters at pre-litigative stage between Govt. Departments and general public so that the inflow of litigation to regular Courts is reduced. In so many Govt. bodies these Lok Adalats have become functional. In Delhi Permanent Lok Adalats have been established in Delhi Vidyut Board, Delhi Development Authority, Municipal Corpn. Of Delhi, MTNL and General Insurance Corpn. These Lok Adalats are becoming popular day-by-day and it is expected that very soon a large number of disputes between public and statutory authorities would start getting settled at pre-litigative stage itself saving the parties from unnecessary expense and litigational inconvenience. In other States also State Legal Services Authorities

have initiated steps to pursuade the State Govts. and statutory bodies, etc. to set up separate Permanent Lok Adalats for amicable settlement of their legal disputes.

"Legal Aid Counsel" Scheme which was conceived and introduced by His Lordship Hon. Dr. Justice A.S. Anand when His Lordship was the Executive Chairman, NALSA has been well received all over country. Legal Aid Counsel have been provided in most of the courts of the Magistrates in the country to provide immediate legal assistance to those prisoners who are not in a position to engage their own counsel.

Hon. Mr. Justice S.P. Bharucha, Executive Chairman, NALSA in the course of working session of the Second Annual Meet of the State Legal Services Authorities held at Hyderabad, had emphasised that Counselling and Conciliation Centers should be established in all the Districts in the country to bring about negotiated settlement of disputes between the parties. All the State Legal Services Authorities are taking steps to establish these Centers which would prove immensely useful for settling legal disputes at pre-litigative stage and would also help legal services functionaries to find out as to whether a person approaching them for legal aid has or not a prima facie case in his favour which is a pre-requisite for grant of legal aid. Hon. Executive Chairman has repeatedly emphasised that legal aid must not be given as a matter of routine and frivolous cases should not be supported by legal aid authorities.

Hon. Mr. Justice S.P. Bharucha, Executive Chairman, NALSA while writing in 'Nyaya Deep' and in the course of his keynote address in the meeting of the Member Secretaries held in NALSA office on 19.2.2000 emphasised the need for improving the quality of legal aid that is being given by legal aid advocates. His Lordship observed that teeming millions of this country who live below poverty line in tribal, backward and far flung areas look to Legal Services Authorities for help and support in resolving their legal problems. When involved in litigation they very often feel that they are fighting an unequal battle in which the party that has better financial resources can secure more able legal assistance. His Lordship is of the view that these poor and weaker sections must not remain under the impression that they are getting comparatively inferior legal assistance. His Lordship has called upon legal services authorities to revise the payment schedule for legal aid panel advocates and also compress the panels so that panel advocates get more work and better remuneration from legal services authorities and thus get encouraged to render effective legal assistance to aided persons.

His Lordship Hon. Mr. Justice B.N.Kirpal, Judge, Supreme Court of India and Chairman, Supreme Court Legal Services Committee has a very long association with legal aid movement. Under the guidance and control of His Lordship, Supreme Court Legal Services Committee is providing legal aid to eligible persons in a very effective and meaningful way. Up to 31.12.99 Supreme Court Legal Services Committee has provided legal aid and assistance to 10,125 applicants.

'Nyaya Deep', the official newsletter of NALSA is promoting a healthy working relationship between legal services functionaries throughout the country and is proving immensely useful for exchange of views and sharing of ideas. Statistical information in regard to legal aid schemes and programmes is also included in this newsletter which is printed on quarterly basis. The editorials written by Hon. Mr. Justice R.C. Lahoti reflect the soul of 'Nyaya Deep' and measure the depth of the material included therein. These provide a window to the reader who in one glance through it can appreciate the content and purpose of the articles.

NALSA is laying great deal of emphasis on legal literacy and legal awareness campaign. Almost all the State Legal Services Authorities are identifying suitable and trustworthy NGOs through whom legal literacy campaign may be taken to tribal, backward and far-flung areas in the country. The effort is to publicise legal aid schemes so that the target group, for whom Legal Services Authorities Act has provided for free legal aid, may come to know about the same and approach the concerned legal services functionaries.

NALSA has also called upon State Legal Services Authorities to set up legal aid cells in jails so that the prisoners lodged therein are provided prompt and efficient legal aid to which they are entitled by virtue of section 12 of Legal Services Authorities Act, 1987. Hon. The Chief Justice of India His Lordship Hon. Dr. Justice A.S. Anand, while delivering the inaugural address at the Second Annual meet of the State Legal Services Authorities at Hyderabad, had pointed out that a very large number of undertrial prisoners lodged in jails are involved in petty criminal offences. His Lordship expressed his deep anguish and stated that these poor and under privileged prisoners are languishing in jails for fairly long period in spite of the fact that they are willing to plead guilty and the ultimate sentences which are likely to be passed against them will be far less than the period they are incarcerated as undertrial prisoners. His Lordship suggested that the CJMs/CMMs of the areas in which the District Jails are situated should hold their courts in jails once or twice in a month for disposing of the cases of such undertrial prisoners. In many States, the suggestion has already been implemented and the prisoners involved in petty and minor offences are getting substantial relief. A copy of news item reported in the Hindu daily is attached.

Sensitization of Judicial Officers in regard to legal aid schemes and programmes is also high on our agenda. His Lordship Hon. Mr. Justice S.P. Bharucha, Executive Chairman, NALSA while writing from the Desk of the Executive Chairman in Jan.,99 Issue of 'Nyaya Deep' had observed that not all judicial officers in the country are duly sensitized to Legal Services Schemes and programmes and as such are unable to guide poor litigants in this regard. His Lordship observed that Legal Services Authorities must ensure that Judicial officers are duly sensitized about the work NALSA is doing and its importance for the poor and illiterate.

In the last Chief Justices' Conference held at New Delhi, a resolution was passed to say that in the service records of the Judicial officers, their interest in legal aid programmes should be reflected and all the High Courts should take steps for sensitizing the Judicial officers in regard to legal aid programmes and schemes. Once all the judicial officers in the country get properly sensitized in regard to the relevance and importance of legal aid schemes they shall themselves start caring for the poor, backward and weaker sections of the society who are not in a position to engage their own counsel and look after their legal causes.

His Lordship Hon. Mr. Justice S.P. Bharucha, Executive Chairman, NALSA has repeatedly called upon State Legal Services Authorities to continue to hold Lok Adalats on old pattern so that the pace of the disposal of cases through Lok Adalats is not inhibited. Permanent and Continuous Lok Adalats are primarily aimed at settling disputes at pre-litigative stage and more contentious pending matters in District courts in which the parties can be motivated only by repeated sitting to arrive at settlement. Counselling and Conciliation Centers at Districts and Permanent Lok Adalats in Districts can be under same roof and can effectively function in unison. Most significant contribution by Legal Services Authorities to the administration of justice would be to settle legal disputes through Lok Adalats at pre-litigative stage so that the inflow of cases in our already over-burdened courts is reduced to the extent possible.

Most of the offices of the State Legal Services Authorities are now equipped with FAX machines, computers and E-mail facilities. These modern gadgets shall surely help legal services functionaries to act swiftly to provide legal aid and assistance to the eligible persons in a meaningful manner. .During the Chairmanship of the then Hon'ble Executive Chairman, Mr. Justice Altamas Kabir, the following innovative steps have been introduced in the functioning of NALSA:-

- A National Plan of Action to be executed by all State Legal Services Authorities and Calendar for activities was put in place.
- NALSA Regulations on Lok Adalat were published in the Gazette.
- NALSA Regulations on Free and Competent Legal Services were published in the Gazette of India.
- Legal Services to Trans-Gender people was taken up as a new project of NALSA
- Training of Para-Legal Volunteers and engaging them in the front offices of Legal Services Institutions and in the village level legal aid clinics were started.
- Legal Literacy Programmes in schools and colleges started in an organised manner with the assistance of the Department of Education in all States.
- School Legal Literacy Clubs set up in all High Schools under the State Legal Services Authorities in order to create legal awareness, obedience to law and spread the philosophy of rule of law amongst the younger generation.
- Legal Aid Clinics in all villages to be manned by Para-legal Volunteers and panel lawyers.
- Retainer lawyers are engaged at Taluk, District, High Court and Supreme Court level for handling legal aided cases.

NALSA is very sure that under the kind patronage and guidance of Hon. The Chief Justice of India and Hon. Executive Chairman, a vibrant nationwide network of Legal Services Authorities shall be made available to the people to provide free and competent legal services to the eligible persons. NALSA is keen to develop and promote a culture of conciliation instead of litigation in the country so that the citizens of this country prefer to resolve their disputes and differences across the table in a spirit of goodwill and brotherhood. NALSA also wishes to ensure that even the weakest amongst the weak in the country does not suffer injustice arising out of any abrasive action on the part of State or private person

## TYPES OF LEGAL SERVICES PROVIDED

Free Legal Services provided by NALSA/State Authority/District Authority:

1. Payment of court fee, process fees and all other charges payable or incurred in connection with any legal proceedings;
2. Providing Advocate in a legal proceedings;
3. Obtaining and supply of certified copies of orders and other documents in legal proceedings.
4. Preparation of appeal, paper book including printing and translation of documents in legal proceedings.

Eligible persons for getting free legal services

1. Women and children;
2. Members of SC/ST

3. Industrial workmen
4. Victims of mass disaster, violence, flood, drought, earthquake, industrial disaster.
5. Disabled persons.
6. Person in custody
7. Persons whose annual income does not exceed Rs. 1,00,000/-

Free Legal Services can be availed from:

1. Supreme Court Legal Services Committee,109, Lawyers Chambers, Supreme Court of India, New Delhi for Supreme Court Cases.
2. State Legal Services Authority
3. High Court Legal Services Committee situated at High Court Complex in every High Court for High Court cases.
4. District Legal Services Authority situated in the District Courts Complex in every District.

LOK ADALAT

Lok Adalat is a forum where the disputes/cases pending in the court of law or at pre-litigation stage are settled/compromised amicably. The Lok Adalat has been given statutory status under the Legal Services Authorities Act, 1987. Under the said Act, the award made by the Lok Adalats is deemed to be the decree of a civil court and is final and binding on all parties and no appeal lies before any court against its award.

**NATURE OF CASES TO BE REFERRED TO LOK ADALAT**

1. Any case pending before any court
2. Any dispute which has not been brought before any court and is likely to be filed before the court

Provided that any matter relating to an offence not compoundable under the law shall not be settled in Lok Adalat.

**HOW TO GET THE CASE REFERRED TO THE LOK ADALAT FOR SETTLEMENT**

A) Case pending before the court:

1. If the parties agree to settle the dispute in Lok Adalat or
2. One of the parties makes an application to the court or
3. The court is satisfied that that the matter is an appropriate one for settlement in Lok Adalat

B) Any dispute at pre-litigative stage

The State Legal Services Authority or District Legal Services Authority as the case may be on receipt of an application from any one of the parties to any pre-litigation stage matter refer such matter to the Lok Adalat for amicable settlement

Source- http://nalsa.gov.in/